Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

பொழிவு - 11
குவிப்பு - 06
பக்கங்கள் - 20
விலை ரூபா 30.00
ஜூன் - 2008
(ISSN 1800-2641)

"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/75/News/2008

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St., Mannar, Sri Lanka.
Telephone No : 023-2222377/ 060-2233276, Fax No - 023 - 2222377, E-mail - nesanmn@yahoo.com

# திருமலை – மட்டுநகர் துணை ஆயரின்
# ஆயர்த்துவ அருட்பொழிவு நிகழ்வு



திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு பொன்னையா யோசப் ஆண்டகை அவர்கள் கடந்த மே மாதம் 24ம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் துணைப் பேராலயத்தில் திருமலை மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டார். இந்நிகழ்வில் இலங்கையின் பல்வேறு இடங்களிலிருந்து ஆயர்கள், குருக்கள், துறவியர் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

புதிய ஆயரின் பணிசிறக்க செபத்தோடு கூடிய நல்வாழ்த்துக்களை மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.

## மன்னாப் பத்திரிகையின்
## அன்பான வாசகர்களுக்கு!

நாளுக்குநாள் அதிகரித்துவரும் விலையேற்றம் காரணமாக எமது பத்திரிகையின் விலையையும் அதிகரிக்கவேண்டிய இக்கட்டான நிலைக்கு எம்மை இட்டுச் சென்றுள்ளது. பல மாதங்களுக்கு முன்பே மன்னா பத்திரிகையின் விலையை நாம் அதிகரிக்கத் தீர்மானித்திருந்தாலும், எமது அன்பான மன்னா வாசகர்களுக்கு அது சிரமத்தை ஏற்படுத்தும் என்ற நிலையில் மன்னாவின் விலை அதிகரிப்பை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவராமல் இருந்தோம். ஆனால் மன்னாப் பத்திரிகையின் அச்சுப் பதிப்புச் செலவு, ஏற்றி இறக்கற் கூலி மற்றும் தபால் செலவு போன்றவை அசுரவேகத்தில் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு செல்வதால் தவிர்க்க முடியாத நிலையில் மன்னாப் பத்திரிகையின் விலையை இம்மாதத்திலிருந்து 30 ரூபாவாக அதிகரித்துள்ளோம். (தொடர்ச்சி 2ம் பக்கம்...)

## மன்னார் மகன் இங்கிலாந்து நாட்டில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்



மன்னார் மறைமாவட்டம் முருங்கன் பங்கு கன்னாட்டி புனித தோமையார் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரர் அருளானந்தம் தேவ கின்சிலி அவர்கள் கடந்த மே மாதம் 31ம் திகதி இங்கிலாந்து நாட்டில் வெஸ்ற்மினிஸ்ரர் மறைமாவட்டக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். மன்னார் மண்ணின் மைந்தரான இவரை மன்னார் இறைமக்கள் சார்பாக வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம். புதிய அருட்பணியாளர் பற்றிய குறிப்புக்களை 2ம் பக்கத்தில் பார்க்கலாம்.

## ஆயர் பணியில் வெள்ளிவிழா கொண்டாடும் கண்டி ஆயர் வியான்னி ஆண்டகை



AD MULTOS ANNOS!

கண்டி மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் கடந்த மே மாதம் 21ம் திகதி ஆயர் பணியில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்தார்.

இவர் தற்போது இலங்கை ஆயர் பேரவையின் தலைவராகவும் பணியாற்றுகின்றார். தமிழ் மொழியில் சிறந்த பேச்சாற்றல் உடைய இவர் மலையகத் தமிழ்க் கத்தோலிக்கரின் ஆன்மீக மேம்பாட்டுக்காக அதிக அக்கறை காட்டி உழைத்து வருபவர். தனது மறைமாவட்டக் குருக்கள் அனைவரும் கட்டாயம் தமிழ் படிக்க வேண்டும் என்ற கொள்கையுடையவர். அன்பிய வாழ்வைத் தனது மறைமாவட்டத்தில் ஊக்கிவிப்பவர். அருளாளர் யோசவ்வாஸ் மட்டில் அதீத பக்தியுடையவர். யோசவ்வாஸ் அடிகளாரைப் புனிதர் நிலைக்கு உயர்த்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும் வருபவர்.

இலங்கை நாட்டில் அமைதி ஏற்பட பல்லின, பல்சமூக மக்கள் மத்தியில் புரிந்துணர்வு ஏற்பட உழைத்து வருபவர். திருச்சபைச் சட்டங்களை கவனமாக மதித்து ஒழுகுபவர். சிறந்த மறையுரையாளர், இறையியலாளர்.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட வியான்னி ஆண்டகை அவர்களுக்கு எமது ஜூபிலி விழா நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் அன்போடு தெரிவித்து மகிழ்கின்றோம்.

## அருளாளர் அந்தோனியாரே!
## எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.



வட்டங்களுக்கு அப்பாலும் வணங்கப்படும் புனிதர்களுள் ஒருவர்தான் புனித அந்தோனியார். இவருடைய திருவிழா ஜூன் மாதம் 13ம் திகதி. புனித அந்தோனியாரின் திருவிழாவைக் கொண்டாடும் அனைத்து மக்களுக்கும் எமது மனம் கனிந்த திருவிழா நல்வாழ்த்துக்களை மகிழ்வோடு தெரிவிக்கின்றோம். பதுவைப் பதியாரின் பாதம் பணிந்து பாமாலை அளிக்கின்றோம்.

– பதிப்பாசிரியர் –

அந்தோனியாரே! அருள் புரிவீர் வந்தோம் பாதம் வரமருள்வீர்.

ஆதிக்கம் எல்லாம் அழிந்திடவே அனைவரும் சமத்துவம் அடைந்திடவே
சோதிப் பொருளை வேண்டிடுவாய் தூயவா உம்மை இறைஞ்சுகின்றோம்.

– வாகரை வாணன்

திருத்தந்தையின் தினத்திற்கான செய்தி
(யூன் மாதம் 08ம் திகதி)

## அனைவருக்கும், அனைத்தும் நீரே, எம் திருத்தந்தையே!

பாப்பிறை மறைபரப்புச் சபைகளின் தேசிய இயக்குனர் சப்ரமாது அடிகளார்



*'என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர். என் ஆடுகளை மேய்'* என ஆண்டவர் தமது தலைமைத் திருத்தூதரான பேதுருவுக்கு மும்முறை பணித்ததை நினைவுபடுத்திக்கொள்வோம். 'யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்து - கிறாயா?' என முதன் முறையாக பேதுருவிடம் ஆண்டவர் வினவினார். பேதுரு 'ஆம் ஆண்டவரே எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே' என்று மும்முறை பதிலளித்தார். அவ்வாறு கேட்டறிந்த பின்பே ஆடுகளை மேய்க்கும் மிகச்சிறப்பான பொறுப்பு வாய்ந்த பணியை பேதுருவிடம் ஒப்படைத்தார். கிறிஸ்துவுடைய திருச்சபையின் தலைமைக் குருவாகிய தூய பேதுருவும் அவரைத்தொடர்ந்து வருகிற திருத்தந்தையும் அனைவருக்கும் அனைத்துமாக மாறவேண்டும் என்பது இம்மூவித பணிப்புகளிலிருந்தும் எமக்கு நன்றாகத் தெளிவாகிறது.

கிறிஸ்து நிறுவிய திருச்சபையின் கண்காணும் தலைவராக இன்று இருப்பவர் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பராவார். திருச்சபையின் ஸ்தாபகரும், நல்லாயனுமாகிய இயேசுக்கிறிஸ்துவின் இடத்தில் இருக்கும் அவர் இன்று திருச்சபையின் நல்லாயன் ஆவார். "என் ஆடுகளை மேய்" என்ற கிறிஸ்துவின் பணிப்பில் அவர் எமது தலைவராகவும், வழிகாட்டியாகவும், எம்மை நேரிய வழியில் அழைத்துச் செல்பவராகவும், எமது தவறுகளைச் சுட்டிக்காட்டி எமக்கு ஊக்கமூட்டி எம்மைப் பாதுகாப்பவராகவும் உள்ளார். எம்மைச் சரியான வழியில் இட்டுச்செல்ல அவர் எடுக்கும் முயற்சிகளாக அவரது பொறுப்புவாய்ந்த சுற்றுமடல்கள் ***"அன்பே கடவுள்" "கிறிஸ்தவ நம்பிக்கை"*** போன்றவை அமைகின்றன.

"தூய தந்தையே, நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்" (யோவான் 17:11b) என்ற இயேசுக் கிறிஸ்துவின் குருத்துவ மன்றாட்டில் விசேடமாக இயேசுக்கிறிஸ்து மன்றாடிய மன்றாட்டு இது. எனவே எல்லாம் வல்ல இறைவனின் வல்லமையோடு இயேசுக்கிறிஸ்துவின் இம்மன்றாட்டை நிறைவேற்றுவது திருத்தந்தையின் இன்றைய பொறுப்பாகும்.

அனைத்துலகிற்கும் இறையன்பை எடுத்துரைக்கவும், அனைத்து மக்களையும் இறையன்பில் ஒன்றுசேர்க்கவும், தீமையிலிருந்து பாதுகாக்கவும், அனைவரையும் இறைவனிடம் அழைத்துச் செல்லவும் திருத்தந்தை முயற்சி செய்கின்றார். எனவே இன்று திருத்தந்தையின் நாளைச் சிறப்பிக்கும் நாம் அனைவரும் அவரின் குரலுக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து அவர் காட்டும் வழியை ஏற்றுக்கொள்ளுவோம். அவருக்காகத் தினமும் செபிப்போம்.

## சிறுவர்களும் வளர்ந்தோர்களும் விசுவாசத்தில் தொடர் பயிற்சிபெற வேண்டும்

உலக அழைத்தல் செப நாள் செய்தியில் திருத்தந்தை



கிறிஸ்துவினால் திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை கிறிஸ்தவ குழுமங்கள் நிறைவு செய்யும் முகமாக சிறுவர்களுக்கும், வளர்ந்தோர்களுக்கும் விசுவாசத்தில் தொடர் பயிற்சியை வழங்குவதிலிருந்து தவறக்கூடாது என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ற் ஏப்ரல் 13ம் நாள் விடுத்த 45வது உலக அழைத்தல் செப நாளுக்கான தனது விசேட செய்தியில் குறிப்பிட்டார்.

"அர்ப்பணமுள்ள மறையறிவிப்பின் மட்டில் பொறுப்பு மிக்கவர்களாகவும் உலகின் ஏனைய மக்களுடன் ஒருங்கிணைந்தவர்களாகவும் வாழ இறைமக்களுக்குப் பயிற்சியளித்தல் அவசியம். குருத்துவப் பணிக்கும் அர்ப்பண வாழ்வுக்குமான அழைத்தல்கள் நன்கு வளப்படுத்தப்பட்ட ஆன்மீக விளைநிலத்திலேயே செழித்து வளரும் என்று திருத்தந்தை மேலும் கூறினார்.

**மன்னா பத்திரிகையின்..** *(1ம் பக்கத் தொடர்)*

எனவே மன்னா பத்திரிகை அபிமானிகள், மன்னா பத்திரிகையை விநியோகிக்கும் எமது அன்பான விநியோகஸ்தர்கள் இவ்விலை அதிகரிப்பைக் கவனத்திற் கொண்டு தொடர்ந்து எம்மோடு ஒத்துழைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம். இவ்விலை அதிகரிப்பைத் தொடர்ந்து ஆண்டுச் சந்தா இனிமேல் 600 ரூபாவாக இருக்கும். ஜூன் மாதத்திலிருந்து புதிதாகச் சந்தாதாரராகச் சேர்பவர்கள் அல்லது சந்தாவைப் புதுப்பிப்பவர்கள் இந்நடைமுறையைக் கருத்திற் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றோம். வெளிநாட்டு ஆண்டுச் சந்தாவில் மாற்றம் இல்லை. உங்கள் அன்பான ஒத்துழைப்பிற்கு நன்றி கூறுகின்றோம். - மன்னா நிர்வாகம் -



# வாசகர் எண்ணங்கள்

## வெளிநாடெல்லாம் சிறகடிக்கும் மன்னாவே!



மன்னாரில் பூக்கும் மன்னாவே!
கிறிஸ்தவர்களின் மனம் கவர்ந்த மன்னாவே,
மறையறிவை வளர்க்கும் நீ,
மாதத்தில் ஒரு தடவை மலருகின்றாய்.
வெளிநாடெல்லாம் சிறகடிக்கும் மன்னாவே,
நீ பத்து வயதை எட்டிப் பிடித்துவிட்டாய்.
நீ வாழ்க, வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*பா. சுரேன்,*
*சென்றியரசர் ஆலயம், நீர்வேலி, யாழ்ப்பாணம்.*

## முத்தாகப் பத்தாண்டு மன்னாரில் சொத்தாய் நீ!

அன்பு மகன் இறையேசு சேதிகூறி அருவியானாய்
அன்னைமரி புகழ்தான் பாடி ஆறாகப் பெருக்கெடுத்தாய்
அனுதினமும் உன்னை நாம் தேடியே ஓடச்செய்தாய்
அவனி வாழும் நம்மவரை ஏங்கிடவே வைத்திட்டாய்.

ஆண்டவன் துணையுடன்தான் பத்தாண்டு பறந்திட்டாய்
ஆன்மீக பசிதீர்த்து உரமாக நின்றிட்டாய்
ஆன்மபலம் மிளிர்ந்திடவே அழகாக ஜொலித்திட்டாய்
ஆலம் விழுதாக எம் மறையைத் தாங்குகின்றாய்.

இறைவன் அருளுடன்தான் இன்னல்கள் தீர்த்திட்டாய்
இறைபணி ஆற்றுவோர்க்கு ஆசிபல பொழிந்திட்டாய்
இருளில் நாம் விழுந்திடாமல் ஒளியை நீ வீசுகின்றாய்
இதயங்கள் பலகோடி வாழ்த்துகிறோம் உன்னையே!

ஈடில்லா செய்திகளை தாங்கித்தான் வந்திடுவாய்
ஈட்டிபோல் எம்புத்தியையும் தீட்டியே வைத்திட்டாய்
ஈரமான மண்ணில்தான் வான்ஏறி வந்திடுவாய்
ஈசன் பாதம் பணிந்து நாம் நன்றிகளைக் கூறுகின்றோம்.

புலம் பெயர் மக்கள் நாம் உன் வரவுக்காகக் காத்திருக்க
உலகமெல்லாம் பரந்து வாழும் ஊர்மக்கள் உனைத்தேட
பத்தாண்டு சேவைசெய்த முத்தான மன்னாவே
யாவரும் நாம் வாழ்த்துகிறோம் பல்லாண்டு பொழிகவென்று.

*ஆர். பற்றிமா நவறோஸ், டென்மார்க்*

## இந்து, முஸ்லீம் மதத்தினருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கும் மன்னா

வணக்கத்துக்குரிய அருட்தந்தை அவர்கட்கு!

கடந்த 2008 பெப்ரவரி மன்னா இதழில் 17ம் பக்கத்தில், "மருத்துவப் பொழிவு" எனும் பிரிவில் எனது ஆக்கமான *"சித்த மருத்துவப் பார்வையில் திருக்குறளின் மருத்துவ அதிகாரம்"* எனும் தலைப்பின்கீழ் எனது படத்துடன் தரமான முறையில் எனது ஆக்கம் வெளிவந்ததையிட்டு நான் பெருமை கொள்கின்றேன். இதற்காக மன்னா பத்திரிகையாசிரியரான தங்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"மன்னா" ஒரு கத்தோலிக்கப் பத்திரிகை என்றாலும் அதில் இந்து மதத்தினருக்கும், முஸ்லீம் மதத்தினருக்கும் சந்தர்ப்பம் கொடுத்து அவர்களுக்கு ஊக்கம் அளித்து வருவதற்காக மன்னாவை நிச்சயம் பாராட்டித்தான் ஆகவேண்டும். பத்திரிகை உலகில் மன்னா "சர்வதேச மன்னனாகத்" தடம்பதிக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டுதல் செய்கின்றேன்.

இலைமறைவாக இருக்கின்ற எம்மைப் போன்றவர்களை வெளிச்சத்திற்குக் கொணர்ந்த மன்னா பத்திரிகைக்கும் அதன் ஆசிரியர் அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*மன்னா வாசகன் - மருத்துவர் எஸ். லோகநாதன்,*
*'மரகதம்' கிளினிக், 360, அயிலி் படமாளிகை றோட்,*
*மூர்வீதி, மன்னார்.*

## மன்னாவே நீ வளர்க!



1ம் வருடம் - முழுவண்ண நிலவாய் மலர்ந்து
2ம் வருடம் - இவ்வுலகம் வியக்க எழுந்து
3ம் வருடம் - முத்தான கருத்துக்கள் தந்து
4ம் வருடம் - நாம் அனைவரும் அறிந்திட
5ம் வருடம் - ஐயம் இன்றி எடுத்துரைத்து
6ம் வருடம் - ஆத்மீக இறை சிந்தனையை
7ம் வருடம் - எல்லோர் மனதிலும் பதித்து
8ம் வருடம் - ஏணிபோல் உயர்ந்து
9ம் வருடம் - ஒய்யாரமாய் நடைபயின்று
10ம் வருடம் - வளர்ந்த மன்னாவே,
நீ பவள விழாவும் கண்டு பல்லாண்டு வளர்க

*எஸ். ஏ. மொறிஸ், கல்மடு, வவுனியா*

## பிலிப்பைன்ஸ் நாட்டின் அமைதிக்காக துவிச்சக்கர வண்டிப் பயணத்தைத் தொடரும் குரு

உயிருக்கான மாண்பை அளித்து, அதற்குரிய மரியாதையைப் போதித்து அமைதியை நிலைநாட்டுவதற்கான செயற்பாடுகளில் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக இரட்சகர் சபையைச் சார்ந்த கத்தோலிக்க குரு ஒருவர் பிலிப்பைன்ஸ் நாட்டைச்சுற்றி 5000 கிலோ மீற்றர் துவிச்சக்கர வண்டிப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இரட்சகர்சபைக் குருவான அருட்தந்தை அமாடோ பிக்காடல் பிலிப்பைன்சைச் சுற்றி வரும் தனது 56 நாள் அமைதிக்கும், அன்புக்குமான சுற்றுப்பயணத்தை உயிர்ப்பு விழாவுக்கு மறுநாள் திங்கள் ஆரம்பித்தார். இவர் தனது பயணத்தின்போது ஒவ்வொரு இரவும் ஒரு பங்குமனையில் தங்குவதான தனது திட்டத்தைப் பேராயர் இல்லத்தில் வெளியிட்டார். ஒவ்வொரு பங்கிலும் அவர் திருப்பலி ஒப்புக்கொடுத்து வாழ்வையும் அமைதியையும் பற்றி எடுத்துரைப்பார். தனது இந்தச் சுற்றுப் பயணத்தின் மூலம் உயிருக்கான பெறுமதியும், புனிதத்தன்மையும் தூக்கியெறியப்படும் ஒரு நாட்டில் நிலவும் வன்செயல் மரணக் கலாச்சாரத்துடன் போராடி வெல்ல முடியும் என்று அவர் எண்ணுகின்றார்.

பேராயர் பெர்னாண்டோ கபாலா தன்னை ஆசீர்வதித்த பின்னர், "நான் தனிமையாக ஓரளவு தூரத்திற்குச் செல்வேன். பின்னர் நான் ஒவ்வொரு நகரத்தையும் கடந்து செல்லும்பொழுது அங்குள்ள துவிச்சகர வண்டிக்காரர் என்னுடன் இணைவர்" என்று கூறினார் அருட்தந்தை பிக்காடல். 53 வயதான அருட்தந்தை பிக்காடல் தானே வன்செயலுக்குப் பலியானவர். 1973 – 1974ம் ஆண்டு காலகட்டத்தில் ஜனாதிபதி பேர்டினண்ட் மாக்கோஸ் உடைய ஆட்சியின்போது இராணுவச் சட்டம் அமுலிலிருந்த காலத்தில் ஏழு மாதங்கள் அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். அப்பொழுது அவர் படையினரால் அனுபவித்த சித்திரவதைகளை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்தார்.



அப்பொழுது அவர் ஒரு குருத்துவக் கல்லூரி மாணவன். அவ்வேளை நீதிக்கும் அமைதிக்குமான அப்போஸ்தலத் - துவப் பணியில் ஈடுபட்ட அதிகளவான திருச்சபைப் பணியாளர்கள்மேல் அவர்கள் பொதுவுடமைக் கலகக்காரருடன் ஒத்துணர்வு கொண்டவர்கள் என சந்தேகம் கொண்டனர்.

இவர் தனது சுற்றுப்பயணத்தின்போது பிலிப்பைன்சின் பொதுவுடமைக் கட்சியின் "புதிய மக்கள் இராணுவத்தையும், மொறோ இஸ்லாமிய விடுதலை இயக்கத்தையும், பிலிப்பைன்சின் இராணுவத்தினரையும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும்படி அழைப்பு விடுப்பார். மற்றும் தீவிரமான அமைதி முன்னெடுப்புகளில் ஈடுபடும்படியும் அதாவது அமைதி வலயங்களை ஏற்படுத்தி கட்சி மனப்பான்மையைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்படி குடிமக்களுக்கும் அழுத்தம் கொடுக்கப் போவதாகக் கூறுகின்றார்.

## புதிய குரு தேவகின்சிலி அடிகளின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

அருட்பணியாளர் அ. தேவகின்சிலி அவர்கள் மன்னார் மறைமாவட்டம் முருங்கன் பங்கு கன்னாட்டி புனித தோமையார் ஆலயத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. ஆரோக்கியம் அருளானந்தம் மற்றும் திருமதி சந்தியோகு அன்னம்மா தம்பதிகளின் புதல்வனாக 07.02.1971ல் பிறந்தார். இவருடைய பெற்றோர் தற்போது பெரியமுறிப்பில் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தனது ஆரம்பக் கல்வியை மன்/ பெரியமுறிப்பு அ.த.க. பாடசாலையிலும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் கற்றார். 1986ம் ஆண்டு யாழ் புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் காலடி பதித்த இவர் க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரக் கல்வியை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்றார். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக கலைமாணிப் பட்டப்படிப்பை (B.A) மேற்கொண்டார். தொடர்ந்து தென்னாபிரிக்கா நாட்டில் தனது மெய்யியல் கல்வியைக் கற்று டிப்ளோமா பட்டத்தைப் (Diploma in Philosophy) பெற்றுக்கொண்டார். பின்னர் இங்கிலாந்து நாட்டில் இறையியல் கல்வியைக் கற்று இறையியல்மாணிப் பட்டத்தையும் (S.T.B) இலண்டன் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் (M.A) பெற்றுக்கொண்டார்.

கடந்த மே மாதம் 31ம் திகதி இலண்டனில் உள்ள வெஸ்ற்மினிஸ்ரர் மறைமாவட்டப் பேராலயத்தில் வெஸ்ற்மிஸ்ரர் பேராயர் கர்தினால் கோர்மக் மேர்வி ஓ கோனர் (Cardinal Cormac Murphy – O' Connor) ஆண்டகை அவர்களால் இவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் தனது முதல் திருப்பலியை யூன் மாதம் 1ம் திகதி இலண்டனில் உள்ள வைற் சிற்றி புனித பற்றிமா ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார்.

## வடக்கு மற்றும் தெற்குத் திருச்சபைகளின் சங்கமம்

# நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வைக் கண்டறிவதற்கான வடக்குத் தெற்குக் குருக்களுக்கிடையிலான உரையாடல்

**நீடித்து நிலைக்கக்கூடிய அமைதிக்கான தீர்வைக் கண்டறிவதற்கான உரையாடல் நிகழ்வு ஒன்று கடந்த மார்ச் மாதம் 28ம் திகதி வடக்கு தெற்கு கத்தோலிக்க குருக்களுக்கிடையே இலங்கை கறிற்றாஸ் செடெக் நிறுவனத்தில் நடைபெற்றது. செடெக் ஊடாக அமைதிப் பணியை முன்னெடுத்துச்செல்லும் குழுவினரின் ஏற்பாட்டில் இந்த ஒன்றுகூடல் இடம்பெற்றது. இக்குழுவில் நான்கு ஆயர்கள் . வடக்கிலிருந்து இருவர் - தெற்கிலிருந்து இருவர் மற்றும் செடெக் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.**

ஐந்து ஆயர்கள் உட்பட 21 குருக்கள் இந்த உரையாடல் - ஒன்றுகூடல் நிகழ்வில் பங்கெடுத்தனர். பங்குகொண்டவர்களில் முன்னை நாள் பேராயர் அதிமேதகு நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ, மேதகு ஆயர் ஹறல்ட் அன்ரனி பெரேரா, மேதகு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், மேதகு ஆயர் நோபட் அன்றாடி, மேதகு ஆயர் கிளீற்றஸ் சந்திரசிறி பெரேரா மற்றும் இலங்கை கறிற்றாஸ் - செடெக் நிறுவனத்தின் தேசிய இயக்குநர் அருட்திரு டேமியன் பெர்னாண்டோ, சமாதானப் பணியக இயக்குனர் அருட்திரு. அன்ரனி சிறில் ஆகியோர் அடங்குவர்.

ஆரோக்கியமான சூழலில் உரையாடல்கள் இடம்பெற்றன. கருத்துக்கண்ணோட்டங்கள், தகவல்கள், குருக்களின் அனுபவங்கள் ஆகியன பரிமாறப்பட்டன. இறுதியில் நீண்டகால, குறுகியகாலத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. முன்னையநாள் பேராயர் அதிமேதகு நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை இந்த உரையாடல்களை நெறிப்படுத்தினார்.

ஒன்றுகூடலின்போது ஆயர்களும் வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய பிரதேசங்களிலிருந்து வருகைதந்திருந்த குருக்களும் தாம் ஒரே திருச்சபையைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் தமக்கிடையே ஒரு சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்தும் முகமாக தமது சொந்த இடங்களின் நிலைமைகளையும், தாம் முகம் கொடுத்த சவால்களையும் தமக்கிடையே பகிர்ந்து கொண்டனர். நீதி, சமாதான, மனித முன்னேற்றத் தேசிய ஆணைக்குழுவின் தலைவர் மேதகு ஆயர் ஹறல்ட் அன்ரனி பெரேரா இங்கு ஏடுக்கப்பட்ட முக்கியமான தீர்மானங்கள் பற்றி கத்தோலிக்க ஆயர் மன்றத்திற்கு எடுத்துரைப்பார். இந்தக் குழு அடிக்கடி கூடுவதாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. கடந்த காலங்களில் மிகவும் அரிதாகவே இதுபோன்ற உரையாடல்கள் இடம்பெற்று வந்த நிலையில் இம்முயற்சி பாராட்டப்படவேண்டியதே.



## உலகில் கத்தோலிக்கர் இரண்டாம் இடத்தில்

உலகில் றோமன் கத்தோலிக்க மதத்தினரே அதிகளவானோர் என்ற பெருமை உள்ளது. ஆனால் அப்பெருமை இன்று இல்லாமல் போய்விட்டது. அந்த இடத்தை முஸ்லிம்கள் கைப்பற்றியுள்ளனர் என்று வத்திக்கான் செய்திகள் தெரிவித்துள்ளன.

2006ஆம் ஆண்டு கணிப்பின்படி றோமன் கத்தோலிக்கர் தொகை 17.4 சதவீதமாகவும் முஸ்லிம்களின் தொகை 19.2 சதவீதமாகவும் உள்ளன எனத் தெரியவருகிறது. கத்தோலிக் - கர்களோடு அனைத்து கிறிஸ்தவர்களையும் கருத்தில் கொள்ளும்போது அது உலக சனத்தொகையில் 33 சதவீதமாகவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சகோதரியை மதம் மாற அனுமதித்த தாயை படுகொலை செய்த தனயன்

பாக்கிஸ்தான் லாகூரில், தனது சகோதரியை இஸ்லாமிய மதத்திற்கு மாறவும் முஸ்லிம் ஒருவரை திருமணம் செய்யவும் அனுமதித்த தனது தாயாரை கிறிஸ்தவரான மகனொருவர் படுகொலை செய்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முல்தான் என்ற முஸ்லிம் இளைஞரை திருமணம் செய்த தனது சகோதரியான நுஸ்ரத் பிபிக்கு ஆதரவளித்த தனது தாயாரான நஸிரனை ஷஹ்பாஸ் என்ற இந்நபர் கொலை செய்ததாக நகர பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவ தினம் முதல்நாள் வீட்டிற்குச் சென்று தனது மகளைப் பார்த்துவிட்டு வந்த நஸிரனுக்கும் ஷஹ்பாஸிங்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் அதனையடுத்து அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## மன்னார் இந்துமத பிரதமகுரு மனோகரக் குருக்களுக்கு 'தேசபந்து' விருது

மன்னார் மாவட்ட இந்துமத பிரதம குரு சிவ...சபா மனோகரக் குருக்கள் கடந்த மார்ச் மாதம் 23ம் திகதி இலங்கையின் அதிகௌரவ விருதான 'தேசபந்து' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அகில இலங்கை சமாதான நீதிவான்களுக்கான மனித உரிமைகள் அமைப்பின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நீர்கொழும்பு, தாஜ் எயர்போர்ட் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளருமான உயர்திரு. திஸ்ஸ அத்தநாயக்காவினால் இவ்விருது இவருக்கு வழங்கப்பட்டது.

மனோகரக் குருக்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக இருக்கும் அதேவேளை 'சிவாச்சாரிய திலகம்,' 'கமலபூஷணம்,' 'தேச கீர்த்தி,' 'தேச சக்தி' ஆகிய விருதுகளையும் ஏற்கெனவே பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



1951ம் ஆண்டு செப்ரம்பர் 06ம் திகதி யாழ்ப்பாணம் கரவெட்டியில் பிறந்த இவர் சேலம் உடையார்பட்டியில் உள்ள சமஸ்கிருத கலாசாலையில் சமஸ்கிருதப் பட்டப்படிப்பை மேற்கொண்டார். 1970 தொடக்கம் 1985 வரை மன்னார் சித்திவிநாயகர் ஆலயப் பிரதம குருவாகவும் 1985 தொடக்கம் 1990 வரை மன்னார் நகர இந்து ஆலயங்களின் பிரதம குருவாகவும் 1990 தொடக்கம் 2003 வரை மன்னார் தீவு இந்து ஆலயங்களின் பிரதம குருவாகவும் பணியாற்றினார். 2003 தொடக்கம் இன்றுவரை மன்னார் மாவட்ட இந்துமத பிரதம குருவாகவும் மற்றும் 1990 தொடக்கம் இன்றுவரை கல்பிட்டி நகர இந்து ஆலயங்களின் விசேட பிரதம குருவாகவும் பணிபுரிந்து வருகின்றார்.

இவர் பல்வேறு பொது அமைப்புக்களில் போசகராகவும், அங்கத்தவராகவும் இருந்து மக்கள் பணியிலும் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியப் போசகராகவும், மன்னார் மாவட்ட சமய சகவாழ்வு நிறுவனத்தின் போசகராகவும் இருக்கின்றார்.

இவர் மன்னார் மக்களின் உயர்வுக்காக பல்வேறு வழிகளில் தன் காத்திரமான பங்களிப்பைச் செய்து வருகின்றார். எப்பொழுதும் புன்னகை பூத்த அருள் பொழியும் முகத்தோடு வலம் வரும் இவர் மன்னார் மக்கள் அனைவராலும் இன, மத, பேதமின்றி அன்புசெய்யப்படும் ஓர் சமயப் பெரியார் ஆவார்.

அனைவரையும் மதித்து ஒழுகும் நற்பண்பாளராகிய இவரை மன்னார் மறைமாவட்ட கிறிஸ்தவ மக்கள் சார்பாக வாழ்த்திப் பாராட்டுவதில் மன்னா பெருமை கொள்கின்றது.

## மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான புதிய பணிப்பொறுப்புக்கள்

| பெயர் | பணிப்பொறுப்பு |
|---|---|
| அருட்பணியாளர் பி. யூட் ஞானறாஜ் குரூஸ் | - தற்காலிக பங்குத்தந்தை, ஆட்காட்டிவெளி |
| அருட்பணியாளர் ஏ. ஆரோக்கியம் | - தற்காலிக பங்குத்தந்தை, பண்டிவிரிச்சான் மற்றும் தட்சனாமருதமடு. |
| அருட்பணியாளர் ஜே. ஜெஸ்லி ஜெகானந்தன் | - உதவிப்பங்குத்தந்தை, கள்ளியடி |
| அருட்பணியாளர் ஏ யூட்ஸ் முரளிதரன் | - உதவிப்பங்குத்தந்தை, மன்னார் பேராலயம் |
| அருட்பணியாளர் எ. லக்ஸ்ரன் டி சில்வா | - உதவிப்பங்குத்தந்தை, வங்காலை |
| அருட்பணியாளர் எ. மரியதாசன் குரூஸ் | - உதவிப்பங்குத்தந்தை, மன்னார் பேராலயம் |
| அருட்பணியாளர் எம். செல்வநாதன் பீரிஸ் | - உதவிப்பங்குத்தந்தை, வவுனியா |
| அருட்பணியாளர் டெஸ்மன் குலாஸ் | - முருங்கன் மறைக்கோட்ட முதல்வராகத் தொடர்ந்து பணியாற்றுவார். |

## பாதுகாவன் பத்திரிகைக்கு புதிய ஆசிரியர்

யாழ் மறைமாவட்டத்தின் முதுபெரும் கத்தோலிக்க வாரப்பத்திரிகையான பாதுகாவலன் பத்திரிகையின் புதிய ஆசிரியராக அருட்பணியாளர் எஸ். எயின்சிலி றொஷான் அடிகளார் யாழ் ஆயர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.



இவர் தற்போது யாழ் ஆயரின் அந்தரங்கச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். அண்மையில் இவர் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப் பற்றும், மொழியாற்றலும் கொண்ட றொஷான் அடிகளார் பாதுகாவலன் பத்திரிகையை சிறப்பாக வெளிக்கொணர்வார் என நிச்சயமாக நம்பலாம். பத்திரிகைத் துறையில் காலடி பதித்துள்ள அடிகளாரின் பணி சிறக்க சகோதர பத்திரிகையான மன்னா அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

## லாசாலியன் ஆங்கிலக் கல்வியகத்தில் சான்றிதழ் விழா



லாசாலியன் ஆங்கிலக் கல்வியகத்தில் (Lasallian English Academy) தமது கல்வியை நிறைவுசெய்த மாணவர்களுக்கான பிரியாவிடை வைபவமும் சான்றிதழ் வழங்கும் விழாவும் கடந்த ஏப்ரல் மாதம் 11ம் திகதி மன்னார் டிலாசால் இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட அன்பிய இயக்குனர் அருட்பணியாளர் ஏ. யூட் குரூஸ் அடிகளார் மற்றும் ஆங்கிலக் கல்வியகத்தின் இயக்குனர் அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் ஆகியோரும் கல்வியை நிறைவுசெய்து வெளியேறும் மாணவர்கள் சிலரையும் காணலாம்.

## மடுவை அமைதி வலயமாக்கக் கோரி மட்டக்களப்பு நகரில் உண்ணாவிரதம்

மடுப்பகுதியை புனித பிரதேசமாகவும் அமைதி வலயமாகவும் பிரகடனப்படுத்துமாறு கோரியும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் மாதாவின் திருச்சுரூபத்தை மீண்டும் மடுமாதா ஆலயத்திற்கு எடுத்துவருமாறு கோரியும் மட்டக்களப்பு நகரில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு கத்தோலிக்க அமைப்புக்கள் இணைந்து மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நடாத்திய இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் இந்து, சிங்கள மக்களும், பெருமளவிலான கத்தோலிக்க மக்களும் கலந்துகொண்டனர். மட்டக்களப்பு, திருமலை மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளையின் வழிகாட்டலில் இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.



### கத்தோலிக்க மாணவர்களுக்கான மாதிரி வினாவிடைகள்

மன்னா பத்திரிகையில் மேல் வகுப்பு கத்தோலிக்க மாணவர்களுக்கான கத்தோலிக்க பாட மாதிரி வினாவிடைகள் தொடர்ந்து வெளிவரவுள்ளன. எனவே பாடசாலை நிர்வாகத்தினர் கத்தோலிக்க மாணவர்கள் மன்னாவைப் பெற்றுப் பயனடைய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- பதிப்பாசிரியர்

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்



## இரண்டரை கிலோ மீற்றரை அமைதிவலயமாக்கும் பகிரங்க உறுதிமொழி கிடைத்தால் மட்டுமே

## மடுமாதா திருச்சுரூபம் மீண்டும் கொண்டுவரப்படும்

**- மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை -**

மடுமாதா திருத்தலத்திலிருந்து இரண்டரை கிலோமீற்றர் பகுதியை அமைதி வலயமாக்குவதாக பகிரங்க உறுதிமொழி கிடைத்தால் மட்டுமே மடுமாதா திருச்சுரூபம் மீண்டும் மடுவிற்குக் கொண்டுவரப்படுமென மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார். அதேநேரம் மடுமாதா தேவாலயப்பகுதியின் நிலைமையை நேரில் கண்டறிந்துவர குருமுதல்வரை அனுப்பி வைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மடுமாதா தேவாலயம் தொடர்பாக ஆயர் மேலும் கூறியதாவது. மடுமாதா தேவாலயப் பகுதியிலிருந்து புலிகள் வாபஸ் பெற்றுவிட்டனர். இதன்பின்னர் படையினர் அங்கு சென்றிருப்பதாக எனக்கு அறிவிக்கப்பட்டது. நிலைமையை நேரில் கண்டறிந்து வருவதற்காக கடந்த ஏப்ரல் 26ம் திகதி குருமுதல்வர் விக்டர் சோசை அடிகளாரை அனுப்பி வைத்தேன். மடுமாதாவின் திருச்சுரூபத்தை மீண்டும் கொண்டுவந்து தேவாலயத்தில் வைப்பதில் எமக்கு எவ்விதமான பிரச்சினையும் இல்லை.

மடுமாதா தேவாலயத்தைச் சுற்றி இரண்டரை கிலோ மீற்றரை அமைதி வலயமாகப் பிரகடனப்படுத்துமாறு படையினரிடமும், புலிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளோம். இதனை ஏற்றுக்கொண்டதாக இருதரப்பினரும் பகிரங்கமாக உறுதிமொழி அளிக்கவேண்டும். குறித்த அமைதி வலயத்தில் எவரும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. இவ்வாறான பகிரங்க உறுதிமொழி கிடைக்கும் பட்சத்தில் திருச்சுரூபத்தை மடுமாதா தேவாலயத்திற்கு கொண்டு வந்து திருநிலைப்படுத்த முடியும் என ஆயர் தெரிவித்தார்.



**பங்குச் செய்திகளை அனுப்புவோரின் கவனத்திற்கு**

*பங்குச் செய்திகளை அனுப்புவோர் பங்குகளில் இடம்பெறும் மிக முக்கியமான, அபூர்வமான செய்திகளை மட்டுமே அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம். வருடா வருடம் நடைபெறும் ஆலயத் திருவிழா, உறுதிப்பூசுதல், முதல்நன்மை விழா, திருப்பாலத்துவ சபை விழா போன்ற வழமையான செய்திகளை அனுப்ப வேண்டாம் எனவும் அன்போடு கேட்டுக் கொள்கின்றோம். (பதிப்பாசிரியர்)*

## மடு மாதா ஆலயத்தின் புனிதத்தன்மையினை புலிகளும் இராணுவத்தினரும் மதித்துள்ளனர்

**நேரில் பார்வையிட்ட குருமுதல்வர் கூறுகிறார்**

மடு ஆலயத்திலிருந்து பரிபாலகர்கள் வெளியேறிய பின்னர் ஆலய வளாகத்தை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த புலிகளும், படையினரும் ஆலயத்தின் புனிதத் தன்மையை மதித்துள்ளனர் என்று மடு ஆலயத்துக்கு நேரடியாகச் சென்று திரும்பியுள்ள மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் தெரிவித்தார்.

மடு அன்னையின் பிரதான ஆலயத்திற்கு இடப்பக்கமாக அமைந்துள்ள திருஇருதய ஆலயம் முற்றாகச் சேதம் அடைந்துள்ளதுடன் குருக்கள் வசிக்கும் இடமும் சேதமாகியுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் பணிப்பின் பேரில் மடு ஆலயத்திற்கு ஏப்ரல் மாதம் 26ம் திகதி சனிக்கிழமையன்று சென்று திரும்பிய அவர் ஆலயப்பகுதியின் நிலை குறித்து மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஆலயத்தை அடைந்தோம். நான் சென்றதும் பூட்டப்பட்டிருந்த தேவாலயக் கதவைத் திறக்கும்படி படையினர் என்னைப் பணித்தனர். குருக்கள் சென்றபோது பூட்டப்பட்ட அந்தக் கதவை நான் திறந்ததும் ஆலயத்தை முத்தம் செய்து சில நிமிடங்கள் செபித்தேன். அந்நேரத்தில் என்னுடன் ஆலயத்திற்குள் வந்த வன்னிப்பிராந்திய தளபதி மற்றும் மடுக்களமுனைத் தளபதி சேனரத் பண்டார ஆகியோரும் எனக்குப் பின்னால் வணக்கம் செலுத்தினர். பின்னர் கோவிலைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். மடு அன்னையின் பிரதான ஆலயத்திற்கு இடதுபக்கமாக அமைந்துள்ள திருஇருதய ஆண்டவரின் சிற்றாலயம் முற்றாக சேதமாக்கப்பட்டிருந்தது. நற்கருணை நாதர் சிற்றாலயத்திலும் ஷெல் வீழ்ந்து ஜன்னல், கதவுகள் எல்லாம் பாதிப்படைந்திருந்தன. மடு அன்னைக்கு பக்தர்கள் மெழுகுதிரி ஏற்றும் இடமும் ஷெல் வீச்சு காரணமாக முற்றாக சேதமடைந்திருந்தது. அத்துடன் குருக்கள் தங்கும் இடமும் ஷெல் வீச்சு காரணமாக பாதிப்படைந்திருந்தன. குருக்கள் வெளியேறியபின் விட்டுச்சென்ற பொருட்களை சரிபார்ப்பதற்காக என்னுடன் எடுத்துச் சென்ற விபரப்பட்டியலுடன் பொருட்களைச் சரிபார்த்தேன். அதன்படி அங்கு சகல பொருட்களும் வைத்த மாதிரியே இருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

அங்கே ஒரு முக்கியமான விடயத்தையும் கவனித்தேன். பூட்டப்பட்டிருந்த கோயிலின் சகல கதவுகளிலும், யன்னல்களிலும் *போராளிகளின் கவனத்துக்கு* என அறிவித்தல் போடப்பட்டிருந்தது. அதாவது ஆலயத்துக்கான மதிப்பு பொருட்களின் பாதுகாப்பு விடயமாகவே அந்த அறிவித்தல்கள் அமைந்திருந்தன. இதேபோன்று இராணுவமும் தாங்கள் அவ்விடத்திற்குச் சென்றதும் கோவிலுக்குள் செல்லாது போராளிகள் போன்று ஆலய புனிதத்துவத்தையும் பொருட்களையும் மதித்துள்ளனர். ஆலயத்தின் பிரதான இடங்களை மட்டும் பார்வையிடக்கூடியதாக இருந்தது. எல்லா இடங்களையும் முழுமையாகச் சுற்றிப்பார்க்க முடியவில்லை. காரணம் சில நேரம் கண்ணிவெடிகள் இருக்குமோ என்ற ஐயப்பாடுகள் பாதுகாப்பு படையினரிடம் இருந்ததாலேயே முழுமையாக ஆலய வளாகத்தை சுற்றிப்பார்க்க முடியவில்லை. சுமார் ஒருமணி நேரம் அங்குநின்று பார்வையிட்ட பின்னர் மன்னார் திரும்பினோம்.

### தேசிய கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவின் உப சொலாளராக மன்னார் மறைமாவட்டப் பிரதிநிதி யூட்பிரகாஸ்

கடந்த வைகாசி மாதம் 16,17,18ம் திகதிகளில் தேசிய கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவின் அரை ஆண்டு பொது ஒன்றுகூடல் (Bi – Annual General Meeting) கொழும்பு மறைமாவட்டத்தின் அனுசரனையுடன் கொழும்பு ஜாஎலயில் உள்ள தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெற்றது.

இவ்வொன்றுகூடலில் மட்டக்களப்பு, திருகோணமலை மறைமாவட்டம் தவிர்ந்த ஏனைய அனைத்து மறைமாவட்டங்களும் பங்கெடுத்தன. இதன்போது மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் புதிய இயக்குனர் அருட்தந்தை யேசுராஜா அடிகளார் முதல்முறையாக கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வொன்றுகூடலில் 2008 – 2010 ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குரிய தேசிய நிர்வாகத்திற்கான தெரிவு இடம்பெற்றது. இவ்வேளையில் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவின் தலைவர் செல்வன். அன்ரனைனஸ் யூட் பிரகாஷ் தேசிய ஆணைக்குழுவின் உப செயலாளராக நியமிக்கப்பட்டார். மேலும் இவர் எதிர்வரும் யூலை மாதம் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் தலைமையில் அவுஸ்ரேலியாவில் நடைபெற உள்ள உலக இளைஞர் தின விழாவில் மன்னார் மறைமாவட்டம் சார்பாக கலந்துகொள்ள இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் இலங்கைக் குழுவின் ஆங்கில மொழி நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் (Announcer) இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**தேசிய இளைஞர் ஆணைக்குழுவின் புதிய நிர்வாகம்**

| | |
|---|---|
| இயக்குனர் | :- அருட்தந்தை அமில் பெனடிக்ற் கோமிஸ் (கொழும்பு மறைமாவட்டம்) |
| தலைவர் | :- செல்வன் ஜே. சுரேஸ் (பதுளை மறைமாவட்டம்) |
| உபதலைவர் | :- செல்வன் எஸ். கிரிசாந் (குருநாகல் மறைமாவட்டம்) |
| செயலாளர் | :- செல்வி சுமுது சாகரிகா (அனுராதபுரம் மறைமாவட்டம்) |
| உபசெயலாளர் | :- செல்வன் எ. யூட்பிரகாஷ் (மன்னார் மறைமாவட்டம்) |
| பொருளாளர் | :- செல்வன். அன்ரன் (கொழும்பு மறைமாவட்டம்). |

### மன்னாரில் உருவாகின்றது அதி நவீன 'மன்னார் சமாதானப் பாலம்'

பல்வேறு தடைகள், இடம்பெயர்வுகளுக்குப் பின்னர் மன்னார் 'தாம்போதி' பால அமைப்பு வேலைகள் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிய வருகின்றது. சுமார் 150 கோடி ரூபாய் செலவில் அமையவுள்ள இப்பாலத்திற்கு "மன்னார் சமாதானப் பாலம்" எனப் பெயரிடப்படும்.

சென்ற ஆண்டு நவம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்ட வேலை ஒப்பந்தம் இவ்வாண்டு தை மாதம் ஆரம்பித்து 2010ல் நிறைவுபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு முன்னோடியாக சகல வளங்களும் வாகனங்களும் கனரக உபகரணங்களும் சென்ற ஆண்டு இறுதியில் மன்னார் வந்துசேர்ந்தன. இவைகளை நிறுத்தி வைக்க இடமில்லாமல் மன்னார் தாம்போதியில் தள்ளாடி அருகிலும், மன்னாரிலும் நிறுத்தப்பட்டன. இதற்காக அன்று பிரித்தானியரால் கட்டப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார்சபை அலுவலகம் இடிக்கப்பட்டது. புதிய மாடிக் கட்டிடம் அமைப்பதாக உறுதியளிக்கப் பட்டது. ஆயினும் ஒரு நள்ளிரவுக்குள் எவருக்கும் தெரியாமல் சகல வாகனங்களும் உபகரணங்களும் மன்னாரைவிட்டு வெளியேறின. பிந்திக்கிடைத்த தகவலின்படி இந்த வேலைகள் நிறுத்தப்பட்டதாக அறியமுடிந்தது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மன்னார் மாவட்டத்தில் கிராமங்கள் அனைத்தும் இடம்பெயர்ந்தோர் முகாம்களாக மாறும் அபாயம்

**மன்னார் மாவட்ட செயலகம் தகவல்**

நிவாரணங்கள் தாமதமாகுவதால் மக்கள் பாதிக்கப்படுவதாக மன்னார் அரசாங்க அதிபர் கூறுகின்றார். மன்னார் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களும் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களாக மாறிவருகின்றன. தற்போது மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள பகுதிகளில் 7200 குடும்பங்களைச் சேர்ந்த 25000ற்கும் அதிகமான இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளனர் என்று மன்னார் அரசாங்க அதிபர் ஏ. நீக்கிலாபிள்ளை தெரிவித்தார்.

நிவாரணப் பொருட்களின் தாமதம் மற்றும் மழை வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் பெரும் அவலத்திற்கு உள்ளாகியுள்ளதாக அவர் மேலும் கூறினார். மன்னாரில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் ஆரம்பமானதைத் தொடர்ந்து பாதுகாப்பின் நிமித்தம் இடம்பெயர்ந்த மக்களின் நிலை தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகம் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் மடு, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகள் உள்ளன. பிரதேசத்தின்மீது மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்கள், படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான மோதல் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

முன்னர் இடம்பெயர்ந்த மக்கள் மடுப் பிரதேசத்தில் தங்கியிருந்தனர். பின்னர் அவர்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்ல நேரிட்டது. இவர்களில் பலர் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். அண்மைக்கால மோதல்களால் இடம்பெயர்ந்த மக்கள் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின்கீழ் உள்ள வெள்ளாங்குளம் இலுப்பக்கடவை உள்ளிட்ட பகுதிகளில் தங்கியுள்ளனர்.

தற்போது 7200 குடும்பங்களை சேர்ந்த 25000ற்கும் அதிகமான இடம்பெயர்ந்த மக்கள் அங்கு தங்கியுள்ளனர். தற்போதும் மக்கள் இடம்பெயர்ந்து வருவதால் இத்தொகை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக எம்மால் நலன்புரி முகாம்களை அமைக்க முடியவில்லை.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

### மன்னார் ஞானோதயம் இல்லத்தில் அ.ம.தி.களுக்கான ஆயத்த நவசந்நியாச பயிற்சிநெறி

மன்னார் தாழ்வுபாடு வீதியின் கீரியில் அமைந்துள்ள 'ஞானோதயம்' என்ற அமலமரித் தியாகிகளின் ஆன்மீகக் கல்வி மையத்தில் நவசந்நியாசத்திற்கு ஆயத்தம் செய்யும் 6 மாதப் பயிற்சிநெறி இடம்பெற்று வருகின்றது.

தற்போது 6 பேர் இப்பயிற்சி உருவாக்கத்தில் உள்ளனர். இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 4 பேரும் செட்டிகுளம், தாண்டவன்வெளி ஆகிய இடங்களில் இருந்து தலா ஒருவரும் உள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 2ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சிநெறி ஒகஸ்ட் மாதம் 2ம் திகதி நிறைவுபெறும். ஒகஸ்ற் 15ம் திகதி இவர்கள் மன்னாரில் இருந்து பண்டாரவளைக்குப் புறப்படுவார்கள். இப்பயிற்சி நெறியை அருட்பணியாளர் டானியல் (அமதி) அவர்கள் நடாத்தி வருகின்றார்.

# இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

சமாதானம்

# இனமோதலைத் தூண்டும் தீய சக்திகளின் கபட நோக்கத்திற்கு ஒருபோதும் இடமளியாதீர்

## மட்டக்களப்பு அனர்த்தங்களின் எதிரொலியாக திருமலை மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி ஆண்டகை அவசர வேண்டுகோள்

இனமோதலைத் தூண்டி சமூகங்களை துருவப்படுத்த முயலும் தீய சக்திகள் குறித்து கடும் எச்சரிக்கையாகவும் தீவிர விழிப்புணர்வுடனும் செயற்படுமாறு கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம் சமூகங்களிடம் அரசியல், சமூக, சமயப் பிரதிநிதிகள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள இனமுறுகல் சூழ்நிலைமையை அடுத்தே தமிழ், முஸ்லிம் சமூகங்களை அமைதிகாத்து இன ஒற்றுமைக்கு உறவுப் பாலம் அமைக்க முன்வருமாறும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து மட்டக்களப்பு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்ததாவது.

இனமுறுகல் ஒருபோதும் சமூக ஒற்றுமையை ஏற்படுத்தாது. கிழக்கில் கடந்த காலத்தில் ஏற்பட்ட இனமோதல்கள் சமூகப்பிளவுகளுக்கு காரணமாக அமைந்திருந்தன. குறிப்பாக மட்டு மாவட்டம் பல வடுக்களைச் சுமந்து நிற்கும் மாவட்டமாகும். இங்கு மேலும் வடுக்கள் ஏற்படுவதற்கு மக்கள் எவ்வகையிலும் அனுமதி வழங்கக்கூடாது. இச்சந்தர்ப்பத்தில் அமைதி பிரதானமானது. இதற்கு நிதானம் அவசியமானது. சமூகங்களிலுள்ள பொறுப்புவாய்ந்தவர்கள் சமூகங்களிடையே புரிந்துணர்விற்காக ஒன்றிணைய அழைப்பு விடுக்கின்றேன் என்றார்.

## இதய சுத்தியுடனான சமாதான முயற்சிகளே இன்றைய உடனடித் தேவை

**மட்டக்களப்பு மாவட்ட கிறிஸ்தவ ஒன்றியத்தின் உறுதிப்பிரகடனத்தில் வலியுறுத்து**

மட்டக்களப்பு மாவட்ட கிறிஸ்தவ ஒன்றியத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட சமாதானப் பிரார்த்தனையும் அமைதி ஊர்வலமும் மட்டக்களப்பில் நடைபெற்றது. கடந்த மார்ச் 15 ஆம் நாள் மட்/புளியந்தீவு புனித மரியாள் இணைப்பேராலயத்தில் நடைபெற்ற சமாதானப் பிரார்த்தனையின்போது உறுதிப்பிரகடனமும் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற அமைதிப் பேரணி திருமலை வீதியூடாக மட்/கோட்டமுனை மெதடிஸ்த ஆலயத்தைச் சென்றடைந்தது. புளியந்தீவு இணைப் பேராலயத்தில் இடம்பெற்ற சமாதானப் பிரார்த்தனையின்போது எடுக்கப்பட்ட உறுதிப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டதாவது.

தொடரும் யுத்த காலத்தில் வன்முறைகளால் சின்னாபின்னமாக்கப்பட்டு, வாழும் உரிமையே கேள்விக்குறியாக்கப்பட்டு உரிமைகள் இழந்து நிற்கின்ற எம் மக்களின் உடனடித் தேவை சமாதானமே. வெறும் அரசியல் நடவடிக்கைகளும், மக்கள்மேல் திணிக்கப்படும் தீர்வுத்திட்டங்களும் நிலையான நிரந்தரமான உண்மையான சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்பதை நாங்கள் நம்புகிறோம். எல்லாவிதமான வன்முறைகளையும் ஆயுதக் கலாச்சாரத்தின் வெளிப்பாடுகளையும் அடியோடு வெறுத்தொதுக்குகிறோம். மனித மாண்பினை மதித்தலும், வாழ்வதற்கான உரிமையினை வழங்குதலும் தூரநோக்குடன் எடுக்கப்படும் இதய சுத்தியுடனான சமாதான முன்னெடுப்புக்களுமே இன்றைய காலத்தின் உடனடித் தேவையாக உள்ளது.

சகோதரத்துவமும், சகிப்புத்தன்மையும், பொறுமையும், விட்டுக்கொடுத்தலும், அன்பும், மன்னிப்பும் போன்ற உயரிய மனித விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட சமாதான முயற்சிகளுக்கு கிறிஸ்தவர்களாகிய நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட திடமனத்துடன் உறுதிகொள்கின்றோம். எல்லாவற்றிக்கும் மேலாக இறைவனுடைய வழிநடத்தலையும் அவருடைய கருணையையும், இறையன்பையும் வேண்டி நிற்கின்றோம் எனப் பிரகடனம் செய்யப்பட்டது.

திருமலை மட்டுநகர் ஆயர் கிங்சிலி ஆண்டகை அவர்கள் சமாதானத்தின் தேவை வேண்டி அங்கு உரையாற்றினார்.

தொடர்ந்து பல் ஊடகப்பிரிவு (Malty Media) மூலம் கடந்த காலத்தில் யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகள் பற்றிய காட்சித் தொகுப்பு ஒன்றும் மக்களுக்கு காண்பிக்கப்பட்டது.



## யாழ் மறைமாவட்டத்திற்கு நான்கு புதிய குருக்கள்

எதிர்வரும் யூன் மாதம் 05ம் திகதி யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 4 அருட்சகோதரர்கள் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட உள்ளனர். யாழ். மரியன்னை பேராலயத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் இவர்கள் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படுவர்.

அருட்சகோதரர்கள் எ. எட்விநாதன், அ. ஜேம்ஸ் நாதன், இ. ஜி. விஜின்ரஸ், அ. வி. சில்வெஸ்ரர் தாஸ் ஆகியோரே குருக்களாகத் திருநிலைப் படுத்தப்பட உள்ளனர். இவர்களுக்கு மன்னா செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது.

## செய்திகள் சில வரிகளில்...!

### முன்னாள் குருமட மாணவர்கள் பண்டாரவளையில் சந்திப்பு

புனித யூஜின் அமலமரித்தியாகிகள் சபையின் முன்னாள் குருமட மாணவர்களுக்கான சங்கம் (St. Eugene's Association of Former Oblate Seminarians) கடந்த ஏப்ரல் மாதம் 19, 20 ஆகிய தினங்களில் பண்டாரவளையில் தமது வருடாந்த சுற்றுலாவை மேற்கொண்டனர். இந்த அமைப்பு எட்டு வருடங்களுக்கு முன்னர் இர்வின் மொறாயஸ் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டது. இவரே இதன் காப்பாளராகச் செயற்பட்டு வருகின்றார்.

### பொன்விழாக் காணும் கண்டி மறைமாவட்டக் குரு

கண்டி மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் டென்சில் பெரேரா அவர்கள் தமது குருத்துவ வாழ்வில் 50 வருடங்களை நிறைவு செய்து கடந்த பெப்ரவரி 03ம் திகதி பொன்விழாக் கொண்டாடி இறைவனுக்கு நன்றி கூறினார்.

### சமாதானச் செயற்பாட்டாளருக்கு பாராட்டு விழா

2007ம் ஆண்டிற்கான அகிம்சை விருதைப் (The Non – Violence Award 2007) பெற்ற தேசிய சமாதானப் பேரவையின் இயக்குனர் (Executive Director of the National Peace Council) கலாநிதி ஜெகான் பெரேரா அவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. சமுகப் பணிகளுக்கான கிறிஸ்தவ கூட்டமைப்பு என்ற அமைப்பினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் நோர்வே நாட்டுத் தூதுவர் பங்கேற்றார்.

### துறவறப் பொன்விழா

தாண்டவன்வெளி ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி கிறிஸ்ரின் டீ லா அவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 9ம் திகதி தமது பணி வாழ்வில் 50 ஆண்டுகளை நிறைவுசெய்தார். நீர்கொழும்பைச் சேர்ந்த இவரது யூபிலி விழாத் திருப்பலி கிங்ஸ்லி ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

## கச்சதீவு புனித அந்தோனியாரின் வருடாந்த திருவிழா மீண்டும் இரத்துச் செய்யப்பட்டது

சிறிலங்காவையும், இந்தியாவையும் பிரிக்கும் பாக்குநீரிணைக்கு இருபக்கமுள்ள இலங்கை மற்றும் இந்தியத் தமிழ் மீனவர்களும், அவர்களது குடும்பத்தினரும் சந்திப்பதற்கும் ஒன்றித்துச் செபிப்பதற்கும் புனித அந்தோனியார் பெருவிழா ஒரு சந்தர்ப்பமாக அமைந்து வந்தது.

இந்தப் பெருவிழா வழமையாக மார்ச் மாதத்தில் யாழ் குடாநாட்டிற்கு அப்பாலுள்ள கச்சதீவில் நடைபெறுவதுண்டு. ஆனால் நடைபெறும் யுத்தத்தைக் காரணம் காட்டி இலங்கை, இந்திய அரசாங்கங்கள் இவ்வருடம் இந்தத் தீவுக்குப் பயணம் செய்வதைத் தடைசெய்துள்ளன. "நாம் அரசாங்கத்துடன் உரையாடி நிலைமைகளை விளக்கியபோதிலும் அரச படையினர் எவரையும் - யாத்திரிகளைக்கூட அங்கு செல்வதற்கு அனுமதி வழங்காததால் இறுதியில் நாம் இந்த எண்ணத்தைக் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது என்று யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் கருத்து வெளியிட்டார்.

## மடுத் தேவாலயத்தை உடனடியாக மன்னார் ஆயரிடம் கையளிக்கவும்!

**- ஜயலத் எம். பி. அரசாங்கத்திடம் கோரிக்கை -**

மடுமாதா தேவாலயம் உடனடியாக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் அவர்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

மடுமாதா தேவாலயமும், அதனை அண்டிய பிரதேசங்களும் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. மடு மாதா தேவாலயம் எப்போதும் கத்தோலிக்கர்களின் வணக்கத்துக்குரிய தலமாகத் திகழ்ந்தாலும் மடு மாதா முகாம் அகதிகளின் பாதுகாப்புத் தலமாகத் திகழ்ந்து வருகின்றது.

அண்மையில் இடம்பெற்ற யுத்தத்தினால் மடுமாதா தேவாலயம் சிறு சிறு சேதங்களுக்கு உட்பட்டதோடு தற்போது அது மூடப்பட்டுள்ளதாக செய்தியறிக்கைகள் மூலம் அறியக்கிடைத்தது. கத்தோலிக்க திருச்சபையின் நீதிமுறைமை மற்றும் சம்பிரதாயங்களுக்கிணங்க மடுமாதா தேவாலயத்தின் உத்தியோகபூர்வ பொறுப்பாளி மன்னார் ஆயர் ஜோசப் ஆண்டகை அவர்களாகும். அதனால் உடனடியாக மடுமாதா தேவாலயத்தை மன்னார் ஆயரிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் மருதமடு மாதா



ஆலயத்தில் கத்தோலிக்க மதகுருக்கள், அருட்சகோதரிகள் அங்கு சேவை செய்யும் பணியாளர்கள் ஆகிய அனைவரும் மீண்டும் அங்கு சென்று தங்குவதற்கும் தங்களது சேவைய்யை சீராக மேற்கொள்ளுவதற்கும் ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மன்னார் ஆயரின் விருப்பின் பேரில் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தேவன்பிட்டிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள மடுமாதா திருச் சுரூபம் மீண்டும் பழைய இடத்திற்கு கொண்டுவரப்படும் என்பதில் நான் அதீத நம்பிக்கை கொண்டுள்ளேன். தங்களது பதிலை எதிர்பார்க்கின்றேன்.

## பல்லின பல்சமய சிறுவர்களை ஒன்றிணைத்த அநுராதபுர கத்தோலிக்க சிறுவர் இயக்கம்

இன, மத மோதல்கள் நிலவும் சிறிலங்காவில் திருச்சபையால் நடாத்தப்படும் சிறுவர் இயக்கம் பௌத்த, கிறிஸ்தவ, இந்து, முஸ்லிம் சிறுவர்களை ஒன்றிணைத்து விளையாட்டில் ஈடுபடுத்தியது.

மார்ச் 8ம் நாள் அனுராதபுரம் மறைமாவட்டக் கிளையான *லக்றிவி* என்னும் சிறுவர் அப்போஸ்தல நிலையம் பொலநறுவைப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 120 சிறுவர், சிறுமியரை கொழும்பின் வடகிழக்கில் அமைந்துள்ள மின்னேரியாவில் ஒன்றுகூட்டியது. 50 ஊக்குவிப்பாளர்களில் குருக்களும், பிரான்சிஸ்கன் சபைக் கன்னியரும் அடங்குவர். நா – அகாவா கன்மா என்றும் பௌத்தமத கல்லூரியில் அமைந்துள்ள ஒரு கூடாரத்தில் இந்த ஒன்றுகூடலுக்கான ஒழுங்கமைவுகளை லக்றிவி மேற்கொண்டிருந்தது. வெவ்வேறு பின்புலங்களைக் கொண்ட சிறுவர்கள் ஒருவர் ஒருவருடன் உரையாடி, ஒருவர் ஒருவரை நன்கு புரிந்துகொள்ளவும் நண்பர்களை ஏற்படுத்தக் கூடியதாகவும் இந்நிகழ்வு அமைந்தது.

நிகழ்வின்போது யூக்கன் செய்திக்குக் கருத்துத் தெரிவித்த வண. தீபகன்டியா சோபித தேரோ "பகைமைக்கும் தவறான புரிந்துணர்வுக்கும் அடிநாதமாக அமைந்த விதைகளை அகற்றுவது கடினமான வேலை" என்று கூறினார்.


தவறான புரிந்துணர்வைப் பற்றி பௌத்த துறவி கூறியபோது அவற்றில் ஒன்றைப்பற்றி அவர் விபரித்தார். அதாவது அண்மைக்காலங்களில் நாட்டிற்குள் பிரவேசித்த அடிப்படைவாத கிறிஸ்தவ குழுமங்களால் மேற்கொள்ளப்படும் மதமாற்ற செயற்பாடுகளை ஆக்கிரம்பு நிகழ்வுகள் என்ற கண்ணோட்டத்தில் பௌத்த மக்கள் இதைப் பார்க்கின்றனர் என்றார்.

"நாடு முழுவதும் அதிகளவான கிறிஸ்தவ ஆலயங்கள் தாக்கப்பட்டும், உடைக்கப்பட்டும் உள்ளன. சில பிரதேசங்களில் மதத்தின் மட்டில் கிறிஸ்தவர்களுக்கும், பௌத்த குருக்களுக்குமிடையே தீவிரகருத்து வேற்றுமை நிலவுவதாக வண நீபகன்டியா தேரர் கூறினார். அதிதீவிர கருத்து வேற்றுமை என்பது கடந்த 25 வருடங்களாக தமிழ்த் தீவிரவாதிகளுக்கும், சிங்கள அரசாங்கத்திற்கும் இடையே நிலவும் முரண்பாடாகும். அவர்கள் தமிழர் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு பிரதேசத்தை தனி நாடாக்க முயல்கின்றார்கள். இந்நிலையில் பௌத்த சிறுவர்கள், ஏனைய சிறுவர்களுடன் விளையாடுவதைக் காண்பது ஆறுதலாயுள்ளது என்று தேரர் கூறினார்.

தீவிரவாதிகள் சிலர் மதத்தினதும் இனத்தினதும் பெயரால் மக்களிடையே பிரிவினையையும், ஐக்கியமின்மையையும் ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள். தேரரின் கூற்றுப்படி லக்றிவி மதங்களிடையேயும், இனங்களிடையேயும் அமைதியைக் கொண்டுவரும் சவால்களை மேற்கொண்டு, சிறந்த பலனைப் பெற வழிசெய்கிறது என்றார். மேலும் கத்தோலிக்க குருக்கள் துறவிகளுடன் இணைந்து செயல்பட இது சிறந்த வாய்ப்பு என்றும் கூறினார்.




# சிறுவர் பொழில்



## அகங்காரத்தின் அழிவு

அ.டெஸ்மன் வெற்றிராஜ்
ஆவணம், நானாட்டான்.



வயல்வெளிகளில் பச்சைப்பசேலென நெல் மணிகள் சிரித்திட, வரம்புகளின் இடையில் வாய்க்கால் எனும் ஓடம் மளமளவெனப் பாய்ந்திட, ஊரின் நடுப்பகுதியில், குளத்தின் அருகில் ஓர் ஆலமரம். சின்னஞ்சிறியவர் முதல், பெரியவர்வரை ஓய்வெடுக்கும் அந்த நிழலில் ஓர் உருவம் சலனமற்றுக் கிடந்தது.

பழைய துணி ஒன்று பாயாக விரித்திருக்க, மரத்தின் வேர்முனைகள் தலையணையாக வைத்திருக்க, மானம் காத்த சறம் ஒன்றை போர்வையாக போர்த்திவிட்டு கதகதப்பாக அவன் உறங்குகிறான்.

தாடி மயிர்கள் வெண்நிறமாகக் காட்சியளிக்க, முகங்களின் அழுக்குகள் புண்களாக வெதும்ப, தலைமுழுவதும் பற்றைகளின் முட்கள்போல் பரட்டையாகப் பறக்க, கைகால்களைப் புரட்டி அவன் உருண்டு புரள்கிறான்.

"யாரது?" எனக் குரல்கள், "பைத்தியக்காரன்" எனப் பதில்கள். "ஏன் இப்படி" என இன்னொரு குரல் கேட்க, "பிறந்தது முதல் இப்படித்தான். என்னசெய்வது அவனது விதி" என எண்ணங்கள் பகிரங்கமாகப் பரப்பப்படுகின்றன. உண்மைதான்! இது அவனது விதிதான்! இது அவனுக்குக் கிடைத்த ஒரு சாபந்தான். இல்லையென்றால் அவன் இந்த மரத்தடியில்தானா உறங்க வேண்டும்? இல்லை பைத்தியக்காரன் எனப் பட்டம்தான் வாங்க வேண்டுமா? ஒரு வீட்டில் அல்லது ஓர் அகதி முகாமில் இல்லை ஓர் குடிசையில் இருந்திருக்கலாமே.

ஒருவன் பைத்தியமாக அலைகின்றானென்றால் அது அவனின் பிறப்புவாசி என்கிறோம். இல்லை அவனின் விதி என்கின்றோம். இன்னும் சிலர் அவன் முற்பிறப்பில் செய்த பாவம் என்கிறார்கள். இவை உலகம் தனக்குத்தானே சொல்லிக்கொள்ளும் காரணங்கள்.

இவனின் பெயரென்ன? ஊரென்ன? பெற்றோர் இல்லையா? என்றவாறு கேள்விகள் அடுக்கடுக்காகச் செல்கின்றன. அனைத்துக் கேள்விகளுக்கும் விடைகள் இருக்கத்தான் செய்கின்றன.

'ஆதி' என்றால் அந்தக் கிராமமே நடுநடுங்கிவிடும். நாட்டாமை எனும் பெயர் கொண்டு நாற்புறமும் அழைக்கப்படுபவன். வீறுநடைபோட்டு வீதியில் விறுவிறுப்போடு இவன் வரும்போது எல்லோரும் கைகூப்பி கும்பிட்டு கைகட்டி நிற்பார்கள். அந்தளவிற்கு அவன் உயர்ந்தவனாக வாழ்ந்தான். கல்வி கற்றவர் முதல் பாராளுமன்றம் சென்றவர் வரை இவனுடைய பேச்சிற்கு மறு பேச்சுப் பேசியதில்லை.

சின்னஞ்சிறு வயதில் பெற்றோரைப் பிரிந்தவனாதலால் அனாதை என்றே அனைவரும் இவனை அழைத்தனர். அனாதை என்பதால் சிறுவயதில் அலைக்களிக்கப்பட்டவன். வேலை என்று ஓடுகிற இடத்தில் "அனாதையே! வெளியே போ" என்று துரத்தினர் சிலர். "நீ உழைத்து யாருக்குக் கொடுக்கப் போகின்றாய்?" என்றனர் இன்னும் சிலர். சின்னஞ்சிறுசுகள் தகப்பன் பெயர் தெரியா மூடன் எனப் பழிக்கவும் தவறவில்லை. இதையெல்லாம் சகித்துக்கொண்டு அவன் பாடசாலை சென்றான்.

"காசில்லா உனக்கு ஏன் படிப்பு?" என அவனைத் துரத்தி அடித்தனர். இதுவெல்லாம் அவன் மனதில் ஆழமாக வேர்விட்ட உண்மைகள். இவற்றையெல்லாம் எதிர்கொண்டு ஊக்கத்தாலும் அயராத முயற்சியாலும் கல்வியில் வல்லவனாய்த் திகழ்ந்தது மட்டுமன்றி, வேலை செய்வதில் இவனைவிட யாரும் மிஞ்சவில்லை.

பருவ வயதிலேயே மக்களின் மனதில் இடம்பிடித்தவன். பணம் சம்பாதித்து முதலாளி என்ற பெயரும் பெற்றான். "பண்ணையில் மாடு மேய்த்தவன் இன்று பகட்டான வாழ்க்கை வாழ்கின்றான்" என்று அயலவர்கள் அதிசயித்தனர். இன்னும் சிலர், "மாடு மேய்த்தவன் பட்டப்படிப்பும் பெற்றுவிட்டான்" எனப் பொறாமைப்பட்டனர்.

தான் ஒரு பட்டதாரி என ஒரு நிமிடம்கூட அவன் சிந்திக்கவில்லை. தன்னை அனாதையென அடிமைப்படுத்தியவர்களை வேலை செய்ய வைக்கவேண்டுமென்ற கனவும் வைராக்கியமும் நனவாகியது. அதுதான் சட்டமும் ஆகியது. இவன் பேச்சிற்கு மறுபேச்சில்லை. அவ்வளவு அகங்காரம் கொண்ட எஜமானாக தற்பெருமையோடு தலைதூக்கி நின்றான்.

அழகான அவனுடைய மனைவிக்குப் பிள்ளைகள் பத்து. "அனாதை என்று பேர் வாங்கிய எனக்கு பத்துக் குலங்கள் பரவப்போகிறது" என தம்பட்டம் அடித்துகொள்வான். "நானே தெய்வம், நானே கடவுள்" என்பதைப்போல நடந்துகொண்டான். மேலே ஒருவன் இருக்கின்றான் என்பதை அவன் மறந்துவிட்டான். அதனால்தான் இந்நிலைக்குத் தள்ளப்பட்டான்.

சொத்து சுகங்கள் காணி பூமியோடு இருந்தவன் கடவுளை நினைத்தும் பார்க்கவில்லை. சுனாமி எனும் அலைவந்து ஆசியாவையே உலுக்கியது. அது அவனது ஊரையும் விட்டுவைக்கவில்லை, அவனது பரம்பரையையும் விட்டுவைக்கவில்லை. ஊர்வன முதல் நடப்பன வரை அனைத்தும் இறந்துவிட்டன. ஏனோ தெரியவில்லை அவனது விதி அவனை மட்டும் உயிரோடு விட்டுவிட்டது. "ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக்கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்தால் என்ன பயன்" என்ற வார்த்தை அவனுக்கு இன்று ஒலிக்கிறது. அவனோ அதனைக் கேட்கும் நிலையில் இல்லை.

"அகிலத்தில் அகங்காரம் வேண்டாம்
அகத்தில் அழுக்குகள் வேண்டாம்
அனைத்திலும் ஆசை வேண்டாம்
இவை என்றும் அழிவையே தரும்!"

# கவிதைப் பூக்கள்

## சமாதானமே வருக

வருக வருக சமாதானம் வருக
இலங்கைவாழ் மக்களுக்கு சமாதானம் வருக.
சிறிய இந்நாட்டிற்கு சமாதானம் வருக
சிறுவராகிய எமக்குச் சமாதானம் வருக.

மண்ணில் பிறந்த மனிதனுக்கு சமாதானம் வருக
மனுவுரு எடுத்த இயேசுவின் சமாதானம் வருக
வறுமையில் பிறந்த மனிதனுக்கு சமாதானம் வருக
சிறுவராகிய எமக்குச் சமாதானம் வருக.

*அ. ஆன் கிஷோனா, (கிசோ) சாளம்பன்*

## அன்னை

கருவறை தொடக்கம் கல்லறை வரை
இன்பத்திலும் துன்பத்திலும்
இரண்டறக் கலந்த தெய்வமே – தாய்.

அன்பின் இருப்பிடமாய், அரவணைப்பின் சிகரமாய்
வாழ்வின் சரித்திரமாய் வாழவைக்கும்
தெய்வமே – தாய்.

உணவை ஒறுத்து தன் உடலை வெறுத்து
பாலூட்டி சீராட்டி பக்குவமாய்ப் பார்க்கும்
தெய்வமே – தாய்.

*எ. சிரஞ்சி, சாளம்பன், ஆண்டாங்குளம்.*

## படிக்கவேண்டும் தூங்காதே




நாளே நாளே ஓடாதே!
நானும் கொஞ்சம் படிக்க வேண்டும்
சோர்வே சோர்வே நில்லாதே
சிறப்பாய் நானும் படிக்கவேண்டும்.

நினைவே நினைவே செல்லாதே!
நினைத்து நானும் படிக்க வேண்டும்
மறதி மறதி தங்காதே
மனத்தால் நானும் படிக்க வேண்டும்.

கண்ணே கண்ணே தூங்காதே
அல்லும் பகலும் படிக்க வேண்டும்.
இருளே இருளே இருக்காதே
ஒளியில் நானும் படிக்க வேண்டும்!

*அ. யூடிற் மியூரிக்கா லெம்பேட்,*
*தலைமன்னார் மேற்கு*

# மெல்லச் சிரிங்க... மெல்லச் சிரிங்க..



சிஷ்யன் : ஞானத்தை அடைய என்ன செய்யவேண்டும்?
குரு : ஞானத்தின் கணவனை போட்டுத் தள்ளவேண்டியதுதான்.

* * * * *



தோழி : இப்ப எல்லாம் நீ ஏன் தொடர் நாடகங்கள் பார்ப்பதில்லை?
மதி : நான் அழுவதைப் பார்த்து என் மாமியார் சந்தோசப்படுகிறா!

* * * * *

குரு : உன் தந்தை அந்தப்புரத்தில் இருக்கிறார். இது என்ன காலம்?
இளவரசன் : பொற்காலம்...!
குரு : உன் தந்தை ஓடி ஒளிகிறார். இது என்ன காலம்?
இளவரசன் : போர்க்காலம்...!


* * * * *



கணவன் : என் மகனை டாக்டராக்கியது தப்பாய்ப் போய்விட்டது?
மனைவி : ஏன் என்னாச்சு?
கணவன் : அறுவைச் சிகிச்சை பண்ண யாரும் வராததால் போரடிக்குது என்று எனக்கு ஏதாவது அறுவைச் சிகிச்சை பண்ணட்டுமா எனக்கேட்டு உயிரை வாங்கிறான்.

*ஏ. றி. இம்மானுவேல், ஜேர்மனி*

* * * * *



டாக்டர் : "நீங்கள் அதிகமாக சாராயம் குடிக்கிறீர்கள்...!"
நோயாளி : எப்படி டாக்டர் கண்டு பிடித்தீர்கள்?
டாக்டர் : உங்கள் இதயம் படக்படக் என அடிப்பதற்குப் பதிலாக மொடக் மொடக் என்று அடிக்கிறது!.



கோபு : நேற்று என்ன படம் பார்த்தாய்?
ரகு : 'அதைக் கேட்க நீ யார்?'
கோபு : அதுக்கு ஏன்டா கோபப்படுகிறே?
ரகு : இல்லடா, படத்தோட பேரே அதுதான்.

* * * * *

சுதா : நீ தினம் இரவு எத்தனை மணிவரை படிப்பாய்?
சுமதி : தூக்கம் வரும் வரைக்கும்.
சுதா : தூக்கம் எப்ப வரும்?
சுமதி : புத்தகத்தை கையில் எடுத்ததும்.

*றெ. மெடிலின் நிறோஸ், இறம்பைக்குளம், வவுனியா.*

* * * * *



தந்தை :கம்பசுக்குப் போகும்போது பசங்களின் தொல்லையால மகளிட்ட மிளகாய்ப்பொடி கொண்டுபோகச் சொன்னது தப்பா போச்சு...!
நண்பர் : ஏன்?
தந்தை : இப்ப பசங்க எல்லாம் இட்லியோட அவ பின்னால அலையிறாங்களாம்...!

* * * * *

பக்தன் : வாய்க்காற மனைவியை அடக்கிற வழி சொல்லுங்க சாமி...
சாமி : அது தெரியாமத்தான் பக்தா நான் சாமியாராயிட்டன்...

*பி. மதுசாளினி, தரம்11, மடுக்கோவில், மடு*

# துளிப்பா



**விதி**
மனதெல்லாம் பாரம் - இது
யார் போட்ட சாபம்.
இது விதி என்று சொன்னால்
என்மேல் விதிக்கு
ஏன் இந்தக் கோபம்?

**கண்ணீர்**
கவலையை மறக்க
கடவுளால் அளிக்கப்பட்ட
உன்னதமான கொடை.

**வாழ்க்கை**
கருவறை முதல் கல்லறை வரை
நடக்கின்ற புரியாத விளையாட்டு.

*டி. டனியா*
*எச்-5, மடுக்கோவில், மடு*

**இறைவன்**
எந்நாளும் எம்மை அன்போடு
காத்துவரும் கருணையின் உள்ளம்.

**திருமணம்**
இரு மனங்கள் ஒருமனமாகும்
நாளின் தொடக்கம்.

**சமாதானம்**
இந்தச் சொல்தான் எம்நாட்டில் மலர்ந்திட
தவறாமல் நாம் வேண்டும் வரம்.


**மலர்**
அழகோடு சேர்ந்து வாசனையும் தந்து
எம்மை தன்பால் ஈர்த்திடும் ஈர்ப்பு சக்தி.

**நீர்**
இவ்வுலகை உயிர் வாழ வைக்கும்
ஓர் உன்னத ஜீவன்.

**நட்பு**
சிட்டுக்களாய் நாம் சிறகடிக்க
உதவும் அழகான இறக்கை.

*ம. ஆன் தர்ஷி*
*சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.*

# உலகத் திருச்சபைச் செய்திகள்




## அமெரிக்க வாழ் கத்தோலிக்க மக்களுடைய விசுவாசத்தையும் அர்ப்பணிப்பையும் அறிந்து மகிழ்வடைகிறோம்

### அமெரிக்க விமான நிலையத்தில் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற்

திருத்தந்தை 16ம் பெனடிக்ற்றின் ஐக்கிய அமெரிக்காவிற்கான விஜயத்தின் முடிவில் ஏப்ரல் 25ம் திகதி அமெரிக்காவின் யோண். எவ். கெனடி சர்வதேச விமான நிலையத்தில் ஆற்றிய பிரியாவிடை உரையில், ஐக்கிய அமெரிக்காவில் எனக்கு வழங்கப்பட்ட உபசரிப்பும், வரவேற்பும் மெச்சப்படும் அதேவேளை, இங்கு வாழுகின்ற கத்தோலிக்க மக்களுடைய விசுவாசத்தையும், அர்ப்பணிப்பையும் குறித்து மகிழ்வடைகின்றேன் எனக் கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

"இங்கு வாழுகின்ற கிறிஸ்தவ மற்றும் பிறமதத் தலைவர்கள், மற்றும் பிரதிநிதிகளுடன் நான் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மூலம் அவர்கள் அனைவர் மட்டிலும், நான் கொண்டுள்ள மரியாதையை உறுதிப்படுத்துவதோடு, எனது விஜயத்தில் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். குறிப்பாக என் சக ஆயர்கள், குருக்கள், துறவியர்கள், குருமட மாணவர்கள், அனைவரையும் நன்றியோடு நினைப்பதுடன் தொடர்ந்தும் சாட்சிய வாழ்வு வாழும்படி ஊக்கமூட்டுகின்றேன்.

எனது விஜயத்தின்போது ஐக்கிய நாடுகள் சபையில் உரை நிகழ்த்த எனக்குக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தை மிக முக்கியமானதொன்றாகக் கருதுகின்றேன். மனித உரிமைகள் பிரகடனம் கொண்டுவரப்பட்டு கடந்த 60 ஆண்டுகளில் அடிப்படை மனித உரிமைகள் எல்லா மனிதர்கள் இடையேயும், உலகம் முழுவதிலும் பேணப்படுவது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் பாராட்டுவதோடு தொடர்ந்தும் மக்களிடையே நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் எல்லா அமெரிக்கர்களிடையேயும், உலகம் பூராகவும் வாழும் அனைத்து மக்களிடையேயும் நல்ல எதிர்காலம் மலர்ந்து சகோதரத்துவம், ஐக்கியம், பரஸ்பர மதிப்பு, புதுப்பிக்கப்பட்ட இறை நம்பிக்கை என்பவை மிளிரப் பிராத்திக்கின்றேன்" என்றார்.



## நேபாளத்தில் முதலாவது தைலம் ஆசீர்வதிக்கும் திருப்பலி

புனித தைலம் ஆசீர்வதிக்கும் திருப்பலி முதல் தடவையாக நேபாளத்தில் நடைபெற்றது. இதற்கு இயேசு சபை ஆயர் மேதகு அன்ரனி சர்மா தலைமை வகித்தார்.

மார்ச் 17ம் நாள் விண்ணேற்புப் பங்குத்தளத்தில் இடம்பெற்ற திருப்பலியில் காத்மண்டுவைச் சேர்ந்த மக்கள் 500 பேரும் மற்றும் மறைமாவட்ட துறவறக்குருக்கள் 36 பேரும் பங்குகொண்டனர்.

நேபாளத்தின் அப்போஸ்தலிக்க பிரதிநிதியான ஆயர் மேதகு ஷர்மா தனது குருக்களிடம் "நற்செய்தியைப் போதிக்கவேண்டாம், மாறாக கிறிஸ்துவின் நற்செய்தியாக வாழுங்கள்" "திருச்சபைக்குள் ஐக்கியத்தைக் கொண்டுவாருங்கள், வழிதவறிச் சென்றவர்களைத் திரும்பக்கொண்டு வாருங்கள், ஒரு குருவானவரின் கடமை இதுவே" என்று கூறி தனது குருக்களுக்கு உற்சாகமளித்தார்.

## திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் ஐக்கிய நாடுகள் சபையில் வரவேற்கப்படுகின்றார்



## துன்புறும் மக்களை நோக்கி நமது பார்வையைத் திருப்புவோம்

### - பிரான்ஸ் நாட்டின் கிறிஸ்தவ சபைகள் கூட்டாகச் செய்தி -

"ஒருவர் மற்றவரின் சுமைகளைச் சுமப்போம்" என்ற தலைப்பில் இவ்வாண்டிற்கான பாஸ்கா சிறப்புச் செய்தியை பிரான்ஸ் நாட்டின் கிறிஸ்தவ சபைகள் இணைந்து வெளியிட்டுள்ளன.


பிரான்ஸ் நாட்டின் ஆயர் பேரவைத் தலைவர் கர்தினால் அந்திரே, பிரான்சின் கிரேக்க ஆர்த்தோடக்ஸ் பிதாப்பிதா எம்மானுவேல், பிரான்சின் பிரிவினைச் சபைகளினுடைய கூட்டமைப்பின் தலைவர், கிறிஸ்தவக் குரு கிளாடுபேட்டி ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள இயேசுவின் உயிர்ப்பு விழாச் செய்தியில், மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவில் துன்புறும் மக்களை நோக்கி இக்காலத்தில் தங்கள் பார்வையைத் திருப்புமாறு கிறிஸ்தவர்களைக் கேட்டுள்ளனர். மக்களுக்காகவும், துன்புறும் பகுதியில் பணிபுரியும் திருச்சபைக்காகவும் மன்றாட வேண்டிய மற்றும் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டை அறிவிக்க வேண்டிய பிரான்சு நாட்டு விசுவாசிகளின் கடமையையும் அந்நாட்டு கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஏழ்மை மற்றும் சமூக, அரசியல் பதட்ட நிலைகள், வன்முறைகள் போன்றவை மேலும் வன்முறைகளுக்கே வழிவகுப்பதாக இருக்கக்கூடாது எனவும் கேட்டுள்ளனர்.

## ஈராக்கில் கடத்தப்பட்ட பேராயர் உயிரிழந்துள்ளார்

### – திருத்தந்தை ஆழ்ந்த துயரம் –

ஈராக்கில் கடந்த மாத இறுதியில் கடத்தப்பட்ட மொசூல் கல்தேயப் பிரிவுக் கத்தோலிக்கப் பேராயர் இறந்தது குறித்து திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் ஆழ்ந்த கவலையில் இருப்பதாக திருப்பீடப் பேச்சாளர் அருட்திரு பெதரிக்கோ லொம்பார்தி தெரிவித்தார்.

தொடர்ந்து துன்பங்களை எதிர்நோக்கிவரும் ஈராக் மக்களுடனான குறிப்பாக அந்நாட்டு சிறுபான்மைக் கிறிஸ்தவ சமுதாயத்துடனான தனது ஒருமைப்பாட்டுணர்வையும் திருத்தந்தை தெரிவித்திருப்பதாக அருட்திரு லொம்பார்தி மேலும் கூறினார்.



67 வயதாகும் மொசூல் கல்தேயப் பிரிவுக் கத்தோலிக்கப் பேராயர் பவுலோஸ் பாராஜ் ராகூ கடந்த பெப்ரவரி 29ம் திகதி தூய ஆவியானவர் பேராலயத்தில் சிலுவைப் பாதை பக்தி முயற்சியை முடித்து வெளியே வந்தபோது கடத்தப்பட்டார். அவரோடு சேர்ந்து வந்த மற்ற மூன்று பேரையும் கடத்தல்காரர்கள் தாக்கியபோது இவர்கள் இறந்துவிட்டனர்.

தற்சமயம் பேராயரின் சடலத்தை மொசூல் நகருக்கு வெளியே கண்டதாக பாக்தாத் துணை ஆயர் செல்மான் வர்தூனி கூறினார். மேலும் பேராயர் ராகூ கொல்லப்பட்டதாகவும் அவரின் உடல் எங்கே கிடக்கும் எனக் கடத்தல்காரர்கள் நேற்று மொசூலுக்குத் தொலைபேசி மூலம் கூறியதாகவும் ஆயர் வர்தூனி தெரிவித்தார். பேராயரின் இறப்புக் குறித்து பேசிய ஆர்பில் ஆயர் ராபான் அல் காஸ், கிறிஸ்துவின் உயிர்ப்பை எதிர்நோக்கியிருக்கும் இவ்வேளையில் இத்துயரச் செய்தி ஈராக் திருச்சபைக்கு பாரமான சிலுவையாக இருக்கின்றது என்றார்.

## வன்முறை ஒழுக்கக்கேடான செயற்பாடுகளை நியாயப்படுத்த மதங்களைப் பயன்படுத்தாதீர்கள்

### வத்திக்கான் - அமெரிக்கா இணை அறிக்கையில்

அண்மையில் அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ற்ருக்கும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஸ்சுக்கும் இடையிலான தனிப்பட்ட சந்திப்பின் பின்பு வத்திக்கானும் அமெரிக்காவும் அமெரிக்க அதிபர் மாளிகையில் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது.

அமெரிக்க அதிபர் புஸ் அவர்கள் அண்மையில் அமெரிக்காவிற்கு பயணம் மேற்கொண்டிருந்த திருத்தந்தையை எல்லா அமெரிக்க மக்கள் சார்பாக வரவேற்று, அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைக் கூறியதோடு அவர் முழு மனித இனத்திற்கும் ஆற்றிவரும் ஆன்மீக மற்றும் அறநெறி வழி காட்டல்களுக்காகவும் அவருக்கு நன்றி தெரிவித்தார். மேலும் திருத்தந்தையின் அப்போஸ்தலிக்கப் பணியில் அவர் வெற்றிகாண வாழ்த்துக்களையும் கூறினார்.

மேலும், அவர்களது சந்திப்பின்போது தங்கள் இருவரோடும் சம்மந்தப்பட்ட பல்வேறுபட்ட பொது விடயங்களையும், குறிப்பாக அறநெறி (Morality) மற்றும் சமய சம்மந்தமான விடயங்கள் பற்றியும் ஆழமாக ஆராய்ந்தனர். குறிப்பாக மனித மாண்பு மதிக்கப்படல், மனித உயிர்கள் பாதுகாக்கப்படல், திருமணம், குடும்பவாழ்வு, எதிர்கால சந்ததியினரின் கல்வி, மனித உரிமைகள், சமயச் சுதந்திரம், அபிவிருத்தி, வறுமைக்கு எதிரான போராட்டம் போன்ற விடயங்கள் பற்றியும் கலந்துரையாடினர். குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில் நிலவும் வறுமையை இல்லாமல் ஒழிப்பதற்கு அமெரிக்க அரசாங்கம் அளித்துவரும் நிதி உதவிகளைத் திருத்தந்தை பெரிதும் பாராட்டினார். அத்தோடு அப்பாவி மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறை மற்றும் ஒழுக்கக்கேடான செயற்பாடுகளை நியாயப்படுத்த மதங்களைப் பயன்படுத்துவதை வன்மையாகக் கண்டித்தனர். மேலும், மனித நேயம், தனி மனித உரிமைகள் மதிக்கப்படும் விதத்தில் பயங்கரவாதத்தை உரியமுறையில் எதிர்கொள்வது பற்றியும் ஆராய்ந்தனர்.

திருத்தந்தை மற்றும் அமெரிக்க அதிபர் ஆகிய இருவரும் தங்களது இச்சந்திப்பின்போது மத்திய கிழக்கில் இடம்பெறும் வன்முறைகள் பற்றியும் அதிக கவனம் செலுத்தினர். குறிப்பாக பலஸ்தீன - இஸ்ராயேல் பிரச்சினைக்கான தீர்வு, இரு நாடுகளும் பாதுகாப்பாகவும் சமாதானமாகவும் வாழக்கூடிய சூழலை உருவாக்குதல், மற்றும் லெபனானுடைய இறைமை மற்றும் சுதந்திரத்திற்கான பரஸ்பர ஒத்துழைப்பு, ஈராக்கின் தற்போதைய நிலவரம் குறிப்பாக அங்கு வாழும் கிறிஸ்தவக் குழுக்களின் நிலமை பற்றியும் ஆராய்ந்தனர். மத்திய கிழக்கில் இடம்பெறும் வன்முறைகள் நீங்கி, சுமூகமாக ஒரு சூழலை உருவாக்க வேண்டுமென்ற தங்களது நம்பிக்கையையும் வெளியிட்டனர்.

அத்தோடு இலத்தீன் அமெரிக்காவின் நிலமை பற்றியும் குறிப்பாக அங்கு இடம்பெயர்ந்து வாழும் மக்களின் நலன்கள் பற்றியும், அவற்றை நிறைவேற்ற ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு கொள்கை உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் ஆழமாக கலந்துரையாடப்பட்டதாக அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போலந்து நாட்டில் அதிகரித்துவரும் ஒப்புரவு அருட்சாதனம்

போலந்து நாட்டு மக்கள் ஒப்புரவு அருட்சாதனத்தை பாவங்களை அறிக்கையிடும் ஒரு சாதாரண சடங்காக நோக்காமல் அதனை அருள் பாய்ந்துவரும் ஒரு முழுமையான அடையாளமாக ஏற்றுப் பயன்பெறுவதாக அண்மையில் எடுக்கப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. போலந்து நாட்டின் வாரப்பத்திரிகை ஒன்று இத்தவக்காலத்தில் நடத்திய ஆய்வுகளின்படி போலந்து நாட்டு மக்கள் தொகையில் 90 விழுக்காடாக இருக்கும் கத்தோலிக்கருள் 75 விழுக்காட்டினர் நல்ல சமயப் பற்றுடையவர்களாக உள்ளார்கள் எனவும் 51.7 விழுக்காட்டினர் அடிக்கடி பாவ மன்னிப்புப்பெறுவதாகவும் ஒப்புரவு அருள்சாதனம் அவர்களுடைய வாழ்வில் நல்ல குணநலன்களை வடிவமைப்பதில் பெருமளவில் உதவுவதாகவும் அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 11 - 03 - 1936

உதிர்வு 05 - 06 - 2000

### நீ. சந்தியாப்பிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபர், ஒலிமடு, நானாட்டான்)

பாசத் தெய்வமே! ஆண்டுகள் எட்டு ஆனாலும் எம் கண்ணீர்த் துளிகள் ஓயவில்லையையா! என்றும் அணையாத தீபமாய் எம் இதயத்தில் பிரகாசித்த அகல் விளக்கே! நினைக்காத நாளில்லை உங்களை. உம் அன்புமிகு செயல்களை மறக்க முடியவில்லையே! உங்கள் ஆன்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி ஈரவிழிகளுடன் பிரார்த்திக்கின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும்:*

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## மன்னார் மறைமாவட்டத்தில்
## இயேசுசபை அகதிப் பணியினரின் (ஜே. ஆர். எஸ்.)
# அண்மைக்காலச் செயற்பாடுகள்

மனித நேயப்பணிகளில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்தும் கத்தோலிக்க நிறுவனமாகிய இயேசு சபை அகதிப்பணி பல்வேறு மாவட்டங்களில் தமது பணிகளை ஆற்றி வருகின்றது. இதில் மன்னார் மாவட்டம் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. மன்னார் மாவட்டத்திலே மன்னார், விடத்தல்தீவு, மடு, அடம்பன் என எந்த பகுதியினையும் விட்டுவைக்காது பாதிக்கப்பட்ட மக்கள் எங்கு இருக்கின்றார்களோ அங்கு தேவைக்கேற்ப தனது பணியினை ஆற்றி வருகின்றது. இந்நிறுவனத்தின் இலங்கைக்கான இயக்குனராக அருட்பணி. கமல் அன்றாடி (S.J.) அவர்களும், மன்னார் இணைப்பாளராக அருட்சகோதரி சகாயராணி (CIC) அவர்களும் சிறப்பாகப் பணியாற்றுகின்றனர்.

### ஜே. ஆர். எஸ். நிறுவனத்தின் பணிகள்

01. கல்விப்பணி, 02. உளவளத்துணை, 03. அவசரகாலப்பணி 04. சுய உதவிக்குழு 05. கிராம அபிவிருத்தி ஒன்றியம் 06. தையல் பயிற்சி மையம் 07. உற்பத்தி மையம் 08. வாழ்வியல் பயிற்சி 09. ஆங்கிலக் கற்கைநெறி ஆகியனவாகும்.

### கல்விப்பணி செயற்பாடுகள்

ஜே. ஆர். எஸ். நிறுவனமானது இவ்வருடம் "ஒழுக்கம்" எனும் கருப்பொருளில் கல்விப்பணியினை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் ஜே. ஆர். எஸ். நிறுவனத்தினால் நடாத்தப்படும் மாலைநேர கல்வி மைய மாணவர்களுக்கு இவ்வருட கருப்பொருளின் அடிப்படையில் ஒரு நாள் கருத்தமர்வு நடாத்தப்பட்டது. இக்கருத்தமர்வுகளை இணைப்பாளர் அருட்சகோதரி சகாயராணி (CIC) மற்றும் கல்வித்திட்ட இணைப்பாளர் திரு. மோயீஸ் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் பணிப்பாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நடாத்தினர்.

**கருத்தமர்வு நடைபெற்ற திகதியும் கலந்துகொண்ட மாலைநேர கல்வி மையங்களும்**

10.04.2008 - குஞ்சுக்குளம், பெரியமுறிப்பு

11.04.2008 - பள்ளிமுனை, சாவற்கட்டு, சாந்திபுரம், பெரியகமம்.

12.04.2008 - தம்பனைக்குளம், களிமோட்டை, கல்நாட்டி, முருங்கன் (டொன்பொஸ்கோ), பொன்தீவுகண்டல், சுண்டிக்குளி.

16.04.2008 - பேசாலை, தோட்டவெளி, சின்னக்கரிசல், ஓலைத்தொடுவாய், காட்டாஸ்பத்திரி, கொன்னயன் குடியிருப்பு.

17.04.2008 - கொவ்வங்குளம், எருவிட்டான், அச்சங்குளம், சமயபுரம்.

18.04.2008 - வாழ்க்கைப் பெற்றான்கண்டல், மடுக்கரை, அளவக்கை, மாளிகைப்பிட்டி.

அத்தோடு ஜே. ஆர். எஸ். நிறுவனத்தால் நடாத்தப்பட்டு வரும் கல்வி மையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஏப்ரல் மாதம் 23, 24, 25 ஆகிய திகதிகளில் ஜே. ஆர். எஸ். அலுவலகத்தில் 03 நாட்கள் வதிவிடப்பயிற்சி நடாத்தப்பட்டது. இப்பயிற்சியில் 54 ஆசிரியர்கள் முழுமையாக பங்குபற்றினர்.

### உளவளத்துணைச் செயற்பாடுகள்

ஜே. ஆர். எஸ். நிறுவனத்தின் உளவளத்துணைப் பிரிவினர் தமது பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர். மனங்களைக் கட்டியெழுப்பும் நோக்கோடு சிறுவர் தொடக்கம் பெரியோர்வரை பாரபட்சமின்றி இவர்கள் அனைவருக்கும் உளவளம் அளித்து வருகின்றனர். இவர்கள் அண்மைக்காலத்தில் தனிநபர் உளவளத்துணை குழுச்சிகிச்சை அளித்துள்ளனர். அத்தோடு மாணவர்களுக்கு கருத்தமர்வுகளையும் நடாத்தியுள்ளனர்.

### அவசரகாலப்பணிச் செயற்பாடுகள் :-

அரச கட்டுப்பாடற்ற விடத்தல்தீவு, தாளையடி, பொக்கனை, முல்லைத்தீவு, நாச்சிக்குடா, முழங்காவில், கிளிநொச்சி, இலுப்பைக்கடவை, வலைப்பாடு ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது களிமோட்டையில் வசித்து வரும் மக்களுக்கு முதற் கட்டமாக 33 குடும்பங்களைச் சேர்ந்த 58 நபர்களுக்கும், இரண்டாம் கட்டமாக 78 குடும்பங்களைச் சேர்ந்த 187 நபர்களுக்கும் 03 நாட்கள் சமைத்த உணவு அளிக்கப்பட்டது. அத்தோடு அவர்களுக்கான உடைகள், உள்ளாடைகள், பாட்டா, மருந்துப்பொருட்கள் என்பன அவர்களது தேவையறிந்து கொடுக்கப்பட்டன. மேலும் மாணவர்களுக்கு தைத்த சீருடைகளும், காலணிகளும் வழங்கப்பட்டன.

### சுய உதவிக் குழுக்கள்

மன்னார் மாவட்டத்தில் ஜே. ஆர். எஸ். நிறுவனமானது 11 சுய உதவிக்குழுக்களை கிராம மட்டங்களில் இயக்கி வருகின்றது. இதில் 172பேர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களை மகிழ்விக்கும் முகமாக மகளிர் தினவிழா 08.04.2008 அன்று ஜே. ஆர். எஸ். அலுவலகத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இதற்குப் பிரதம விருந்தினராக மன்னார் குருமுதல்வர் அருட்தந்தை விக்ரர் சோசை அடிகளாரும், சிறப்பு விருந்தினராக பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மெல் அவர்களும் கலந்துகொண்டனர்.



### ஆங்கிலக்கற்கை மையம் :-

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றுக்காக காத்துக்கொண்டிருந்த மாணவர்களில், நேர்காணல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு 03 மாதங்கள் விரிவுரை மற்றும் கணனி ஊடாக எழுத, வாசிக்க, பேச பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இவற்றிற்கு ஆசிரியராக திருமதி பெனடிக்ரா அவர்களும், பொறுப்பாளராக செல்வி டிலுசிக்கா அவர்களும் இணைந்து செயற்பட்டனர்.

இப்பயிற்சிபெற்ற மாணவர்கள் 07.04.2008 அன்று பயிற்சியினை நிறைவு செய்து சான்றிதழ்களும் பெற்றனர். இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக இந்தியாவில் இருந்து பணிக்காக வந்திருந்த அருட்தந்தை ஆரோக்கியம் அடிகளார் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

### கிராம அபிவிருத்தி ஒன்றியம் :-

2004 இற்கு முன்னர் இந்தியாவிலிருந்து மீளத்திரும்பியவர்களை ஒன்றிணைத்து அவர்களின் தொழில் விருத்திக்காக குடும்பத்திற்கு தலா 10,000 அடிப்படையில் 23 கிராமத்திலுள்ள 396 பேருக்கு சுழற்சி முறைக் கடன் தொகை வழங்கப்பட்டு அவர்கள் மீளச்செலுத்தியதன் அடிப்படையில் சாந்திபுரம், தரவன்கோட்டை ஆகிய கிராமங்களில் உள்ள 30 பேருக்கு தலா 11000 வீதம் 23.04.2008 அன்று மிண்டும் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது

## மனிதனின் ஆன்மீக வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்
# புதுப்பித்தல் இன்றியமையாதது
## இளைஞர்களின் தியானங்கள் தொடர்பாக
## இயேசுராஜா அடிகளார் கருத்து



ஒவ்வொரு மனிதனின் ஆன்மீக வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் புதுப்பித்தல் இன்றியமையாதது என மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணியாளர் இயேசுராஜா அடிகளார் தெரிவித்தார்.

இவ்வாண்டு தவக்காலத்தின் -போது இளைஞர்களுக்கான புதுப்பித்தல் தியானங்களை பல்வேறு இடங்களில் ஒழுங்குசெய்து நடாத்திய அவர் இத்தியானங்கள் தொடர்பாக மன்னாவுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், புதுப்பித்தல் புதுமையான ஒன்றல்ல. புதுப்பித்தல் ஊடாகத்தான் பெரும் பலனைப் பெறமுடியும். நிலமானது உழுது பண்படுத்தப்பட்டால்தான் விளைச்சல் அதிகமாகும். துணியானது கழுவப்பட்டால்தான் அழுக்கு அகன்று புதுப்பொலிவுடன் காட்சியளிக்கும். அதேபோன்று ஆன்மீகவாழ்விலும் புதுப்பித்தல் அவசியமானதொன்றாகும்.

ஒரு மனிதப்பிறவி புனிதநிலையை அடைவதற்குப் புதுப்பித்தல் தேவையானது. புதுப்பித்தல் ஊடாகத்தான் புதுப்பொலிவை, புத்தொளியை புத்துணர்வைப் பெறமுடியும். புதுப்பித்தலானது வளர்ச்சிக்கு அடிகோலுகின்றது. உறைந்த நிலையிலுள்ள திரவம் அசைவடையாது. உறைந்துபோன வாழ்வில் மாற்றமோ முன்னேற்றமோ இடம்பெற வாய்ப்பில்லை. முயற்சி இல்லாமல் முதிர்ச்சியை எதிர்பார்ப்பது பொருத்தமற்றது. எனவே ஒரு மனிதனின் ஆன்மீக வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் புதுப்பித்தல் இன்றியமையாததொன்றாகும். இதற்கு இளைஞர் சமுதாயம் விதிவிலக்கல்ல. மனிதனில் புதுப்பித்தல் இடம்பெறுவது பெரும்பாலும் தியானத்தினூடாகவே. மேற்கூறப்பட்டவைகளை மனதிற்கொண்டு மறைமாவட்ட இளைஞர்களுக்கான தவக்காலத்தியானம் இவ்வருடம் உபமறைக்கோட்ட மட்டத்தில் இடம்பெற்றது.

இன்றைய நல் இளைஞன் நாளைய நற்தலைவன், ஒரு சமூகத்தின் தலைவன், அச்சமூகத்தின் வழிகாட்டியும்கூட. ஒரு தலைவனிடத்தில் இருக்கவேண்டிய பண்புகளில் முதன்மையானது ஆன்மீகம். பணமோ, பட்டமோ, பதவியோ ஆன்மீகத்திற்கு அடுத்ததாகவே இருக்க முடியும். ஆன்மீகம் இல்லாத வாழ்வு வயலிலே காட்சிக்கு நிறுத்தப்படும் உடக்குக்குச் சமன். எனவே ஒவ்வொரு மனிதனுக்கும் ஆன்மீகம் இன்றியமையாதது.

ஒவ்வொரு இளைஞனும் நாளைய குடும்பத்தலைவன். ஒவ்வொரு யுவதியும் நாளைய குடும்பத் தலைவி. பல குடும்பங்கள் ஒன்றிணைந்துதான் ஒரு சமூகம் உருவாகின்றது. சமூகம் நல் சமூகமாக தோன்றுகின்றதென்றால் அதற்கான காரணம் இச்சமூகத்தை உருவாக்கியுள்ள பல நல்ல குடும்பங்களே. குடும்பங்கள் நல்லவையாகத் தோன்றுகின்றதென்றால் அதற்குக்காரணம் அக்குடும்பத் தலைவர்களே. இவர்கள் உயர்ந்தவர்களாகக் கணிக்கப்படுகின்றார்கள் என்றால் அதற்கான காரணம் அவர்கள் இளைஞர்களாக இருந்தபோது பெற்றுக்கொண்ட உருவாக்கமே.

எனவே இளைஞர்கள் கவனிக்கப்பட வேண்டியவர்கள். இளமைப்பராயத்தில் இளைஞனது இதயத்தில் இறையருள் பொழியப்பட்டதால்தான் இவ் இளைஞன் ஆன்மீகத்தில் வளர்ந்து காலகெதியில் ஆன்மீகத்தில் முதிர்ச்சிபெற்று அர்த்தமுள்ள தலைமைத்துவத்தை அமுல்படுத்தவுள்ள சிறந்தவொரு வழிகாட்டியாக திகழ்வான் உலகமாயைகள் அவனைக்கண்டு ஒதுங்கிச் செல்லும், ஒடுங்கிப்போகும். எனவே இளைஞன் இறைவார்த்தையை உள்ளத்திலேந்தி கிறிஸ்துவுக்குச் சாட்சியம் பகரும் கருவியாகத் திகழ்ந்திடவே இத்தியானங்கள் இளைஞர்களுக்கென வருடாவருடம் நடாத்தப்பட்டு வருகின்றன என இயேசுராஜா அடிகளார் தெரிவித்தார்.

## மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில்
# இளைஞர்களுக்கான புதுப்பித்தல் தியானங்கள்

மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இவ்வருடம் மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இளைஞர்களுக்கான தவக்காலத் தியானங்கள் புதுப்பித்தல் தியானங்களாக நடைபெற்றன. இத்தியானங்களை இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணியாளர் பி. யேசுராஜா அடிகளார் ஒழுங்குபடுத்தினார்.

**கடந்த 20.02.2008** அன்று பேசாலை உபமறைக் கோட்டத்தில் பேசாலை ஆண்கள் மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட தியானத்தில் பேசாலை, தோட்டவெளி, கீளியன் குடியிருப்பு, தலைமன்னார் ஆகிய பங்குகளைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டனர். அருட்தந்தை சூ. போன்சீன் (அ.ம.தி.) திரு. செபஸ்தியாம்பிள்ளை (மறை ஆசிரியர்) ஆகியோர் இதில் கருத்துரைகள் வழங்கினர்.

**கடந்த் 24.02.2008** அன்று வவுனியா உபமறைக் கோட்டத்தில் கோமரசன்குளம் கல்வாரித்திருத்தலத்தில் நடாத்தப்பட்ட தியானத்தில் வவுனியா, கோமரசன்குளம், பம்பைமடு ஆகிய பங்குகள் கலந்துகொண்டன. அருட்தந்தை சூ. போன்சீன் (அ.ம.தி.), அருட்தந்தை றொக்ஸன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

**கடந்த 02.03.2008** அன்று செட்டிகுளம் உபமறைக்கோட்டத்தில் இலுப்பைக் குளம் ஆலயத்தில் நடாத்தப்பட்ட தியானத்தில் செட்டிகுளம், இலுப்பைக்குளம் ஆகிய பங்குகள் கலந்துகொண்டன. அருட்தந்தை ஆரோக்கியம், அருட்சகோதரர்கள் ஜெகாந்தன், மத்தியு தோமஸ் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

**கடந்த 08.03.2008** அன்று நானாட்டான் உப மறைக்கோட்டத்தில் நானாட்டான் ஆலயத்தில் நடாத்தப்பட்ட தியானத்தில் நானாட்டான், அரிப்பு, வஞ்சியங்குளம், உயிலங்குளம் ஆகிய பங்குகள் கலந்துகொண்டன. அருட்தந்தை வின்சன்ற் (சலேசியன் சபை), அருட்சகோதரர் ஜெகானந்தன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

**கடந்த 15.03.2008** அன்று முருங்கன் உபமறைக் கோட்டத்தில் முருங்கள் டொன்பொஸ்கோ நிலையத்தில் நடாத்தப்பட்ட தியானத்தில் முருங்கள், அளவக்கை, கற்கிடந்தகுளம் ஆகிய பங்குகள் கலந்துகொண்டன. அருட்தந்தை அ. யூட்குரூஸ், அருட்தந்தை சூ. டக்லஸ் லோகு ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

09.03.2008ல் இடம்பெறவிருந்த மன்னார் உப மறைக்கோட்டத்திற்குட்பட்ட மன்னார், பள்ளிமுனை, தாழ்வுபாடு, வங்காலை ஆகிய பங்கு இளைஞர்களுக்கான தியானம் இடம்பெறவில்லை. அன்றைய தினம் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் கொழும்பிலிருந்து வருகைதந்த தியானக் குழுவினரால் பொதுத் தியானம் நடாத்தப்பட்டதன் காரணத்தினால் மேற்குறிப்பிட்ட பங்கு இளைஞர்கள் அத்தியானத்தில் பங்கெடுக்கப் பணிக்கப்பட்டனர்.

உபமறைக் கோட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட தியானங்களில் அருளுரைகள், நற்கருணை ஆராதனை, பாவசங்கீர்த்தனம் மற்றும் திருப்பலியும் இடம்பெற்றன. ஒவ்வொரு தியான நிலையங்களிலும் தியானத்தில் பங்கெடுத்தோரில் 80%த்திற்கும் மேற்பட்டோர் பாவசங்கீர்த்தனம் செய்துகொண்டமை சிறப்பம்சமாகும்.

ஒவ்வொரு தியானத்தின் இறுதி நிகழ்வாக மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் 2008ம் ஆண்டுக்கான செயற்றிட்டம் பற்றி மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்தந்தை பி.ஜேசுறாஜா அவர்களினால் விரிவாக விளக்கப்பட்டது.

*செல்வி. சே. கவிதா, செயலர், மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு, மன்னார் மறைமாவட்டம்,*

## மன்னாரில் உருவாகிறது....

*(4ம் பக்கத் தொடர்ச்சி...)*

இச்செய்தி அறிந்து மன்னார் மக்கள் கொதித்தெழுந்தனர். பத்திரிகைகளிலும் செய்திகள் கசிய ஆரம்பித்தன. இந்த நிலையில் மன்னாரில் புதிய தாம்போதி வேலைகள் மீண்டும் அமையவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. 80 ஆண்டுகள் பழமைவாய்ந்த மன்னார் தாம்போதி பிரிட்டிஸ் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் கட்டப்பட்ட முதலாவது நீளமான கடற் பாலமாகும். சுமார் 4 கிலோ மீற்றர் நீளமும் 10 அடி அகலமும் கொண்ட ஒடுக்கமான பாலமாகும். இதற்கான அத்திவாரக் கல்லை அப்போதைய மன்னார் அரச முகவர் 1928ல் நாட்ட 1930ல் பிரித்தானிய ஆளுனரால் திறந்து வைக்கப்பட்டது.

1980ல் இதன் ஆயுள் முடிய வேண்டும். 1964ல் ஏற்பட்ட கொடிய சூறாவளியினால் இப்பாலம் முற்றாக சேதமுற்று 1966ல் மீள் நிர்மாணம் செய்யப்பட்டது. பின்னர் 1990ல் விடுதலைப் புலிகளால் இப்பாலம் தகர்க்கப்பட்டு பாதை வழிப் பிரயாணம் தடுக்கப்பட்டது. அப்போது மக்கள் குறிப்பிட்ட தூரத்தை படகின் மூலமே கடந்து சென்றனர். 1991ல் அன்றைய ஜனாதிபதி பிரேமதாஸா அவர்களால் தற்காலிக பாலம் நிர்மாணிக்கப்பட்டது. இன்றுவரை இப்பாலத்திலேயே சகல கனரக வாகனங்களும் ஓடித் திரிகின்றன. ஓடும்போது பாலமும் ஆட்டம் போடும். இந்த நிலையிலேயே புதிய தாம்போதிக் கதை மீண்டும் அடிபட ஆரம்பித்தது. எதற்கும் பாலவேலை ஆரம்பிக்கும் வரை இப்போதைக்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

*தகவல் - மக்கள் காதர்*

# வானம் விழித்துக் கொண்டது

## இயேசுவினுடைய தவத்தின் வலிமையை
## பல்வேறு கோணங்களில் எடுத்துக்காட்டும் சிந்தனைக் கட்டுரை

அருட்சகோதரர் கலாநிதி எஸ். ஏ. ஐ. மத்தியூ
கல்முனை

### இயேசுவின் தவம்
### ஆசைக்கு அடிபணியாத உறுதியைக் கொடுக்கின்றது

மத்தேயு எழுதிய யேசுவின் வரலாறு அவரது திருமுழுக்குடன் ஆரம்பமாகின்றது. இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெறுகின்றார். யோர்தான் ஆற்றில் முழுகுவதன் மூலம் இது நடைபெறுகின்றது. ஆற்றைவிட்டு இயேசு வெளியே வருகின்றார். அப்போது வானம் திறப்பதாகவும் கடவுளின் ஆவி அவர்மேல் இறங்குவதாகவும் மத்தேயு அழகுற அமைக்கின்றார். *"என் அன்பான மைந்தன் இவரே! இவர் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்"* 'பூரிப்பு' மிக அழகான அன்புச் சொல். அது நிறைவுச் சொல். ஆனால் இயேசு திருமுழுக்கால் பெற்ற அருட்கொடை பலன் தருமா? அது பரிசோதிக்கப்பட வேண்டியதொன்று.

இந்துக்கள் கங்கையில் மூழ்கியும், நம் நாட்டவர்கள் கதிர்காமத்தில், மாணிக்க கங்கையில் மூழ்கியும் அருள் தேடுகின்றனர். அருள் பெறுவது சரி. அந்த அருட்கொடை சோதிக்கப்பட வேண்டும்.

திருமுழுக்கு அளித்த யோவானே இதை அழகாகக் குறிப்பிடுகின்றார். "நீங்கள் மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களில் காட்டுங்கள்" இது ஒரு அறைகூவல். இயேசுவுக்கும்தான். இயேசு பெற்றுக்கொண்ட கடவுளின் தூய ஆவியே மத்தேயு நற்செய்தியின்படி அவரைப் பாலை நிலைத்திற்கு அழைத்துச் செல்கின்றது. ஏன்? சோதிக்கப்படுவதற்கு – தவத்தின் வெற்றி செயற்பாடுகளில் தங்கியிருக்கின்றது.

பாலைநிலத்தில் இயேசு நாற்பது நாட்கள் தவம் செய்தார். ஒன்றும் உண்ணவுமில்லை, குடிக்கவும் இல்லை. இது கடும் தவம். அதன்பின் அவரைப் பரீட்சிக்க அலகை வருகின்றது என்று நற்செய்தி கூறுகிறது. நாற்பது நாட்களுக்குப்பின் அவர் பசியுற்றார். இது என்ன பசி? - மனதில் ஒரு போராட்டம்!
தவம் வெற்றியளிக்கின்றது. மிக உயர்ந்த அருட்கொடைகள் இயேசுவுக்குக் கிட்டுகின்றன. இப்போது அவரால் அற்புதங்கள் செய்ய முடியும்.
கற்களை அப்பமாக்க முடியும்
கோவில் முகட்டிலிருந்து கீழே குதிக்கவும் முடியும்
உலக அரசுகளுக்கு அதிபதி ஆகவும் முடியும்.

இவை சோதனைகள்! தவம் செய்தவர் இச்சோதனைகளுக்கு அடிபணியக்கூடாது. இயேசு இங்கு வெற்றி பெறுகின்றார். "மனிதன் அப்பத்தினால் மட்டும் உயிர் வாழ முடியாது. மனிதன் கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வான்"

இயேசுவின் பிற்கால வாழ்க்கையில் பல்வேறு துன்பங்கள் வந்தபோதும் இந்தத் தவத்தின் தீர்மானத்திலிருந்து சற்றேனும் அவர் விலகவில்லை.

"கடவுளாகிய உன் ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்" பின்னாளில் இது யேசுவின் வாழ்க்கையில் ஒரு மேல்வரிச் சட்டமாகியது. ஒருவன் இரண்டு தலைவர்களுக்கு பணிவிடை செய்ய முடியாது எனத் திருவிவிலியம் கூறுகின்றது.

பக்தியும், இறைச்சித்தத்திற்கு அமைவதுமே வாழ்வு. ஆசைக்கு அடிபணிதல் தன்னை ஏமாற்றுதல் ஆகும். இந்த அடிப்படையில் கட்டி எழுப்பப்படும் மனித வாழ்வு குறைவானது. ஆனால் தன் இச்சைகளை மறுதலிக்கிறவன் - அதற்கு அடிபணியமாட்டான். அவன் ஒளியில் நடக்கின்றான்.

இயேசுவின் தவம் இதனை நிரூபிக்கின்றது. அவரது பிற்காலப் போதனை வாழ்க்கையில் தாம் போதித்தவைகளை வாழ்ந்து காட்டுகிறார். இது திருமுழுக்கின் உள்ளார்ந்த ஆன்ம வெளிப்பாடு. இயேசு பரிசுத்த ஆவியால் தவத்திற்கு அழைக்கப்படுகின்றார். அதிலே அவர் வெற்றி வாகை சூடுகின்றார். வரலாறு கண்ட மாபெரும் ஞானி ஆகின்றார். இதுவே திருமுழுக்கு என்ற நுழைவாயில் காட்டும் தவம்.

### I. "மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்" (மத். 4: 4)

தூய ஆவி அவரைப் பாலைநிலத்துக்கு அனுப்பிவைக்கிறது. பாலைநிலம் கடும் வெயில் எரிக்கும் இடம். அங்குதான் தவம் மேற்கொள்கிறார் இயேசு. அப்போது சாத்தான் அவரைச் சோதிக்கிறது.

கற்களை அப்பமாக்க வேண்டும். இதற்கு இயேசு கூறும் பதில், "மனிதன் அப்பதினால் மட்டுமன்று இறைவனின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையினாலும் உயிர் வாழ்கிறான்" என்பதாகும். இத்தகைய தவம் மேற்கொண்டவர்களுக்குத்தான் மற்ற மக்கள் தம்மை துன்புறுத்தும்போது பலவித இழிசொற்களால் இன்னா செய்கின்றபோது மகிழ்ச்சியாக இருக்கும்படி படிப்பிக்க முடியும். இதுதான் தவம். இந்தப் பெரிய சாதனையாளர் சாதாரண பிறவியன்று, அவர் தெய்வப் பிறவி.

மாற்கு நற்செய்தியில் இயேசுவின் வாழ்வில் முக்கிய இடத்தைப் பெறுவது செபம். இயேசு விடியற்காலை கருக்கலில் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார். அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார் என்று மாற்கு நற்செய்தி கூறுகின்றது. இந்தப் பிரார்த்தனைப் பின்னணியே இயேசு மகத்தான ஞானக்காரியங்களில் ஈடுபடக் கருவூலமாக அமைந்தது.

காலையில் இருந்து மாலை வரை மூன்று முக்கிய விடயங்களை நாம் சிந்திப்பது அவசியம்.
1. கடவுளை மறவாதே. 2. உலகத்தில் நம்பிக்கை வையாதே.
3. மரணத்திற்குப் பயப்படாதே.

இந்தத் திடமான முடிவுகள் மூன்றும் நம் வாழ்க்கைக்கு அவசியம். பிறர் உனக்குச் செய்த தீமைகளை மறப்பது அவசியம். அவ்வாறே நீ பிறருக்குச் செய்த நன்மைகளை மறந்துவிடு. பிறர் உனக்குச் செய்த தீமைகளை எப்போதும் எண்ணிக் - கொண்டிருப்பாயாகில் அது பாவமாகும். பிறருக்கு நீங்கள் செய்த நன்மைகளை எண்ணிக்கொண்டிருப்பீர்களாகில் அவர்கள் உங்களுக்கு பிரதி உபகாரம் செய்ய வேண்டும் என எண்ணுவீர்கள். இதனால்தான் கீதை சொல்கிறது "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" யேசு சொல்கிறார் "உன் வலது கை செய்வதை இடது கை அறியாது இருக்கட்டும்"

யேசு இன்னும் மொழிகிறார். "தூய்மையான மனம் உடையோர் மகிழ்ச்சிக்குரியவர்கள். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" இங்கு உள்ளத்தின் தூய்மை முக்கியத்துவம் பெறுகின்றது. வெறும் வாய்ச்சொற்களால் யாதும் பயனில.

நீங்கள் உப்பைப் போன்றவர்கள். உப்பு பிரயோசனமானது. ஆனால் உப்பு தன் சுவையை இழந்துவிடுமாயின் மீண்டும் அது தன் சுவையைப் பெற்றுக்கொள்ள முடியாது. அது பிரயோசனம் அற்றது. அது வெளியே எறிவதற்குத்தான் தகுதிபெற்றது. "நீங்களே உலகின் ஒளி" உங்களுடைய ஒளி மற்றவர்களுக்குத் தென்படட்டும். வழி காட்டட்டும். உங்களது ஒளி, உங்களுடைய நல்ல செயற்பாடுகளே. அச்செயற்பாடுகளே பரமனை மகிழ்ச்சி அடையச் செய்யும்.

இக்கூற்றுக்களை யேசு தம் வாழ்க்கையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கடைப்பிடித்தார். அது அவரது தவத்தின் மேன்மையாகும். *"தவம் செய்வார் தம் கருமம் செய்வார் அது செய்யாதார் தம் வாழ்க்கையை அவம் செய்கிறவர்கள்"* எனக் கூறுகிறது தமிழ் மறை.

இறைமகன் யேசுவுக்கு உலகம் அளித்த பரிசு சிலுவை மரணம். அவரை நிர்வாணமாக்கினர், சிலுவையடியில் இயேசுவின் தாய் நிற்கின்றார் என்பதைக்கூட அந்த நீசர்கள் பொருட்படுத்தவில்லை. யேசு இந்த நீசத்தனமான மிலேச்சர்களுக்காகப் பிரார்த்தனை செய்கிறார். உயிர் ஊசலாடும்போது – "பிதாவே அறியாமற் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்" என்கிறார். இங்கு தவத்தின் உயர்ந்த ஞானியைக் காண்கின்றோம்.

### II. "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக"(லூக். 4:8)

இது யேசுவின் தவத்தின் முக்கிய கட்டம். நமது உள்ளத்தில் இருக்கின்ற ஆசைகளை விரட்டுவது அவ்வளவு இலகுவானது அல்ல. ஆசை யாரைத்தான் விட்டது? அதிகாரத்தை அனுபவிப்பவர்கள் தொடர்ந்தும் அவ் அதிகாரத்தில் இருக்க எடுக்கும் முயற்சிகளை நாம் அறிவோம். உலகம் முழுதும் ஒருவன் ஆண்ட பொழுதிலும் கடல்மீது ஆணைகொள்ள விரும்புவர் என்பது நாம் கேள்விப்படும் விடயங்கள்.

இயேசுவினுடைய தவம் அவருக்குச் சிறந்த நாட்களைக் கொடுத்திருந்தது. அது நாற்பது நாட்கள் இரவும் பகலும் ஒன்றும் சாப்பிடாமலும் குடியாமலும் இருந்தது. யேசுவின் மனம் கட்டுப்பாட்டிற்குள் வந்த மனம். கடவுளின் வார்த்தைக்கு உயிர் கொடுத்த மனம்.

மனிதர்களே பறவைகளைப் பாருங்கள் அவைகள் உணவை களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதில்லை. பசிக்கும்போது மட்டும் உணவைத் தேடிச்செல்கின்றன. பின்னர் அமைதியாக ஆனால் அழகாகப் பாடிப்பறந்து திரிகின்றன. இவை எல்லாம் வயல் வெளியில் நாம் காணும் காட்சிகள்.இவைகளை எல்லாம் யேசு உற்றுநோக்கினார். இயற்கையின் ஞானத்தை மனிதனுக்கு ஊட்டினார்.

இயற்கையில் இருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம் உண்டு. சுனாமி வரப்போகிறது என்று மிருகங்கள், ஐந்துக்களுக்குத் தெரிந்திருந்தன. சுனாமி வரும் முன் ஏராளமான பாம்புகள் மட்டக்களப்பு வாவியுள் தஞ்சம் புகுந்தன. இன்றைய விஞ்ஞான மனிதன் இவற்றை அறிந்துகொள்ளவில்லை. விஞ்ஞான அறிவுத் தேட்டங்கள் வெறும் தேட்டங்களாகவே இருக்கின்றன. விஞ்ஞான சிந்தனைகளை அவை வளர்க்கவில்லை. பழம் பழுத்தால் வௌவாலை வா என்றா அழைக்கின்றது. எங்கோ இருக்கும் வௌவால்களும், அணில்களும், கழுகுகளும், பறவைகளும் இன்னும் பல மிருகங்களும் தம் விஞ்ஞான அறிவால் ஊட்டமும் தேட்டமும் பெறுகின்றன.

யார் என் தாய்? யார் என் சகோதரர்கள்? கடவுளின் வார்த்தையை கேட்பவர்களே என் தாயும் சகோதரர்களும் இது தவத்தின உச்சக் கட்டத்தில்.

யேசு மக்களுக்கு இயம்பினது நீங்கள் பண்டைய சட்டங்களை கேள்விப்பட்டிருப்பீர்கள், கொலை செய்யாதே, கொலை செய்பவன் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவான். "நான் உங்களுக்கு கூறுகின்றேன் தன் அயலவனாகிய சகோதரனோடு கோபம் கொள்பவன் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவான். உன் சகோதரனைப் பார்த்து நீ ஒன்றுக்கும் உதவாதவன் எனக் கூறினால் நீ சட்டக் கழத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்." இங்கு ஆழ்ந்த உளவியல் பின்னனியைப் பார்க்கின்றோம். உன் சகோதரனைப் பார்த்து நீ பிரயோசனம் இல்லாத மடையன் எனக் கூறுவாயானால் நீ நரக நெருப்பிற்கு உள்ளாக வேண்டிய அபாயத்தில் இருக்கின்றாய்.



இன்றைய மனித உரிமைகள் இவ்வளவு ஆழமாகச் சிந்திப்பதில்லை. எங்கும் அகதிகள், அவலங்கள், அநீதிகள், தவத்தினால் ஞானம் பெற்ற யேசு தவத்தின் முக்கியத்துவத்தை இங்கு உரைக்கின்றார்.

"உன் கோபத்தின் ஒரு வீச்சு என் வாழ்நாளில் மூன்று நாளில் சுகத்தையும் உன் திறத்தையும் அழித்துவிடுகின்றது" என்று ஸ்ரீ சத்திய சாய்பாபா அடிகளார் கூறுகின்றார். கோபம் 'நான்' என்ற மமதை (Ego), பொறாமை போன்ற மிகப்பெரும் நோய்களில் இருந்து நாம் நீங்க வேண்டும். காயங்களில் இருந்து நாம் நீங்க வேண்டும். காய்மகாரம் மிகப் பெரிய பாவம் எனத் திருச்சபை கூறுகின்றது. யேசு மனக்கட்டுப்பாட்டைப் பற்றி விளக்குகின்றார். பழைய சட்டங்களுக்குப் புது மெருகூட்டுக்கின்றார். விபச்சாரம் செய்யாதே என்பது பழைய சட்டம். நான் உங்களுக்குக் கூறுகின்றேன். "ஒரு பெண்ணை இச்சையோடு நோக்கி அவளை அடைய நினைப்பவன் அவளோடு மனதில் விபச்சாரம் செய்துவிட்டான்". எனவே தவம் மேற்கொண்ட இயேசு உடனே கூறக்கூடியதாக இருந்தது. "சாத்தானே அப்பாலே போ, கடவுளை மட்டும் ஆராதிப்பாயாக".

### III. "மானிட மகன் பொருட்டு மக்கள் உங்களை வெறுத்து, ஒதுக்கிவைத்து, நீங்கள் பொல்லாதவர் என்று இகழ்ந்து தள்ளிவிடும்போது நீங்கள் பேறுபெற்றோர்" (லூக். 6:22))

இயேசுபிரானின் வாழ்க்கையில் இரண்டு முக்கிய கட்டங்களில் அவரால் தவம் மேற்கொள்ளப்படுகின்றது. ஒன்று அவர் பகிரங்கப் போதனைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் வெம்பி வெதும்பும் மண்பாறை பிளந்தது போன்ற. பாலைநிலத்தில் நாற்பது பகலும் இரவும் ஒன்றும் சாப்பிடாமலும் குடியாமலும் இருந்தார். இயேசுவின் வரலாற்றைக் கூறும் லூக்காஸ் நற்செய்தியில் அவர் தூய ஆவியால் பாலைநிலம் கொண்டுசெல்லப்பட்டதாக கூறப்படுகின்றது. எந்தவொரு துன்பத்தையும் இறைவனே தருகின்றார் என்பதை இது வலியுறுத்துகின்றது. துன்பத்தின் பின்தான் இன்பம். இயேசு பாலைநிலத்தில் மெழுகுபோல் உருகினார். இது அவரது முதல் தவம்.

யேசுவின் இரண்டாவது பெரும் தவம் யேசு யூதக் குருக்களினாலும் ஆளுநன் பிலாத்துவினாலும் துன்புறுத்தப்படுவதற்கு முன்பு அவர் செய்த பெரும் தவம். யேசு துன்பத்திற்காகவும் பெரிதும் சஞ்சலப்படவில்லை. ஏற்கனவே தம்முடைய துன்பங்களைப்பற்றி அறிந்திருந்தார். யூதச் சம்பிரதாயப்படி பெரும் விருந்து ஒன்றை தம் சீடர்களுக்கு அளிக்கின்றார். இந்த உணவுப் பந்தியிலே என்னோடு ஒன்றாக உண்பவனே என்னைக் காட்டிக்கொடுப்பான் என இயேசு கூறுகின்றார். இது யேசுவிற்கு மிகுந்த வேதனை அளிக்கும் அனுபவம். உணவுப் பந்தியின் இடைநடுவிலேயே யூதாசிடம், "நண்பா சீக்கரமே சென்று உன் பணியை ஆரம்பிப்பாயாக" என்கிறார்.

பணத்திற்கு பொறுப்பாக இருந்த ஒருவனின் ஈனச்செயல் பணத்திற்காக யேசுவைக் காட்டிக்கொடுக்கச் செய்தது. 30 வெள்ளிக் காசுகள் அவனது நல்ல சிந்தனைக்கு திரையிடுகின்றன.

சீடர்களுள் மூத்த தலைவன் இராயப்பர் எனும் பேதுரு. "சேவல் கூவும்முன் மூன்று முறை நீ என்னை மறுதலிப்பாய் 'இந்த மனிதனுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.' என நீ எனக்கு எதிராகப் பகிரங்கமாகச் சாட்சி கூறுவாய்." என்று இயேசு கூறுகின்றார். "நான் அப்படிச் செய்ய மாட்டேன்" என்றார் பேதுரு. ஆனால் யேசு சொல்லியபடியே யேசுவை நிராகரித்தார் பேதுரு. இந்த அன்புப் புறக்கணிப்புக்களே இயேசுவிற்கு மிகுந்த வேதனையைத் தந்தன. இந்த வேதனையே ஜெஸ்தமனித் தோட்டத்தில் 3 மணித்தியாலங்கள் அவர் மேற்கொண்ட தவத்தின்போது இரத்தம் வியர்வையாக வரும் மட்டும் தேம்பி அழுதார். எனினும் "இறைவா உன் சித்தப்படியே எல்லாம் நிகழட்டும்" என்று பிரார்த்தித்தார்.

அடுத்த நிகழ்வுகள் விரைவாக இடம்பெறுகின்றன. விசாரணைகள் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன. பிரதம குருவின் விசாரணைகளில் யேசுவின் கன்னத்தில் அறைகின்றான் ஒருவன். யேசு மிக ஆறுதலாகக் கேட்கின்றார். "ஏன் என் கன்னத்தில் அறைந்தாய்? என்ன குற்றம் செய்தேன் என்று சொல்" உரோமை ஆளுனர் பிலாத்துவின் முன் யேசு, "நான் உண்மைக்குச் சான்று பகர வந்தேன்" என்கிறார். உரோமை ஆளுனனுக்கு இது விளங்கவில்லை. "உண்மையா அது என்ன? எனக் கேட்கின்றான். போர் வீரனுக்கு எப்படி ஞானம் வரும்? ஆனாலும் யேசு குற்றம் அற்றவர் எனத் தீர்மானிக்கின்றான் பிலாத்து. இருந்தாலும் மீண்டும் கோழையாகி விடுகின்றான். இவனில் எந்தக் குற்றத்தையும் காணவில்லை என்றவன், கொலையாளி ஒருவனை விடுதலை செய்து யேசுவைக் கொல்லத் தீர்ப்பிடுகின்றான். விசித்திரமான வழக்கு, விசித்திரமான தீர்ப்பு.

யேசுவின் ஜெஸ்தமனி பூங்காவின் தவம் சிலுவையிலே விலை உயர்ந்த கற்களின் ஆயிரம் சூரிய பிரகாசத்தை வெளிப்படுத்துகின்றன. ஒரு வார்த்தை அது இலகுவான வார்த்தை அல்ல. தவத்தின் அருமை பெருமைகளை எல்லாம் வரலாற்றிற்கு விட்டுச் சென்ற முதுசம். "பிதாவே! இவர்கள் அறியாமல் செய்கிறார்கள், மன்னியும்".

தம் போதனைகளாலும் சாதனைகளாலும் வாழ்வளித்த வள்ளல் பெருமானின் வரலாற்றில் ஆழம் கண்ட தவத்தின் மேன்மையை இங்கு காண்கின்றோம். ●

# மாணவர் பக்கம்

## க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி (2008)



## கத்தோலிக்க திருமறை

தொகுப்பு: திருமதி. ஜெனிவி ஸ்ரீபன்,
ஆசிரியை,
மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி (தே.பா),
மன்னார்

## பகுதி I வினாக்கள்

01. முழு விவிலியமும் எத்தனை மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?
1. 150 2. 200 3. 329 4. 400 5. 129

02. திருவிவிலியத்திலுள்ள மொத்த அதிகாரங்கள் எத்தனை?
1. 1334 2. 1233 3. 1200 4. 1500 5. 600

03. திருவிவிலியத்திலுள்ள மொத்த வசனங்கள் எத்தனை?
1. 35,487 2. 36,400 3. 40,100
4. 5,500 5. 25,300

04. பிப்ளியோன் என்பதன் பொருள் என்ன?
1. பைபிள் 2. பிவிளம் 3. நூல்
4. பிபிளுஸ் 5 வுல்காத்தா

05. "பரிசுத்த ஆவியால் எழுதப்பட்ட திருவிவிலியம் கடவுளை ஆசிரியராகக் கொண்டுள்ளது" எனக்கூறும் திருத்தந்தை யார்?
1. 13ம் சிங்கராயர் 2. 6ம் சின்னப்பர்
3. பத்தாம்பத்திநாதர்
4. 2ம் அருளப்பர் சின்னப்பர் 5. 16ம் ஆசீர்வாதப்பர்

06. தொடக்க நூல் 3ம் அதிகாரத்தில் "ஆடையின்றி" என்பதன் கருத்தாய் அமைவது யாது?
1. மனிதனின் கீழ்ப்படியாமை
2. மனிதனின் பெலவீனம்
3. மனிதனின் அகங்காரம்
4. மனிதனின் நிர்வாணம்
5. மனிதனின் வெட்கம்

07. ஆபிரகாம் என்ற பெயரின் பொருள் என்ன?
1. நல்ல தந்தை 2. இஸ்ராயேல் இனத்தின் தலைவர்
3. முக்கியமான ஆதித்தந்தை
4. இனத்தின் தந்தை 5. விசுவாசத்தின் தந்தை

08. "உன் காலணியை உன் காலிலிருந்து அகற்று. ஏனெனில் நீ நிற்கும் இடம் புனிதமானது" இக்கூற்றோடு தொடர்புடையவர் யார்?
1. ஆபிரகாம் 2. மோசே (மோயீசன்)
3. யாக்கோப்பு 4. யோசுவா 5. எசாயு

09. பண்டைய காலத்தில் "நபி" என அறிமுகப்படுத்தப்பட்டவர்கள் யார்?
1. மக்களின் தலைவர்கள் 2. பிதாப்பிதாக்கள்
3. தேசிய வீரர்கள் 4. இறைவாக்கினர்கள்
5. நன்னெறியில் வாழ்வோர்.

10. ஈசாக் என்பதன் பொருள் யாது?
1. நேர்மையானவன் 2. சிரிப்பவன்
3. துக்கமானவன் 4. அழுபவன் 5. நீதிமான்

11. "ஆதியிலே வாக்கு இருந்தது" என்ற செய்தியை முன்வைக்கும் நற்செய்தியாளர் யார்?
1. பவுல் 2. மத்தேயு 3. யோவான்
4. மாற்கு 5. லூக்கா

12. இஸ்ராயேலரின் மறுவாழ்வு பற்றிய எதிர்பார்ப்பை வெளிப்படுத்திய இறைவாக்கினர் யார்?
1. தானியேல் 2. எசேக்கியேல்
3. எசாயா 4. யோனா 5. எரேமியா

13. இறைவன் மக்களுக்குக் காட்டிய பேரன்பின் சான்று யாது?
1. உலகைப் படைத்து மனிதனுக்கு அளித்தமை
2. தனது மகனை உலகிற்கு அனுப்பியமை
3. மனிதனை மேன்மையான படைப்பாக உயர்த்தியமை
4. இஸ்ராயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டமை
5. பாவிகளுக்கு மன்னிப்பு அளித்தமை

14. "மூத்தவன் இளையவனுக்குப் பணிந்திருப்பான்" இக்கூற்றோடு தொடர்புடையோர் யார்?
1. காயின் ஆபேல் 2. சேம், சாம்
3. ஏசா, யாக்கோப்பு 4. ரூபன், யோசப்
5. தாவீது, சாலமோன்

15. விடுதலைப் பயண எழுத்தாளரின் விசேட பண்பு யாது?
1. அரசின் அதிகாரத்தை விளக்குவது
2. துன்புறும் மக்கள் பற்றிய செய்தியைத் தருவது
3. தேசிய விபத்தைப்பற்றிக் குறிப்பிடுவது
4. சமூகப் பிரச்சினைகளை முன்வைப்பது
5. சுதேசப் பழக்கவழக்கங்களை விளக்குவது

16. "நானும் என் வீட்டாரும் ஆண்டவரையே சேவிப்போம்" இவ்வாக்கோடு தொடர்புடைய உடன்படிக்கை எது?
1. சீனாய் உடன்படிக்கை 2. நோவா உடன்படிக்கை
3. ஆபிரகாம் உடன்படிக்கை
4. யாக்கோப்புவின் உடன்படிக்கை
5. செக்கேம் உடன்படிக்கை

17. இணைச் சட்டப் பாரம்பரியம் காணப்படும் பின்னணி யாது?
1. ஜெருசலேம் 2. சமாரியா 3. அசிரியா
4. சீரியா 5. பாபிலோனியா

18. கி.மு. 621ல் தென்னரசில் கண்டெடுக்கப்பட்ட பாரம்பரியம் யாது?
1. யாவே 2. குருக்கள் 3. எலோகிம்
4. இணைச்சட்டம் 5. ஏலியோன்

19. தொடக்கநூலில் உலகப்படைப்பு வரலாறு எழுதப்பட்ட மரபு?
1. P. மரபு 2. D.மரபு 3. E.மரபு
4. J.மரபு 5. G..மரபு

20. "உன்னத உடன்படிக்கை" என அழைக்கப்படும் உடன்படிக்கை
1. கலயாத் உடன்படிக்கை
2. செக்கேம் உடன்படிக்கை
3. ஆபிரகாமின் உடன்படிக்கை
4. யாக்கோபுவின் உடன்படிக்கை
5. சீனாய் மலை உடன்படிக்கை

**பகுதி 1 விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 06. 2 | 11. 3 | 16. 5 |
| 02. 1 | 07. 4 | 12. 2 | 17. 3 |
| 03. 1 | 08. 4 | 13. 2 | 18. 4 |
| 04. 3 | 09. 4 | 14. 3 | 19. 1 |
| 05. 1 | 10. 2 | 15. 2 | 20. 5 |

## பகுதி II வினாக்கள்

*பகுதி II. வினாக்களுக்கான விடைகள் இங்கே குறிப்புகளாக-கருத்துக்களாக (Points Form) மட்டுமே தரப்பட்டுள்ளன. மாணவர்கள் இந்தக் குறிப்புக்களை வைத்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு கேட்கப்பட்ட அளவு விரிவான விடைகளை எழுத வேண்டும்.*

**1. இஸ்ராயேல் மக்களின் வரலாற்றில் யாக்கோபுவின் வாழ்வின் மூலமாக கிறிஸ்தவ மக்கள் கற்றுக்கொள்ளும் படிப்பினைகளை 120 சொற்களில் விளக்குக? (5 காரணங்கள்)**

1. பரம்பரை பரம்பரையாக அல்ல, இறைவன் யாரைத் தன் பணிக்கு அழைக்கின்றாரோ அவர் மூலமாவே இறைத்திட்டம் நிறைவேற்றப்படும்.
2. இறைவன் தனது திட்டத்தை நிறைவேற்றக் குறைகள் பலவீனங்கள் கொண்ட மக்களையே தேர்ந்தெடுக்கிறார்.
3. குறைகள் பலவீனங்கள் எம்மிடம் காணப்பட்டாலும் இறை அழைப்பை நிறைவேற்றத் தகுதியுடையோராக எம்மை மாற்றவேண்டும்.
4. ஒருவர் தான் செய்த பிழையை ஏற்றுக்கொள்ள வேண்டும்
5. காலத்தின் அறிகுறிகளை விளங்கிச் செயற்படவேண்டும்
6. தான் பெற்ற அழைப்புக்கு நேர்மையான மனதோடு ஒவ்வொருவரும் பதிலளிக்க வேண்டும்.
7. விசுவாசத்தோடு செயற்பட வேண்டும்.
8. வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

**2. படைப்பின் இரு வரலாறுகள் ஊடாக (உலகம் + மனிதன்) தொடக்கநூல் ஆசிரியர் முன்வைக்கும் செய்திகளை 150 சொற்களில் விளக்குக? (5 காரணம்)**

1. படைப்புக்களின் மூலகாரணம் இறைவன்.
2. மனிதன் உடலும் ஆன்மீகமும் கலந்த உருவாக்கம்.
3. படைப்பனைத்தும் நல்லவையே.
4. பாலுறவு நல்லது.
5. படைப்பை பாதுகாத்தலும் விருத்தியடையச் செய்தலும், அவற்றைப் பயன்படுத்தலும் மனிதனின் கடமை.
6. உழைத்துக் களைப்புறும் மனிதன் வாரத்தின் இறுதியில் ஓய்வெடுக்க வேண்டும்.
7. மனிதன் மிருகத்தின் பரிணாமம் அல்ல இறைவனின் உருவாக்கம்.
8. இறைவனின் படைப்பாகிய இயற்கையை (சூரியன், சந்திரன், விண்மீன்கள்) வணங்குவது பொருத்தமற்றது.
9. வணக்கம், மரியாதை, ஆராதனை இறைவன் ஒருவருக்கே.
10. பெண், ஆணின் ஒரு பகுதி. அவர்கள் இருவரல்ல ஒருவர்.
11. மனிதன் எல்லாப் படைப்புக்களைவிடவும் மேலானவன். கடவுளது சாயல், பாவனை, உயிர்மூச்சு, மனச்சான்று பகுத்தறிவு, முடிவில்லா வாழ்வு போன்றவற்றைக் கொண்டவன்.

**3. இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் இறைவனுடனும், மனிதனுடனும், உலகுடனும் நெருங்கிய உறவு கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை 120 சொற்களில் விளக்குக?**

1. மனிதனைப் படைத்த இறைவன் அவனுக்கு உயிர்மூச்சை அளித்தார்.
2. உயிர் என்பது இறை உறவாகும். அது மனிதனின் உயிர் நிலையின் அடையாளமாகும்.
3. ஆன்மீக உறவினால் இறை உறவு உச்சம் பெறுகின்றது.
4. பாவத்தினால் இறை உறவு முறிந்துள்ளது.
5. இறை உறவை முறிப்பதற்கு பல்வேறு உலகக் காரியங்கள் காரணமாய் அமைகின்றன.
6. தீமையான செயற்பாடுகளைக் குறித்து மனிதன் விழிப்பாயிருக்க வேண்டும்.
7. படைத்தவனுக்கு மரியாதை செய்தல், வணங்குத்ல், ஆராதனை செய்தல், பணிபுரிதல் மூலமாக இறை உறவை வளர்த்துக்கொள்ளலாம்.
8. மனிதன் இறைவனிடம் கொண்டுள்ள விசுவாசம், எதிர்பார்ப்பு, நம்பிக்கை மூலம் இறை உறவை வளர்த்துக்கொள்ளலாம்.
9. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இறை உறவு முறிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மீண்டும் மனம்வருந்தி இறைவனிடம் வரவேண்டும்.
10. இறைவனுடன் ஒன்றித்திருப்பது போன்று, மனிதன், மற்ற மனிதனோடும் உறவு கொள்ளவேண்டும். காரணம் மனிதன் சமூகப்பிராணியாவான்.
12. தனது ஆற்றல்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள சமூகம் மனிதனுக்கு மிகவும் அவசியம்.

**4. விடுதலைப்பயணம் இஸ்ராயேல் மக்களின் வரலாற்றில் மையமாக உள்ள நிகழ்ச்சி என்பதற்கு ஏதுவான காரணங்களை 120 சொற்களில் விளக்குக.**

1. இஸ்ராயேலர் இறைமக்களாக மாற்றப்படுவதற்கு முக்கிய காரணம் விடுதலைப் பயணமாகும்.
2. உலக ஆன்மீக அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுதல் ஆரம்பமானது விடுதலைப் பயணமாகும்.
3. இறைவல்லமை இறைபராமரிப்பு இவைகளை மக்கள் அனுபவித்தது.
4. இறைவனையும், மனிதரையும் அன்பு செய்ததும், பத்துக் கட்டளைகளைப் பெற்று இறைவனுக்குப் பயந்து பிரமாணிக்கமுள்ள மக்களாக மாற்றப்பட்டது.
5. துன்ப அனுபவங்கள் மூலம் அளப்பரிய அன்பை இஸ்ராயேல் மக்கள் உணர்ந்தது.
6. உண்மை மனித விடுதலை என்பது, அரசியல், பொருளாதார, அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவது மட்டுமல்ல என்பதைப் புரிந்துகொண்ட நிகழ்வு.
7. துன்பங்கள் ஊடாக மீட்பு உண்டு என்பதை அனுபவித்த நிகழ்வு விடுதலைப்பயண அனுபவமாகும்.

**5. அடையாளங்கள், நிகழ்வுகள் மூலமாக இறைவன் பிதாப்பிதாக்களுக்கு தன்னை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்களை 120 சொற்களில் விளக்குக? (5 காரணங்கள்)**

1. ஆண்டவர் ஆபிரகாமை அழைத்தல் (தொ.நூ 12:1-4)
2. மம்ரே எனும் இடத்தில் தேவதாரு மரங்கள் அருகே மூன்று மனிதர் ஆபிரகாமுக்கு தோன்றுதல் (தொ.நூ.18:1-2).
3. ஆபிரகாம் ஈசாக்கை பலியிடமுன்வருதல் (தொ.நூ.22:9-14).
4. பெத்தேலில் யாக்கோபுவின் கனவு (தொ.நூ.28:10 - 22)
5. யாக்கோப்பு போராடுதல் (தொ.நூ. 32:22 - 32).
6. யோசேப்பு வீட்டில் கண்ட கனவு (தொ.நூ 37:5-7)
7. யோசேப்பு சிறைக்கைதிகளின் கனவுகளை விளக்குதல் (தொ.நூ 40:1-23).
8. யோசேப்பு பார்வோனின் கனவுகளை விளக்குதல் (தொ.நூ.41:1-36).

**6. பாலைவனத்தில் மன்னா, காடைகள் விழுந்தமை, பாறையிலிருந்து நீர் பெற்றுக்கொண்டமை போன்ற விடுதலைப்பயண நிகழ்வுகளின் ஊடாக நீர் உமது வாழ்வுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகள் எவை?**

1. இறைவன் எம்மட்டில் எவ்வேளையிலும் விழிப்பாயிருக்கிறார்.
2. இறைவன் எந்நேரமும் எம்மைப் பாதுகாக்கின்றார்.
3. இறைவன் எம்மைப் பட்டினியாய் இருக்க விடமாட்டார்.
4. அவர் எமது தேவைகளின்போது தக்க பதில் அளிக்கிறார்.
5. பாறையிலிருந்து நீர் கிடைக்கப் பெறல் போன்ற புதுமையான செயல்களின் மூலம்கூட எம்மை ஆறுதல் படுத்துகின்றார்.

**7. லூக்கா நற்செய்தியை லூக்காதான் எழுதினார் என்பதற்குரிய புறச்சான்றுகள் எவை?**

1. 2ம் நூற்றாண்டின் இறுதியில் லூக்கா நற்செய்தியின் ஆசிரியர் புனித லூக்காதான் என்பதை திருச்சபை ஏற்றுக் கொள்கிறது.
2. கலிலேயாவில் இரனேயுஸ்
3. அலெக்ஸ்சாண்டிரியாவின் புனித கிளமென் (கி.பி.195)
4. வட ஆபிரிக்காவின் டேர்லேயன் (கி.பி.200)
5. சிரியாவின் புனித எசேபியுஸ் கி.பி. 325)
6. இவர் புனித லூக்காவை அந்தியோக்கியாவிலிருந்து வந்த மருத்துவர் எனவும், திருத்தூதர் பணியை எழுதியவர் எனவும் அறிமுகப்படுத்துகிறார்.
7. ஜெருசலேமின் புனித ஜெரோம் (கி.பி.175) புனித லூக்காஸ் ஒரு மருத்தவர் எனவும் புனித பவுலுடன் மறைபரப்புப் பணியில் ஈடுபட்டவர் எனவும் குறிப்பிடப்பிடுகின்றார்.

**8. தன்னைப் பின்பற்றுபவர்களின் பொறுப்பு கடைமை பற்றி இயேசு என்ன கூறியுள்ளார் என்பதை லூக்காஸ் நற்செய்தியின் அடிப்படையில் 150 சொற்களில் விளக்குக?**

1. இயேசுவைப் பின்பற்றுவோர் தம் தந்தையையும், தாய், மனைவி, பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், ஏன் தன்னையும், இறைவன் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் துறக்கத் தயாராக இருக்க வேண்டும்.
2. இயேசுவுக்காக அனைத்தையும் கைவிடக்கூடியவராக இருக்க வேண்டும்.
3. இயேசுவைப் பின்பற்றுதல் தொடர்பாக ஆழ்ந்த சிந்தனையும், தெளிவும் உள்ளவராக இருக்க வேண்டும்.
4. ஆன்மீக சக்தியைப் பெற்றிருப்பவராய் இருத்தல் வேண்டும்
5. இயேசுவைப் பின்பற்றுவோர் தம் சிலுவையைச் சுமந்துகொண்டு இயேசுவைப் பின்பற்ற வேண்டும்.

*(தொடர்ந்து வெளிவரும்...)*

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்: அதிவந்தனைக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

## தேசிய சமாதானப் பிரிவு

இயக்குனர்: அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார்

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


சமாதானச் செய்தி : "அமைதியை உங்களுக்கு விட்டுச்செல்கின்றேன்: என் அமைதியையே உங்களுக்கு அளிக்கின்றேன்: நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல: நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்: மருள வேண்டாம் (யோவான் 14:27)

### வவுனியா மறைக்கோட்ட கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான

## சமாதானக் கருத்தமர்வு

வவுனியா மறைக்கோட்ட கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான சமாதானக் கருத்தமர்வு நிகழ்வானது கடந்த 16.04.2008 அன்று வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் உதவிப்பங்குத்தந்தை வணபிதா ஆரோக்கியம் அடிகளாரின் ஆசிச்செய்தியுடன் ஆரம்பமானது. யுத்தம் இடம்பெற்றாலும் சமாதானத்தின்மீதுள்ள நம்பிக்கையை இழக்கமுடியாது. ஏனெனில் நம்பிக்கைதான் வாழ்வு என்று தொனிப் பொருளில் அவர் தனது செய்தியினை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து கிராமிய விழிப்பூட்டல் குழு இணைப்பாளரினால் குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும், எவ்வாறு குழுக்களை கொண்டு இயக்குவது என்பது பற்றியும் விழிப்பூட்டல் வழங்கப்பட்டது. தொடர்ந்து *வாழ்வும் வழியும்* என்ற தலைப்பில் சமாதானப்பிரிவு இணைப்பாளர் சி. எம். ஏ. ஜெயதாஸ் அவர்களினால் விவிலிய ஒளியில் விளக்கவுரை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து குடும்பம் என்றால் என்ன? வெற்றிகரமான குடும்பமாக செயற்படுவது எவ்வாறு? குடும்பங்களின் பிளவுக்குரிய காரணங்கள் என்ன? மற்றும் கருக்கலைப்பினால் ஏற்படுகின்ற உளப் பாதிப்புகள் எவை? போன்ற கருத்துரைகள் சமாதானப் பிரிவுப் பணியாளர் எஸ். பெனிற்றஸ் அவர்களால் வழங்கப்பட்டது.

வவுனியாப் பிரதேச களப்பணியாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் 42 குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றதுடன் எதிர்காலங்களில் இவ்வாறான கருத்துக்களை வழங்கி வலுவூட்டுமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

### பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான

## தேசிய சமாதான நிகழ்ச்சித் திட்ட செயலமர்வு

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான தேசிய சமாதான நிகழ்ச்சித்திட்ட செயலமர்வு கடந்த 17.04.2008 காலை 10.30 மணியளவில் செபத்துடன் ஆரம்பமாகியது. முதலில் ஆசிரியர்கள் அறிமுகம் நடைபெற்றது. தொடர்ந்து சமாதானப் பிரிவின் ஊக்குவிப்பாளர் பெனிற்றஸ் அவர்களால் மனதில் திடம் மற்றும் செயலாற்றும் திறமையைப் பெற்றுக் - கொள்வதற்கான உள்ளார்ந்த ரீதியாக, மௌன நிலையில் ஆழ்ந்த மூச்சு உள்ளெடுத்து வெளிவிடும் பயிற்சி கொடுக்கப்பட்டது. இப்பயிற்சி மூலம் ஆசிரியர்கள் தமது நாளாந்த செயற்பாட்டை நல்லமுறையில் ஆற்றக் கூடியதாக அமைந்தது. மேலும் பிள்ளைப் பருவத்தில் காணப்படும் பருவ மாற்றங்கள், உளவியல் ரீதியான அணுகுமுறை, அவர்களை இனம்கண்டு நல்வழிப்படுத்தலின் அவசியம் போன்றவையும் கூறப்பட்டது.

அடுத்ததாக *வாழ்வும் வழியும்* என்ற தலைப்பின்கீழ் சகோதரர் ஜெயதாஸ் ஆற்றிய உரையில் இறைவார்த்தைகளை எடுத்துக்காட்டாகக் கூறி, நமது வாழ்வு சமாதான வழியில் எப்படி அமையவேண்டும் என்று விளக்கினார். தனது வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து குடும்பத்தில், அயலில் நாம் எவ்வாறு சமாதான வாழ்வைக் கட்டி எழுப்பலாம் என அறிவுரை கூறினார்.

இறுதியாக மதிய போசனம் வழங்கப்பட்டது. ஆசிரியர் ஒருவரின் நன்றி உரையுடன் பி. ப. 2.30 மணியளவில் செயலமர்வு முடிவுபெற்றது.








### நானாட்டான் முருங்கன் பிரதேசத்தில்

## ஆசிரியர்களுக்கான சமாதான கருத்தமர்வு





நானாட்டான், முருங்கன் பிரதேச கறிற்றாஸ் வாழ்வுதய முன்பள்ளி ஆசிரிய சமாதானக் குழுக்களுக்கான சமாதானக் கருத்தமர்வானது 10.04.2008 அன்று முருங்கன் முன்பள்ளியில் நடைபெற்றது.

இறைவணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் வாழ்வுதய சமாதானப்பிரிவு இணைப்பாளர் திரு. சி. எம். ஏ. ஜெயதாஸ் அவர்களால் "வாழ்வும் வழியும்" என்ற தலைப்பில் யாருக்குச் சமாதானம்? சமாதானம் செய்பவர்கள் யார்? என்ற உபதலைப்புகளில் விவிலிய ஒளியில் விளக்கவுரைகள் நடாத்தப்பட்டன. அடுத்து முன்பள்ளியில் உள்ள பிள்ளையின், உடல், உள, புலன் சார்ந்த மாற்றங்கள் எவ்வாறு காணப்படும்? ஆசிரியர்கள் சிறார்கள் மட்டில் எவ்வாறு நடந்துகொள்வது தொடர்பிலான உளவியல் கருத்துரைகள் சமாதானப்பிரிவுப் பணியாளர் எஸ். பெனிற்றஸ் அவர்களால் வழங்கப்பட்டது.

அடுத்து எமது தொடர்பாடல்கள் எவ்வாறு மற்றவர்களைப் பாதிக்காமல் அமையவேண்டும் என்று சமாதானப்பிரிவுப் பணியாளர் திரு. ஏ. ஜோர்ஜ் குரூஸ் அவர்களால் கருத்துரை வழங்கப்பட்டது. நானாட்டான் பிரதேச களப்பணியாளர் வி. ஜே. பிரதீபன் ஒழுங்குபடுத்திய இந்நிகழ்வில் 40 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றதுடன் எதிர்காலங்களிலும் இவ்வாறான நிகழ்வுகளை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### கணனிப் பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்கான

## சமாதானக் கருத்தமர்வு

கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் கணனிப் பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்கு நடாத்தப்பட்டு வருகின்ற மாதாந்த சமாதான நிகழ்வானது கடந்த 30.04.2008 அன்று வாழ்வுதய தொழிற்பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றது.

இறைவணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் தேசிய சமாதானப் பிரிவின் நோக்கம் பற்றியும், செயற்பாடுகள் பற்றியும், கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் செயற்பாடுகள் பற்றியும், சமாதானப்பிரிவு பணியாளன் ஏ. ஜோர்ஜ் குரூஸ் அவர்களால் கருத்துரை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து "விஞ்ஞானமும் விசுவாசமும்" என்ற தலைப்பில், உலகம் தோன்றிய காலம் தொடக்கம், இன்றுவரை மனித வாழ்க்கை எவ்வாறு நகர்ந்துள்ளது, அறிவின் உச்சத்தில் உள்ளவர்களது விசுவாசம் எவ்வாறு உயர்வாகவுள்ளது, நம்மால் இயலாதது ஒன்றுமில்லை. ஏனெனில், நாம் உயர்வான படைப்புக்கள் போன்ற ஆணித்தரமான கருத்துக்களும், அறிவுசார் புதிர்களும் இணைந்த கருத்துரைத் தொகுப்பு டிலாசால் சபை அருட்சகோதரர் பப்ரிஸ் குரூஸ் அவர்களால் வழங்கப்பட்டது. அடுத்து, ஆளுமை என்றால் என்ன, எமது ஆளுமையை இனங்காண்பது எவ்வாறு போன்ற உளவியல் கருத்துரை சமாதானப்பிரிவுப் பணியாளர் எஸ். பெனிற்றஸ் அவர்களால் வழங்கப்பட்டது.

அடுத்து இயக்குனரின் திட்டத்திற்கமைவாக இந்நிகழ்வினைத் தொடர்ந்து நடாத்துவதா இல்லையா? என்று கலந்தாலோசிக்கப்பட்டது. இது தொடர்பாக சமாதானப்பிரிவு இணைப்பாளர் அவர்களால் மாணவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டன. இந்நிகழ்வை மாதாந்தம் ஒருமுறை நடாத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. கல்வி தவிர்ந்த ஏனைய மனித விழுமியங்களை வலுவூட்டுவதாக இது அமையவேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது. மிகவும் உந்துதல் ஊட்டும் வகையில் அமைந்த இந்நிகழ்வில் 55 மாணவர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை


Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk



*வவுனியா மாவட்டத்தில் உள்ள தாஸ் கோட்டம் மற்றும் காத்தான் கோட்டம் பகுதிகளில் இடம்பெயர்ந்து வசித்துவந்த குடும்பங்களுக்கு கிடுகு வழங்கப்பட்டது. பம்பைமடுப் பங்குத்தந்தை எஸ். அன்ரன் அடிகளார் பயனாளி ஒருவருக்கு கிடுகுகளை வழங்குகிறார்.*

## புனர்வாழ்வு புனரமைப்பின் இம்மாதச் செயற்பாடுகள்

செட்டியார் மகன் கட்டையடம்பன், அடம்பன், தாழ்வுபாடு, உப்புக்குளம், தலைமன்னார், பேசாலை, சாவற்கட்டு, நானாட்டான், உயிலங்குளம், வங்காலை ஆகிய இடங்களில் இடம்பெயர்ந்து வந்து தங்கியிருக்கும் 10 நபர்களிற்கும் வைத்தியச் செலவிற்கு 23,865/= வழங்கப்பட்டுள்ளது.

மூக்குக்கண்ணாடி பெறுவதற்காக 2400/=வும் வைத்திய பிரயாணச் செலவாக 1500/= வும் வழங்கப்பட்டதோடு வவுனியா, கூளாங்குளம், மன்னார் ஆகிய இடங்களில் உள்ள வறிய இடம்பெயர்ந்த 3 குடும்பங்களில் ஏற்பட்ட மரண நிகழ்விற்காக 13,550/= வழங்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் இருக்கும் நபர்களை பார்வையிடுவதற்காக எமில்நகர், வங்காலை ஆகிய இடங்களில் உள்ள 2 குடும்பங்களிற்கு 985/= வழங்கப்பட்டுள்ளது. மற்றும் தற்காலிகக் குடிசைக்காக வங்காலை, பனங்கட்டுக்கொட்டு எமில்நகர், செல்வநகர், பள்ளிமுனை, சாவற்கட்டு ஆகிய இடங்களில் உள்ள விதவைகள், வறுமைக்கோட்டின்கீழ் வாழும் 12 குடும்பங்களிற்கு 252 கட்டுக் கிடுகுகள் வழங்கப்பட்டுள்ளன.

பள்ளிமுனை, கீரி, பட்டித்தோட்டம், எமில்நகர், பெரியகமம், சாந்திபுரம், உயிலங்குளம், செம்மண்தீவு, யாழ்ப்பாணம், வங்காலை, களிமோட்டை, தாழ்வுபாடு, சின்னப்பண்டிவிருச்சான் ஆகிய இடங்களில் இருந்து எமது காரியாலயத்தை நாடிவந்த விதவைகள், ஆதரவற்றோர், முதியோர், இடம்பெயர்ந்தோர் போன்ற 69 குடும்பங்களில் உள்ள 276 நபர்களிற்கும் உலர் உணவு பொருட்கள் வழங்கப்பட்டன.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இருந்து வந்து களிமோட்டையில் இருக்கும் 54 குடும்பத்திலுள்ள 153 நபர்களிற்கு உலர் உணவும், உலர் உணவு அல்லாத பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. மற்றும் களிமோட்டை முகாமில் உள்ள 76 குடும்பங்களில் உள்ள 210 நபர்களிற்கு 2 நாட்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டுள்ளது.

முசலிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து பெரியகட்டைக்காடு, இலந்தைமோட்டை, உமநகிரி, எருவிட்டான், ஒலிமடு, சாம்பன் கட்டைக்காடு, ஆத்திக்குழி, அச்சங்குளம், வஞ்சியன் குளம், நேரியகுளம், இராசமடு, பள்ளங்கோட்டை ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் 517 குடும்பங்களில் உள்ள 1912 நபர்களிற்கு உலர் உணவு அல்லாத பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

மற்றும் இரட்டைக்குளம், பொன்தீவுகண்டல் ஆகிய இடங்களிலுள்ள 6 குடும்பங்களிற்கு 90 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டுள்ளன. தம்பனைக்குளத்தில் எரிந்த வீட்டிற்கு கிடுகுகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் வவுனியா மாவட்டத்தில் உள்ள கூமாங்குளப் பகுதியில் உள்ள 2 குடும்பத்திற்கும் 40 கட்டுக் கிடுகுகளும், பூந்தோட்டம், அண்ணாநகர் காத்தான்கோட்டத்தில் உள்ள 56 குடும்பங்களிற்கு 676 கட்டுக் கிடுகுகளும் வழங்கப்பட்டுள்ளதோடு வன்னிப்பகுதியில் மடு ஆலய ஊழியருக்கு முழங்காவிலுள்ள ஆலய வளாகத்தில் 50'x16' உள்ள கிடுகுக் கொட்டில் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.

## கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல் செயலமர்வு

கறிற்றாஸ் சிறிலங்கா செடேக்கின் தேசிய செயற்பாடுகளில் ஒன்றுதான் "தேசிய ஊக்குவிப்பு செயற்றிட்டம்." இத்திட்டமானது மன்னார் மறைமாவட்டத்தில் கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் "கிராமிய விழிப்பூட்டல் செயற்றிட்டம்" எனப் பெயரிடப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றது.

இச்செயற்றிட்டத்தை மேலும் வலுவடையச் செய்யும் நோக்கில் இத்திட்டத்தோடு இணைந்து செயற்படும் ஏனைய வாழ்வுதய செயற்பாட்டுப்பிரிவு பணியாளர்களுக்கும் கிராமிய விழிப்பூட்டல் பிரிவு பணியாளர்களுக்கும் வழிகாட்டல் கருத்தமர்வு ஒன்று நடாத்தப்பட்டது.

கறிற்றாஸ் சிறிலங்கா செடேக் அமைப்பின் தேசிய ஊக்குவிப்புப் பிரிவின் தேசிய இணைப்பாளர் திரு. சியோண் மற்றும் வடகிழக்குப் பிராந்திய இணைப்பாளர் திரு. சகாய நேசன் ஆகியோரால் இச்செயலமர்வு வாழ்வுதயத் தொழிற்பயிற்சிக் கட்டிடத்தில் 4 நாட்கள் நடாத்தப்பட்டது. இச்செயலமர்வில் 30 வாழ்வுதயப் பணியாளர்கள் பங்குபற்றிப் பயன் அடைந்தனர். இச்செயலமர்வில் கிராமிய விழிப்பூட்டல் செயற்றிட்டத்தின்கீழ் இயங்கும் குழுக்களை மேலும் வலுவூட்டக்கூடிய வழிமுறைகள் ஆராயப்பட்டன. மற்றும் கிராமியக் குழுக்கள் சொந்தக்காலில் நிற்றல் அத்தோடு சமூகப்பகுப்பாய்வு, மனிதனும் சமூகமும், அபிவிருத்தி, குழு உருவாக்கல் போன்ற விடயங்களை மேற்படி பயிற்சிகளை நடாத்தியோர் வழங்கினர். இச்செயலமர்வானது வாழ்வுதயத்தின் கிராமிய விழிப்பூட்டல் செயற்திட்டத்தை மேலும் வலுவுள்ளதாக்குவதற்கு உதவியாக அமைந்துள்ளது. இதுபோன்று எதிர்காலத்தில் நடாத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## வீட்டுத்திட்டப் பிரிவின் உறவுப்பால நிகழ்வு

மஞுவராயர் கட்டையடம்பன் மற்றும் தோட்டவெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த வீட்டுத்திட்டப் பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த 55 பாடசாலை மாணவர்களை உள்ளடக்கிய உறவுப்பால நிகழ்வு கடந்த மாதம் 25.04.2008 தொடக்கம் 27.04.2008 வரை தோட்டவெளியில் நடைபெற்றது.

இதில் கட்டையடம்பனைச் சேர்ந்த மாணவர்கள் 32 பேரும் தோட்டவெளியை சேர்ந்த மாணவர்கள் 23 பேரும் பங்குபற்றினார்கள். இவ் உறவுப்பால நிகழ்வில் ஆன்மீக செயற்பாடுகள், தலைமைத்துவம், ஒற்றுமை, திட்டமிடல், தியாகச்செயல் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதில் வளவாளர் - களாக திரு.பாஸ்கரன், திரு. நிக்லஸ், திரு.பெனிற்றஸ், திரு. சந்தான் சோசை, திரு. ரவி றெவல் ஆகியோர் பங்குபற்றினர். வழிநடத்துனர்களாக ஆசிரியர்கள் திருமதி. எஸ். அசம்பரா, செல்வி. சசிலா, திரு. ராயு ஆகியோரும் கலந்து கொண்டார்கள். இவ் உறவுப்பால நிகழ்வில் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. பெப்பி சோசை அடிகளாரும், தோட்டவெளி பங்குதந்தை அருட்பணி. இராயப்பு அடிகளாரும் பங்குபற்றினார்கள்.





*பொன்தீவுகண்டலில் நடைபெற்ற உறவுப்பால நிகழ்வில் வளவாளர் ஒருவர் உரை நிகழ்த்துகின்றார். தோட்டவெளியில் நடைபெற்ற நிகழ்வில் மாணவ மாணவியர் விளையாட்டு நிகழ்வில் ஈடுபடுகின்றனர்.*

## உளவள ஆற்றுப்படுத்தல் பிரிவின் செயற்பாடுகள்



வாழ்வுதயத்தின் உளவள ஆற்றுப்படுத்தல் பிரிவின் செயற்பாடுகள் மன்னார் மறைமாவட்டம் முழுவதும் பரவலாக நடைபெறுகின்றது. முக்கியமாக போரின் அகோரப்பிடியில் சிக்கி இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் பல நிகழ்வுகள் மூலம் உளவள ஆற்றுப்படுத்தல் செயற்பாடு நடைபெற்று வருகின்றது.

மன்னார் தீவுப்பகுதிகளான பேசாலை, தோட்டவெளி, கீரி போன்ற கிராமங்களிலும் இச்செயற்பாடு நடைபெறுகின்றது. உளவள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் நடைபெறும் இடங்களில் முக்கிய, விசேட தேவைகள் உடையோரின் தேவைகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 09.05.2008 அன்று பொன்தீவு-கண்டலில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு அருட்சகோதரி றெஜினா அவர்களால் குடும்ப வாழ்வு எனும் தலைப்பில் கருத்தமர்வும், 20.05.2008 அன்று தோட்டவெளியிலும் இளைஞர் யுவதிகளுக்கு ஆளுமை வளர்ச்சி எனும் தலைப்பிலும் கருத்தமர்வுகள் நடைபெற்றன. இக்கருத்தமர்வு மற்றும் செயற்பாடுகள் மூலம் பல மக்களின் மனக்குறைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

## நிரந்தர வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கான சுகாதார நிகழ்ச்சித் திட்டம்

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய நிறுவனத்தினால் கட்டையடம்பனில் நிர்மானிக்கப்படுகின்ற நிரந்தர வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கான சுகாதார நிகழ்ச்சித்திட்டமானது கடந்த 18.05.2008 அன்று காலை 10.30 மணியளவில் கட்டையடம்பன் முன்பள்ளிக் கட்டிடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு வளவாளராக டாக்டர் திரு. யூட் பச்சேக் (பொது வைத்தியசாலை மன்னார்) அவர்கள் கலந்துகொண்டார்.

இவ்விழிப்பூட்டல் நிகழ்வில் 40 பயனாளிகள் பங்குபற்றினர். இதைத் தொடர்ந்து காசநோய் தொடர்பான நடமாடும் சிகிச்சையும் இடம்பெற்றது.

## சமாதானக் கருத்தமர்வு

கட்டையடம்பன் கிராமத்தில் வாழ்வுதய வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கான சமாதான செயலமர்வு 05.04.2008 அன்று கட்டையடம்பன் பலநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. அதில் குடும்ப தலைவிகளும், இளம் பெண்களுமாக 40 பேர் கலந்துகொண்டனர். வளவாளர்களாக சமாதானப் பிரிவு இணைப்பாளர் திரு.C.M.A. ஜெயதாஸ், A.ஜோஜ் குரூஸ், திரு. பெனிற்றஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். காலை 9.00மணி தொடக்கம் பிற்பகல் 2.00மணி வரை இந்நிகழ்வு நடைபெற்றது.

# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

**அடிப்படைவாத பெந்தக்கோஸ்தே சபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.**

தருவது தஞ்சை டோமி

தொடர் – 10

11) ***ஏன் அன்னை மரியாவை 'இயேசுவின் தாய்' என்று அழைக்காமல் 'இறைவனின் தாய்' என்று அழைக்கிறோம்? சாதாரண பெண் முடிவில்லாத கடவுளின் தாயாக முடியுமா?***

தாயின் பெருமை அவருடைய சேயில் மிளிர்கிறது. அவ்வாறே மரியாவின் பெருமை அவர் ஈன்றெடுத்த இயேசுக் கிறிஸ்துவில் மிளிர்கிறது. மரியாவின் தனிப்பெரும் பேறு அவர் 'மீட்பரின் தாய்' என்பதேயாகும்.


முதல் முதலில் மரியா சாதாரண பெண்ணல்ல. அவர் அருள் நிறைந்தவர். ஆண்டவரின் ஆலயம். பெண்களுக்குள் பேறுபெற்றவர். மேலே கேட்கப்பட்ட கேள்வியிலேயே பதில் இருக்கிறது. இயேசு மரியாவின் மகன். இயேசு கடவுளின் மகன் மட்டுமல்ல, இயேசுவே கடவுளும் ஆவார். இயேசு கடவுள் என்றால் மரியா கடவுளின் தாய்தானே?

***விவிலியத்தில் :*** விவிலியத்தில் பல மேற்கோள்கள் மரியா இறைவனின் தாய் என்பதை உறுதிசெய்கின்றன. லூக் 1:31,35 "இதோ உம் வயிற்றில் கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவீர்.. அவர் உன்னதரின் மகன் எனப்படுவார். "உன்னதரின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலின் பிறக்கும் திருக்குழந்தை கடவுளுடைய மகன் எனப்படும்".

லூக் 1:43 மரியா எலிசபெத்தை சந்தித்தபோது, எலிசபெத்து ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு உரத்த குரலில் "என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?" என்று கேட்கிறார். மரியாவை ஆண்டவரின் தாய் என்று எலிசபெத் அழைக்கிறாள்.

கலா 4:4-5 "காலம் நிறைவேறியது ... கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார். ஒரு பெண்ணாகிய மரியாவின் வழியாகவே இறைவன் மனிதரானார்" என்பதைத் தூய பவுல் உறுதிசெய்கிறார். (உரோ 1:3).

***எபேசு பொதுச்சங்கம் :*** மரியா உண்மையிலேயே இறைவனின் தாய் என்று கி. பி. 431 ஆம் ஆண்டு எபேசு நகரில் நடந்த பொதுச்சங்கம் அறிக்கையிட்டுள்ளது. 'தெயோட்டக்கோஸ்' (Theotoko) என்றால் 'கடவுள், 'டோக்கோஸ்' என்றால் 'ஈன்றெடுத்தவர்'. எனவே மரியா கடவுளை ஈன்றெடுத்தவர் ஆவார். மரியா ஈன்றெடுத்த இயேசு முழுமையான கடவுளும், மனிதனுமாக உள்ளார். ஆனால், இயேசு இரண்டு இயல்பையும் பெற்றிருப்பினும் ஒரே ஆளாகத்தான் உள்ளார். இந்த ஒரே ஆளாகிய சுதனாகிய, சர்வேசுரனுடைய தாயாக உள்ளார் மரியா. "மரியா கடவுளின் தாய் என்றால், கடவுள் மரியாவின் மகன் என்று சொல்லலாமா?" என்ற கேள்விக்கு 'ஆம்' என்று கத்தோலிக்க விசுவாசம் பதிலளிக்கின்றது.



***இரண்டாம் வத்திக்கான் சங்கம் :*** மரியா உண்மையாகவே இறைவனும், மீட்பருமானவரின் தாய் என ஏற்றுக்கொள்ளப் பெற்றுப் போற்றப்பெறுகிறார் (திருச்சபை எண். 53) என்றும், தூய கன்னி மரியா இறைவனின் தாய் என்னும் கொடையாலும், அலுவலாலும் மீட்பரான தன் மகனுடன் ஒன்றித்துள்ளார் (திருச்சபை எண் 63) என்றும், இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகின்றது. இதன் மூலம் மரியா இறைவனின் தாய் என்ற கத்தோலிக்க விசுவாசக் கோட்பாடு உறுதிசெய்யப்பட்டுள்ளது. மரியாவின் சிறப்பே அவர் மீட்பரின் தாய் என்பதாகும். மரியாவின் அமல உற்பவம் மற்றும் விண்ணேற்பு ஆகிய இருபெரும் சலுகைகளுக்கு அடித்தளமாக இருப்பதே அவர் இறைவனின் தாய் என்ற உண்மையாகும். ***(கேள்விகள் தொடரும்...)***

# பொதுநிலையினர் வாழ்வில் இறைவார்த்தை

## இறைவார்த்தை ஆண்டையொட்டிய சிந்தனைக் கட்டுரைத் தொடர் - 7

– திரு. மாட்டின் டயஸ், (பேசாலை) இளைப்பாறிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் –

**4. நான்காவது துயரம் நிறை மறையுண்மை**

**இயேசு தான் அறையப்படப்போகும் சிலுவையைச் சுமந்து கொண்டு கொல்கொத்தாவுக்குப் பயணிக்கின்றார்.**

கிறிஸ்துவின் இந்தக் கல்வாரிப் பயணம் ஒரு தனிக் கூறாக சிலுவைப்பாதையாக தியானித்துச் செபிக்கப்படுவது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. தவக்காலத் தியானத்துக்கு இத் திருச்சிலுவைப்பாதை ஓர் ஆன்மீகப் பயணமாக அமைந்துவிடுகின்றது. சிலுவைப் பாதைத் தியானங்கள் உளமாற்றத்துக்கு ஓர் உந்துசக்தியாக அமையும்.

இறைவார்த்தைகள் ஊடாக கிறிஸ்துவின் சிலுவைப் பாதையில் வழிநடப்போம். புனித மத்தேயு கிறிஸ்துவின் சிலுவைப் பயணத்தை தன் நற்செய்தியில் இப்படி ஆரம்பித்து வைக்கின்றார்.

"அவரை ஏளனம் செய்தபின் அவர் மேலிருந்த தளர் அங்கியைக் கழற்றிவிட்டு அவருடைய ஆடைகளை அணிவித்து அவரைச் சிலுவையில் அறைவதற்காக இழுத்துச் சென்றனர்". (மத் 27:31) புனித யோவான் "இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு மண்டை ஓட்டு இடம் என்னும் இடத்திற்குச் சென்றார். அதற்கு கொல்கொத்தா என்பது பெயர்" (யோவா19:17) எனக் கூறுகின்றார்.

### நான்காம் மறையுண்மையில் விரியும் ஏனைய சிந்தனைகள்

**1. யேசுவின் தோளில் சிலுவை சுமத்துகின்றார்கள்.**

மனித குலம் முழுவதின் பாவத்திற்காக ஒரு குற்றமில்லா செம்மறியின் தோள் சிலுவையை ஏற்றுக்கொள்கிறது. "அவர் நம் பாவங்களைத் தம்மேற் சுமந்துகொண்டார்" இவற்றின் ஊடாகத்தான் உலக மீட்பு அடையப்படவேண்டிய ஒன்றாக இருந்தது. இயேசு சிலுவையை ஏற்க மறுத்திருந்தால் உலகிற்கு இரட்சிப்பு என்பது கிடைத்திருக்காது. இரட்சிப்புக்கும் சிலுவைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு கிறிஸ்துவால் ஏற்படுகின்றது.

ஜெருசலேம் நகர வீதிகளிலே இது இயேசுவின் இரண்டாவது உலா. ஒரு வாரத்துக்கு முன்புதான் யேசு அரச மரியாதையோடு – மாட்சிமையோடு அழைத்து வரப்பட்டார். வீதியில் நின்ற மக்கள் தங்கள் மேலாடைகளை விரித்தும், கரங்களில் ஒலிவமரக் கிளைகளை ஏந்தியும் "தாவீதின் மகனுக்கு ஓசான்னா, ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசீர் பெற்றவர்" என வாழ்த்தியும், கழுதைக் குட்டியின்மீது அமர்ந்து ஜெருசலேம் நகருக்குள் இயேசுவை வரவேற்று, அக்களித்து ஆரவாரித்தனர். அதே மக்கள் அதே இயேசுவை அதே வீதிகளில் சிலுவையைச் சுமத்தி இன்று இழுத்துச் செல்கின்றனர். அரசனாக வந்தவர் இப்போது அவமானமாக இழுத்துச் செல்லப்படுகின்றார். "இவனைச் சிலுவையில் அறையும்! இவனைச் சிலுவையில் அறையும்!" என்ற மக்களின் கூக்குரலுக்கு இணங்கி பிலாத்து இட்ட தீர்வையால் கொலைக்களத்துக்கு இழுத்துச் செல்லப்படுகின்றார்.

**வேண்டுதல் :** வாழ்வின் பொறுப்புக்களை சிலுவையாகக் காணாமல் இறைச் சித்தமாகக் கண்டு பணிவான மனதுடன் இருக்க இறைவனை வேண்டல்.

**2. யேசு சிலுவையோடு தரையில் விழுகின்றார்.**

இயேசு சிலுவைப் பயணத்திலே மூன்று முறை சிலுவையோடு விழுந்ததாகக் காண்பிக்கப்படுகின்றது. (3ம், 6ம், 9ம் நிலைகள்) ஆனால் நற்செய்தியில் இயேசு சிலுவையோடு விழுந்தார் என்பதற்கான எந்தக் குறிப்பும் தரப்படவில்லை. நீண்ட சிலுவைப் பயணம் பற்றிய விவரணங்கள் இல்லை. குறிப்புக்களாகவே சிலவற்றைக் காண்கின்றோம். நற்செய்தி வாசகங்களில் இதற்கான குறிப்புக்கள் இல்லை என்பதற்காக இயேசு சிலுவைப் பயண வேளையிலே விழவில்லை என்று நாம் சொல்லலாகாது. அது ஒரு குன்றை நோக்கிய பயணம் (கல்வாரி - கொல்கொத்தா) சிலுவையில் அறையப்படும் கொலையாளிகளை இழுத்துச் செல்வதற்கான பாதையே அன்றிப் பிரதான பாதை அல்ல. ஆகவே அது கரடு முரடானதாகவும், குன்றும் குழியுமாகவே இருந்திருக்கும். இயேசு ஒரு முறையல்ல பலமுறை விழுந்தார் என்பது சாத்தியமானதே.

**வேண்டுதல் :** பலவிதமான வீழ்ச்சிகளில் அகப்பட்டு துன்பத்துடனும் துயரத்துடனும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்களின் உடல் - உள ஆன்ம எழுச்சிக்காக வேண்டல்.

**3. இயேசு தன் தாயாரைச் சந்திக்கின்றார்.**

பயணம் கிறிஸ்துவினுடையது. மீட்புப் பணியும் கிறிஸ்துவினுடையது. எப்போது "இதோ ஆண்டவருடைய அடிமை உம்முடைய வார்த்தையின்படி எனக்காகக்கடவது" என்று மரியாள் தன் சம்மதத்தைத் தெரிவித்தாளோ அப்போதிருந்து விண்ணேற்புவரை தேவதாய் இயேசுவின் மீட்புப் பணியில் சம பங்காளியாய் இருந்தார். அதற்கான சன்மானமும் அவளுக்கு இறைவனால் அருளப்பட்டுள்ளது. பரலோக பூலோக இராக்கினியாக - இராணியாக அவள் முடிசூடப்பட்டுள்ளாள்.

கிறிஸ்துவின் முப்பது வருட வாழ்வு அவரது குடும்பத்தோடு கட்டுப்பட்டிருந்தது. இறுதி மூன்று வருட வாழ்வு கிறிஸ்து தன் தந்தையின் பணியில் ஈடுபட்ட நாட்கள். இந்நாட்களும்கூட தேவதாய்க்கு மகிழ்ச்சியான நாட்களாகவே இருந்தன. இயேசுவின் வார்த்தைகள் பலஸ்தீனா எங்கும் தீர் சீதோன் கரைகளிலும் முழங்கின. பலர் அவரின் அதிசயச் செயல்களைக் கண்டு மலைத்துப் போயினர். அவரது ஞானத்தையும், ஆசிரியத்துவத்தையும் கண்டு பிரமித்தனர். இவை யாவற்றையும் மரியாள் அறிந்திருந்தாள், தனக்குள் மகிழ்ந்திருந்தாள். ஆனால் அந்தகோ... இந்த மகிழ்வை எல்லாம் வாரிச் சுருட்டி வாயில் போடுவது போலல்லவா இந்தச் சிலுவைப் பயணம் அமைந்திருந்தது.

எப்போதும் போலவே இவற்றையும் அந்த உள்ளம் உள்வாங்கி உருகிக்கரைந்தது. வாய்கள் பேசாமலே ஆயிரம் உணர்வுகள் தாய்க்கும் மகனுக்கும் இடையில் பரிவர்த்தனை செய்யப்பட்டன.

**வேண்டுதல் :** கொடூரமான இந்நாட்களில் கண்ணீரோடும் கம்பலையோடும் வாழும் பல்லாயிரம் தாய்மார் எம்மத்தியிலே தற்போது வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். தந்தை, தாயை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த தாய், தந்தையர்கள் இவர்களுக்கெல்லாம் கிறிஸ்து தம் பாடுகளால் பெற்ற அருட்பிரசாதங்களே துணையாய்ப் பொழியப்பட வேண்டல்.


**4. சீமோன் இயேசுவின் சிலுவைப் பயணத்திலே தோள் கொடுக்கின்றார்.**

இந்தச் சீமோன் சீரேன் ஊரைச் சேர்ந்தவர். இவருக்கு இரு பிள்ளைகள். அலெக்காந்தர், ரூபு. இவர் விவசாயி. தனது வயல் வெளியிலிருந்து தனது வீடு நோக்கி வந்தவேளை இந்தச் சிலுவை உலாவைச் சந்திக்கின்றார். போர் வீரர்களால் சிலுவையைச் சுமக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றார். புனித மாற்கும், லூக்காவும் தமது நற்செய்தியில் இதைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்கள். அவர்கள் யேசுவை இழுத்துச் சென்றுகொண்டிருந்தபோது சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவர் வயல்வெளியிலிருந்து வந்துகொண்டிருந்தார். அவர்கள் அவரைப்பிடித்து அவர்மேல் இயேசுவின் சிலுவையை வைத்து அவருக்குப் பின் அதைச் சுமந்து கொண்டு போகச்செய்தார்கள் (லூக். 23:26). சீமோன் விரும்பி இப்பணியைச் செய்யவில்லை. கட்டாயத்தினாலேயே செய்கின்றார். ஆயினும் வினாடிப் பொழுதில் கிறிஸ்துவின்பால் ஈர்க்கப்படுகின்றார். கொல்கொத்தா வரை இயேசுவுக்காய் சிலுவையைச் சுமந்து செல்கின்றார். யேசுவுக்காய் செய்யப்படும் எல்லாப் பணிகளிலும் யேசுவின் ஈர்ப்பும் உதவியும் இருந்துகொண்டிருக்கும். மீட்புப்பணியில் சீரேன் ஊர் சீமோனும்கூடக் காலாகாலமாக நினைந்து பெருமைப்படும் ஒரு பாத்திரமாகப் பதிவாகின்றார்.

**வேண்டுதல் :** நமது நாட்டில் கால்நூற்றாண்டு காலமாக நடந்துகொண்டிருக்கும் இந்த அகோர யுத்தத்தினாலும், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் பலர் உடலால் உள்ளத்தால் ஊனமுற்றுப் போய்விட்டனர். இவர்களின் விடியலுக்காய் உழைக்க வரம்வேண்டல்.

**5. வெரோணிக்கா என்ற பெண் இயேசுவின் திருமுகத்தைத் துடைக்கின்றாள்.**

வெரோணிக்கா என்ற பாத்திரம் நற்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்காத ஒரு பாத்திரம். ஆனால் திருச்சபையின்



பாரம்பரியம் வெரோணிக்கா என்ற பாத்திரத்தை கிறிஸ்துவின் சிலுவைப் பயணத்தில் இரண்டறக் கலந்த பெண்ணாக ஏற்றுக் கொண்டுள்ளது. மறக்க முடியாத துணிவுள்ள பெண்ணாக நம்முன் நிறுத்துகின்றது. வாழ்வின் பல செயல்கள் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் நடைபெறுகின்றவை என்பதற்கு இது ஒரு நல்ல சான்று.

இயேசுவை வதைப்பதிலேயே மக்கள் கண்ணாயிருக்க, பெண்கள் புலம்பி அழ, போர்வீரர் ஆவேசத்துடன் அங்கும் இங்குமாய் அலைந்து திரிய, இவர்களுக்கு நடுவில் ஓர் உருவம் தன் மனிதத்துவத்தை இழந்து கோரமாய் பரிதாபத்துக்குரியதாய் தள்ளாடித் தள்ளாடி நடந்துவர சூழ்நிலையைப் பற்றி எவ்வித அக்கறையும் கொள்ளாது உதவி செய்யவேண்டும், இயேசுவின் துயர் துடைக்க வேண்டும் என்ற குறிக்கோளை மட்டும் கொண்டிருந்த வரோணிக்காவின் துணிவு வியக்கத்தக்கதே. என்றென்றும் சிலுவைப் பயணத்தோடு நினைவுகூரப்பட வேண்டியதே.

**வேண்டுதல் :** கண்ணீரோடு வாழ்கின்ற – சிறப்பாக போரினால் அகதிகளாக்கப்பட்டு அல்லாடுகின்ற மக்களுக்குத் தொண்டு செய்யும் ஆர்வமும் வரமும் வேண்டிச் செபித்தல். அவர்களுக்காகச் சேவை செய்யும் மக்களின் பாதுகாப்புக்காக வேண்டல்.

**6. இயேசு தன்னை நோக்கி அழுகின்ற எருசலேம் பட்டணத்துப் பெண்களுக்கு ஆறுதல் சொல்கின்றார்.**

"பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, 'எருசலேம் மகளிரே நீங்கள் எனக்காக அழவேண்டாம். மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்" (லூக்.23:27-28). புனித லூக்கா மட்டும் இந்நிகழ்வை தனது நற்செய்தியில் கூறுவதோடு வரவிருக்கின்ற தீமைகளைப் பற்றியும் இயேசு தீர்க்கதரிசனம் கூறுவதைக் குறிப்பிடுகின்றார். யேசுவைக் கொலை செய்வதற்காக ஜெருசலேம் நகரம் முழுவதும் ஒன்றுபட்டு நின்றவேளையிலும் அவருக்காக உருகிய நெஞ்சங்களும் அழுது புலம்பி மாரடித்து அந்தச் சிலுவைப் பயணத்தில் அங்கமாகி நிற்கின்றன.

இவ்வுள்ளங்கள் கிறிஸ்து செய்த அற்புதங்களுக்காகவும், நன்மைத்தனங்களுக்காகவும் கசிந்து உருகினவா? அல்லது தம் மத்தியிலே வாழ்ந்து இறைவாக்குரைத்த இறைவாக்கினரின் துன்பங்களுக்கே உரித்தான மென்மை உணர்வுகளால் கசிந்தனவா? பெண்மை எப்போதும் மென்மையானதே.

**வேண்டுதல் :** இன்றைய நாட்டின் சூழ்நிலைகளால் கைதிகளாகி சிறைச்சாலையில் வாடும் மக்களின் விடுதலைக்காய் செபித்தல்.

**7. கிறிஸ்துவின் ஆடைகளைக் களைகின்றார்கள்**

இயேசுவின் ஆடைகளைப் போர்வீரர்கள் தமக்குள் பங்கு போட்டுக் கொண்டதைப் பற்றி புனித யோவான் தெளிவாகக் கூறுகின்றார். தாய் மரியாள், மதலேனாவுடன் சிலுவையடியில் இயேசுவோடு நின்றவர் அல்லவா? இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின் படைவீரர் அவருடைய மேலுடைகளை நான்கு பாகமாகப் பிரித்து ஆளுக்கொரு பாகம் எடுத்துக்கொண்டார்கள். அங்கியையும் அவர்களே எடுத்துக்கொண்டார்கள். அந்த அங்கி மேலிருந்து கீழ்வரை தையலே இல்லாமல் நெய்யப்பட்டிருந்தது. எனவே அவர்கள் ஒருவர் ஒருவரை நோக்கி அதைக் கிழிக்க வேண்டாம். அது யாருக்குக் கிடைக்கும் என்று பார்க்கச் சீட்டுக் குலுக்கிப் போடுவோம் என்றார்கள்.

ஆக, யேசு சிலுவையில் அறையப்படுவதற்குமுன் அவரின் ஆடைகள் உரியப்பட்டிருக்கின்றன. ஆடைகளை அகற்றியே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். கிறிஸ்து சிலுவை மீட்பில் நமக்காக இழக்காதது எதுவுமில்லை. தனது உடல், இரத்தம், தனது உயிர், உணர்வுகள், தனது தன்மானம் எல்லாவற்றையுமே எமக்காக இழந்து எம்மை மீட்டுள்ளார்.

**வேண்டுதல் :** இயேசு நமக்காகத் தந்திருக்கின்ற எல்லா நன்மைத்தனங்களுக்காகவும் கிறிஸ்துவுக்கு நன்றி சொல்லி வேண்டுதல். ***(தொடரும்...)***

# இளைஞர் பொழில்



# மனிதனும் மனத்துணிவும்

றீனா H.C.,
உளவளத்துணையாளர்

இன்றைய காலகட்டத்தில் மனிதன் பலவிதப்பட்ட, பல தரப்பட்ட துணிகரச் செயல்களில் ஈடுபடுகிறான். துணிந்து நின்று எதையும் செய்யும் பலத்தையும், சக்தியையும், ஆற்றலையும், தைரியத்தையும் கொண்டவனாக இருக்கின்றான். இன்னும் நினைத்த நேரத்தில் நினைத்தபடி செய்யவேண்டுமென்ற ஆவலாலும், உத்வேகத்தாலும் உந்தப்பட்டு செயற்படுகின்றான். இப்படிப்பட்ட துணிகரச் செயற்பாடுகள் சுயநலம் கருதியோ அல்லது பிறர் நலனுக்காகவோ அமையலாம். இதேவேளை, துணிவற்று செயலிழந்து தத்தளிப்போரும் பலர்.

சுயநலம் கருதித் துணிந்தவர்கள், தாம் முன்னேறவேண்டும், பாராட்டப்பட வேண்டும், ஆட்சியில் இருக்கவேண்டும், ஆராட்சித் துறையில் ஈடுபடவேண்டும் என்ற குறிக்கோள்களை முன்வைத்துச் செயற்படலாம். அல்லது, சிறுபராயத்தில் வாழ்க்கையின் கசப்பான, ஏற்றுக்கொள்ள முடியாத அனுபவங்களைச் சந்தித்திருக்கலாம். இப்படியான கசப்பான அனுபவங்களை சந்தித்த நேரங்களில் அவைபற்றி விளங்கிக்கொள்ள முடியாது தத்தளித்திருக்கலாம். இத்தத்தளிப்பின்போது ஏற்பட்ட உணர்ச்சிகள் உள்ளக்கிளர்ச்சிகளை அடக்கி, அமுக்கி வைத்திருந்து அவைகளில் இருந்து விடுபடாது கசப்பான அனுபவங்களை எதிர்கொள்ளும்போது நாளடைவில் உள்ளக்கிளர்ச்சிகளுக்கும், உணர்ச்சிகளுக்கும் அடிமைகளாகிய நிலையில், துணிந்து தமக்கும் பிறர்க்கும் தீங்கு விளைவிக்கும் செயல்களிலோ அல்லது கொடூரமான செயல்களிலோ ஈடுபடலாம்.

எடுத்துக்காட்டாக ஹிற்லரின் வாழ்க்கை இப்படிப்பட்டதொன்றென்பது உளவியலாளர் கருத்து.

பிறர் நலம் கருதி, துணிகரச் செயல்களில் இறங்குபவர்கள், பெரும்பாலும், தமது ஆற்றல்களை, குறைபாடுகளை ஓரளவு அறிந்திருப்பர். அறிவதோடு நின்றுவிடாது அவற்றை ஏற்று, ஆற்றுப்படுத்தி, நெறிப்படுத்திக்கொள்வர். இவர்கள் தூரநோக்குடையவர்களாகச் செயற்பட்டு பிறரையும், சமுதாயத்தையும் வாழ வைக்கும் உத்வேகத்துடன் சிந்தித்துச் செயற்படுபவர்களாக இருப்பர். இந்நிலையில், இவர்கள் நீதிக்காக, நேர்மைக்காக குரல் கொடுக்க சுய தேவைகளை விட்டுக்கொடுத்து, தமது வாழ்வையும் அர்ப்பணிக்க பின் நிற்கமாட்டார்கள். உதாரணமாக மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, ஆயர் றோமேய்றோ போன்றோரின் வாழ்வை கூறலாம்.

மனத்துணிவு அற்றவர்களோ, சக்தி, பலம், தைரியம் அற்றவர்களாகத் தம்மைக் கணித்துக்கொள்வர். தோல்விகளையும், துன்பங்களையும் சிக்கல்களையும் கண்டு துவண்டு விடுபவர்கள். இவர்கள் தம்மையே தோல்வியாகக் கணித்து, தமது வாழ்வை பயனற்றதாக, சுவையிழந்ததாக எண்ணி கோழைகளாக வாழ்வர். இப்படியான நிலையில் வாழ்வோர் சிலர் சாவே சிறந்ததென நினைக்குமளவிற்கு வாழ்வில் குறிக்கோளற்று, உதவிகளற்று, தம்மையே தனிமைப்படுத்தி வாழும் அல்லது துணிவற்றுச்சாகும் அளவிற்கு சென்றுவிடுவர்.

நாம் எவ்வித மனத்துணிவுடன் செயற்பட்டாலும், அல்லது கோழைகளாய் எதுவும் செய்யத் துணிவற்றவர்களாய்த் தைரியமற்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருந்தாலும், இவைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணியாக அமைவது நமது சிறுபராய அனுபவங்களே என்பது உளவியலாளர் கருத்து.

நமது கடந்தகால அனுபவங்கள், விபரீதங்கள், தாக்கங்கள் ஒருபோதும் நம்மைவிட்டு அகல்வதில்லை. நம் அனுபவங்களால் ஏற்பட்ட கோபம், பயம், வெட்கம், விருப்பு, வெறுப்பு யாவும் உயிரோடு ஆழ்மனத்தில் புதைக்கப்படுகின்றன. இன்னும் வாழ்வில் எதிர்கொண்ட தோல்விகள், நிறைவேற்றப்படாத ஆசைகள் என்பனவும் பிற்கால செயற்பாடுகளுக்கு அடிப்படைக் காரணம் என்கிறார் சிக்மன்ட் புரொய்ட் (Sigmund Freud).

இதே கருத்தை ஆழப்படுத்தி இவை மட்டுமன்றி வாழ்க்கையின் வளர்ச்சி நிலைகளில் ஏற்பட்ட தேக்கங்கள், சிக்கல்கள் நாளடைவில் மனித செயற்பாட்டிற்கு சாதகமாகவோ பாதகமாகவோ அமைகின்றன என்கிறார் எரிக் எரிக்சன் (Eric Erickson).

மனித செயற்பாட்டின் பின்னணி தாழ்வுமனப்பான்மையே என்கிறார் தனிமனித உளவியல் கர்த்தாவாகிய அல்பிறெற் அட்லர் (Alfred Adler). நாம் நமது தாழ்வுமனப்பான்மையை அகற்றுவதற்காக, மூடிமறைப்பதற்காக பல செயற்பாடுகளை திறமையுடனும், போட்டியிடும் மனப்பான்மையுடனும் துணிந்து செய்ய முன்வருகின்றோம்.

நம் குடும்ப உறவில், நம்மை எந்த ஸ்தானத்தில் குடும்ப அங்கத்தவர்கள் வைத்திருப்பதாக நாம் கணித்தோம்? இந்த ஸ்தானத்தைப் பற்றிய நமது மனநிலை என்ன? இதில் இருந்து என் வாழ்க்கைக்குக் கற்றுக்கொண்ட வாழ்க்கைமுறை (Life Style) என்ன? அட்லரின் கருத்துப்படி, கடந்தகால அனுபவங்களைக் குறித்து நம் மனநிலையில் இருந்து கற்றுக்கொண்ட ஒரு தனி வாழ்க்கை முறை (Life Style) நம் வரும்கால வாழ்விற்கு அடித்தளமாக அமைகிறது என்கிறார். வாழ்க்கை என்று சொல்லும்போது, எடுத்துக்காட்டாக, 'இப்படி இருந்தால் நல்ல சந்தோஷமாக இருப்பேன்' என்ற கற்பனைக் கருத்தில் எதிர்காலம் நோக்கி நடத்தல் போன்றது. ஆகவே நமது கசப்பான அனுபவங்களால் உருவான உள்ளக் கிளர்ச்சிகளும், உணர்வுகளும், நமது வாழ்க்கை அனுபவங்களால் கற்றுக்கொண்ட வாழ்க்கை முறைகளும் (Life Style) நமது எதிர்காலத்தைக் குறித்த எதிர்பார்ப்புக்களும், மனத்துணிவுடனோ அல்லது துணிவற்ற நிலையிலோ செயற்பட நம்மைத் தூண்டுகின்றன எனலாம்.

ஆனால் நாம் இவற்றில் நின்று விடுபடலாம். நாம் நமது உண்மை நிலையை மற்றவர்கள் அறியக்கூடாது என்பதற்காக நம்மை அறியாமலே நாம் பாவிக்கும் உளப்பாதுகாப்புக் கவசங்களை (உ+ம்) : உண்மையை மறுத்தல், பிறர்மேல் சாற்றுதல், இடப்பெயர்ச்சி என்பன சில) விலக்கி நேர்மையும், உண்மையும், உள்ளவர்களாக வாழத் துணியலாம். இன்னும் நம்முள் கிடக்கும் உள்ளக்கிளர்ச்சிகளை ஆற்றுப்படுத்தி, புரிந்துணர்வுடன் ஒருங்கிணைந்த முழுமனிதனாக துணிந்து செயற்படலாம்.

மனிதன் நியாயமற்ற, அறிவற்ற உருவல்ல. அவன் அப்படிப்பட்டவனெனில் முழுமனிதனாக வாழத் துடிக்கமாட்டான். மனிதன் எதையும் மிகைப்படுத்தக்கூடியவன். அவன் உள்நோக்குடனோ (Interior) வெளிநோக்குடனோ (Exterior) செயற்படலாம். மன அமைதி பற்றிச் சிந்திக்காது, இன்பக்கொள்கைக்கு அடிமையாகலாம். அதாவது எது எப்படி என்று சிந்தியாது உணர்ச்சிகளை, தன் தேவைகளை தான் விரும்பியபடி அடைய நினைத்து செயற்படல், அன்பு செய்யவும் செய்யப்படவும் வேண்டி சமூகத்தின் தேவைக்கு அடிபணியலாம். அன்றேல் அறிவு வளர்ச்சியை (Intellect) மிகைப்படுத்தி, தலைப்பாகத்திற்கு (Alone the neck) மாத்திரம் ஆட்பட்டு வாழலாம்.

ஆனால் இவையெல்லாம் ஒருங்கிணையும்போது, மனிதன் நம்பிக்கைக்குரியவனாக, சுதந்திரத்துடன் துணிந்து செயற்படும் முழுமனிதனாக மாறலாம் என்பது கால் றோஜேர்ஸ் (Carl Rogers) என்னும் உளவியலாளரின் நோக்கு. ஆகவே நாம் நம்முள் முடங்கிக்கிடக்கும் ஆற்றலை, ஆளுமையை, தைரியத்தை தகுந்தமுறையில் கையாள உண்மையுள்ள முழு மனிதனாக, நமக்கும் பிறருக்கும் நலம் பயக்கும் மனிதனாக, வாழ, உளவியலாளர் தரும் கருத்துக்கமைய, சில வழிமுறைகளைப் பார்க்கின்றோம்.

❖ நமது தனித்தன்மையை ஏற்றுக்கொள்ளுதல்.
❖ நமது ஆற்றல்கள், பலவீனங்களை அறிந்து முன்னேற வழி வகுத்தல்.
❖ நம்மில் நம்பிக்கை வளர்த்து, நமது தனிப்பங்கை சமுதாயத்திற்கு ஆற்ற முன்வருதல்.
❖ நமது தனித்தன்மைக்கு ஒத்த வகையில் குறிக்கோளை வகுத்து செயற்படுதல்.
❖ வாழ்வில் பிரச்சினைகள் உண்டென்று ஏற்று எதிர்கொள்ளும் தன்மையுடன் பதட்டமின்றிச் செயற்படுத்தல்.
❖ நமது தேவைகளை அறிந்து தகுந்த வழியில் நிறைவேற்றக் கற்றுக்கொள்ளல்.
❖ நமது உரிமைகள் மறுக்கப்படும்போது நமது எதிர்ப்பை ஏற்றவகையில் தயங்காது வெளிப்படுத்தல்.
❖ நமது எண்ணங்கள் உணர்ச்சிகளை பொருத்தமாக வெளியிடக் கற்றுக்கொள்ளும் அதேவேளை பிறர் எண்ணங்கள், உணர்ச்சிகளையும் புரிந்து அதற்குரிய மதிப்பைக் கொடுத்தல்.
❖ பிறரது தேவைகளையறிந்து, தேவைக்கேற்ப, பிரதிபலன் எதிர்பாராது உதவிசெய்யும் மனநிலையை வளர்த்தல்.
❖ வளர்ச்சிப் பருவத்திற்கேற்ப அன்புறவுகளை வளர்த்தல்
❖ சம வயதுக் குழுக்களோடிணைந்து நமது ஆற்றல்களைப் பகிரவும், கடமையுணர்வுடன் செயற்படவும் ஓய்வுநேரங்களில் மகிழ்ச்சி தரக்கூடிய செயற்பாடுகளில் விரும்பி ஈடுபடவும் பழகிக்கொள்ளல்.

இத்தகைய அணுகுமுறைகளினால் நாம் சுயநல கோழைத்தனமான நினைவுகள், செயல்களில் இருந்து விடுபட வாய்ப்புண்டு. நாம் நம்மை இனங்கண்டு ஆற்றுப்படுத்தி வாழ எத்தனிக்கலாம். இப்படி வாழ முயலும்போது நாம் மனப்பயம் தெளிந்தநிலையில், மனத்தைரியம் கொண்டு நம்முள் உறைந்து கிடக்கும் ஆற்றல்களைத் தகுந்த முறையில் பயனுள்ளதாக்குவோம். இன்னும் நாம் சிந்தனை, சொல், செயல், உணர்ச்சிகள் ஒருங்கிணைந்த முழுமனிதனாக நமது வாழ்க்கைப் பயணத்தைத் துணிந்து தொடருவோம்.

***தைரியத்துடனும் உறுதியுடனும் சிந்தியுங்கள்***
***ஆன்ம பலத்துடனும் துணிவுடனும் செயற்படுங்கள்.***

## சற்று சிந்தித்துப் பார்...




## உங்களுடைய எண்ணத்தை அறிந்துகொள்ளுங்கள்

ஒருநாள் ஒரு கவிஞன் வீதியால் நடந்துகொண்டிருந்தான். வீதியில் ஒரு போத்தல் உடைந்து சிதறியிருப்பதைக் கண்டான். போத்தல் ஓடுகளைப் பொறுக்கி வீதியின் ஓரத்தில் போடும் எண்ணத்துடன் குனிந்து ஒவ்வொரு போத்தல் ஓடுகளாகப் பொறுக்கிக்கொண்டிருந்தான்.

அவ்வழியில் துவிச்சக்கர வண்டியில் சென்ற ஒருவர் "ஏதோ பெறுமதியான சாமான் விழுந்திருக்குதுபோல அதுதான் பொறுக்கிறார்" என்று பேசிக்கொண்டு சென்றார். மற்றும் இருவர் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது இதைக்கண்டு "ஆற்றையோ காசு விழுந்திருக்கும் போலை சாமான் தேடுகிற மாதிரி நடிச்சு அந்தக் காசை எடுக்கத்தான் குனிஞ்சு பொறுக்கிறார் போல" என்று பேசிக்கொண்டு சென்றனர்.

இந்த இரண்டு கூற்றுக்களிலுமே உண்மையான நிலையைப் புரிந்து பேசியதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட காட்சியைக் கண்டதும் நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதத்தில் சிந்திக்கின்றோம். அவரைப்பற்றி எம் மனதில் ஏதோ கற்பனை எழுகிறது. நாம் அந்த நபரை அந்த விதத்தில் நோக்குவதாலேயே அப்படி எமக்குத் தெரிகிறது. இவ்வாறு மனதில் எழும் காட்சியே, படமே எண்ணம் என இங்கே குறிப்பிடுகிறேன்.

பாடசாலைக்கு புதிய ஆசிரியர் ஒருவர் மாற்றலாகி வருகிறார் என வைத்துக்கொள்ளுங்கள். புதிதாக வந்ததும் அவரை யாருக்கும் தெரியாது என வைத்துக்கொண்டால் அந்த ஆசிரியரைப்பற்றி நினைக்க மாணவர்களால் முடிவதில்லை. ஆனால் சிறிது நாட்கள் சென்றதும் சில வேளைகளில் பட்டப்பெயரும் வைத்துவிடுவர். ஏன்? அந்த ஆசிரியருடைய நடை, உடை, பாவனை, பேச்சு ஆகியவற்றைக் காணக்காண அவர்களது எண்ணம் உருவாகத் தொடங்கும். சிலவேளைகளில் சில மாணவர். "எங்கட டீச்சர் நல்லவ, இரக்கமுள்ளவ, நல்லாய்ப் படிப்பிப்பவ" என்று கூறக்கூடும். இல்லையேல் "அவர் சரியான கண்டிப்பானவ, சில நேரம் நல்லவ" என்று கூறக்கூடும், அல்லது "எங்கட டீச்சர் நல்லாய்ப் படிச்சவ கனக்க அவவுக்குத் தெரியும், ஆனால் வகுப்புக்கு நேரத்துக்கு வராததுதான் பிழை" என்று கூறக்கூடும். இவையே ஆசிரியரைப்பற்றி மாணவர்களது மனதில் உருவாகிய எண்ணமாகும்.

எமக்குள்ளும் ஒவ்வொருவரைப் பற்றிய ஒவ்வொரு எண்ணம் உண்டு. எமது வாழ்வில் எமது எண்ணத்திற்கேற்பவே மற்றவருக்கு பெறுமதி மதிப்பை அளவிடுகிறோம். செயற்படுவதும் எமது எண்ணப்படியேயாகும்.

ஒருவரது உள்ளத்தில் எண்ணம் உருவாகுவது அவர் பெற்ற அனுபவத்திற்கேற்பவே. ஆசிரியரிடமிருந்து பெற்ற அனுபவத்தைக் கொண்டே மாணவர்களுக்கு ஆசிரியர் இப்படிப்பட்டவர் என்ற எண்ணம் உருவாகிறது. தந்தையின் கருணையான செயல்களால் பிள்ளைக்கு அப்பாமீது நல்ல எண்ணம் உருவாகும். இந்த எண்ணங்களை மாற்றுவதற்குப் பல தர்க்கங்களைக் கூறியோ, காரணங்களைக் கூறியோ மாற்ற முடியாது.

உங்களைப்பற்றி ஒருவருக்குக் கூடாத எண்ணம் உருவாகி இருந்தால் அந்த எண்ணத்திற்கு எதிரான விதத்தில் நீங்கள் செயற்படுவதன் மூலமே அந்த எண்ணத்தை மாற்ற முடியும்.

கவனயீனத்தால் ஒவ்வொரு நாளும் பிந்தியே வருவார் என்ற எண்ணத்திலுள்ள மேலதிகாரியின் எண்ணத்தை மாற்றுவதற்குச் சிறந்த வழி நேரத்துக்குக் காரியாலயத்துக்கு வருவதே. இவ்வாறு நேரத்துக்கு வருவதை அவர் அடிக்கடி காணும்போது மேலதிகாரியின் எண்ணம் படிப்படியாக மாறிக்கொண்டு செல்லும். ஒருவருக்கு உங்களைப் பற்றிய பிழையான எண்ணம் இருக்குமானால், அதற்குக் காரணம் உங்களைப் பற்றிய விரும்பாத அனுபவத்துக்கு உள்ளாகி இருப்பதேயாகும். அதைத் தேடிப் பாருங்கள். இதற்கு மாறாக அவர் நல்ல அனுபவத்தைப் பெறக்கூடிய விதத்தில் நடந்துகொள்ளுங்கள். அப்போது அவர் உங்களை நோக்கும் விதம் மாறத் தொடங்கும். எண்ணம் பழமையாகும் அளவுக்கு அதை மாற்றுவது கடினம். அது வேரூன்றிவிடும். மற்றவர் என்னைப்பற்றி என்ன நினைத்தாலும் பரவாயில்லை என்று செயல்படுபவர். இவ்வாறு இல்லாது ஏன் அவர்கள் என்னைப் பற்றி இப்படி நினைக்கிறார்கள்? எனத் தேடிப் பார்க்கும்போது சிலவேளைகளில் நீங்கள் அவர்களுக்குத் தீமையான அனுபவத்தைக் கொடுத்திருக்கலாம் அல்லவா...?

**எஸ். ஜே. யோகராஜா**
*(நன்றி அன்றாட வாழ்வின் தத்துவங்கள்)*

## சிந்தனைக்கு...

1. ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் செலவழித்து ஓடம் செய்து, துடுப்புச் செய்ய மறந்தான். அவன் நடுக்கடலிலே தத்தளித்த போது காரணமறியாது தவித்தான்.

2. நீ உலகுக்கு நல்லதைச் செய்ய நினைக்குமுன் மற்றவர்கள் நீ அவர்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பதை எண்ணிப்பார்.

3. உண்மை சோதிக்கப்படும்பொழுது அதன் மதிப்பு உயருமே தவிர, குறையாது.

4. கற்கள் என்பதற்காக யாரும் அவற்றை ஒதுக்கிவிடுவதில்லை. நீ ஒரு அறிவுள்ள கலைஞனாக இருந்தால் கல் மனிதர்களைப் பயன்படுத்தி அழகான சமுதாயக் கட்டிடங்களைக் கட்டி எழுப்பலாம்.

5. உன் தோள்கள் வலித்தால் கடவுளுடைய தோள்களைப் பற்றிக்கொள். உன் கைகள் கடுத்தால் கடவுளின் கைகளைப் பிடித்துக்கொள். உன் உள்ளம் சோர்ந்துவிட்டால் ஆண்டவனுடைய உள்ளத்திற்குள் புகுந்துகொள். உன் வாழ்வில் நீ தோற்றுப் போனால் இறைவனின் வெற்றியில் சேர்ந்துகொள்.

6. துன்பமில்லாமல் இன்பத்தை அடைந்தவனுக்கு அவன் அடைந்த இன்பமே ஒருநாள் அவனுக்குத் துன்பமாக மாறும்.

வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை இலகு தமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!

தருவது வலண்டின் ஜோசப்

# வாழ்வும் வழிபாடும்



தொடர் – 18

## உரோமை வழிபாட்டு முறை ஏன்?

நாம் தமிழ்க் கிறிஸ்தவர்கள் அல்லவா! இன்னும் உரோமை வழிபாட்டு முறையை ஏன் பின்பற்ற வேண்டும்? என்ற கேள்வி நம்முடைய இதயங்களைத் துளைப்பது நிச்சயம். எங்கே, என்றோ உருவெடுத்த வழிபாட்டு முறையை இன்னும் ஏன் பின்பற்ற வேண்டும்?

### பதில் தேடும் நேரத்தில்

நமக்கு நற்செய்தி போதிக்க வந்த மறைப்பணியாளர்கள் அத்தனை பேரும் உரோமை ரீதியைச் சார்ந்தவர்கள். அவர்கள் திருவிவிலியத்தை மட்டும் நமக்கு இறை செய்தியாக எடுத்து வரவில்லை. வழிபாட்டையும் தங்களின் இறை அனுபவமாக நமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் அறிவித்த நற்செய்தியின் அடையாள வடிவங்களே அவர்கள் நமக்குத் தந்த வழிபாட்டு முறை. நற்செய்தி உரோமைப் பண்பாட்டில் புகுந்து அதன் அடையாளங்களை ஊடுருவி புதிய அர்த்தங்கள் கொடுத்திருக்கிறது.

நற்செய்தி முதல் இரண்டு நூற்றாண்டு கால ஆதிக் கிறிஸ்தவர்களின் நம்பிக்கை நூல் என்று கூறுகின்ற நேரத்தில், வழிபாட்டுப் பாடங்களைப் பதினெட்டு நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் நம்பிக்கை வடிவங்கள் என்று அழைத்தால் அது மிகையாகாது.

வழிபாட்டில் விசுவாசக் களஞ்சியத்தை நாம் சுவைக்க வேண்டுமானால் அதன் வரலாற்றிற்குச் செல்லக் கடமைப்பட்டுள்ளோம். இன்றைய வழிபாட்டு அடையாளங்களைப் புரிந்துகொள்ளும் வகையில் வரலாற்று நிகழ்வுகளை இங்கு வரிசைப்படுத்த விழைகிறேன். **உரோமை வரலாற்றை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.** இவை ஐந்துமே வழிபாட்டு வளர்ச்சியை மட்டுமல்ல, இன்று வழிபாடு வளர்க்கும் நம்பிக்கை உணர்வுகளையும் சித்தரிக்கிறது.

### I. குடும்பத் திருச்சபைகள்

முதல் மூன்று நூற்றாண்டுகள் கிறிஸ்தவ குடும்பத் திருச்சபைகளாகவே இருந்தன். ஆலயங்கள் கட்டி, அமைப்புகளை உருவாக்கி, ஆடம்பர வழிபாடு நடத்த அவர்களுக்கு வாய்ப்புகள் இல்லை என்று கூறுவதைவிட, தேவை ஏற்படவில்லை என்ற கூற்றே உண்மையானது.

யூதச் சமயத்தின் அதிகாரப்பிடியிலிருந்து வெளியேறி பிற இன மக்களையும் அரவணைத்துப் புதிய சமுதாயம் கண்ட கிறிஸ்தவர்கள் தங்கள் உறவை உறுதிப்படுத்திக்கொள்ள வழிபாடு நடத்தினார். புதிய உறவுகள், புதிய சக்திகள், புதிய படைப்பாற்றல் போன்றவை வழிபாடுகளை வல்லமையுடையதாக மாற்றியது.

இன்றைய அன்பியத் திருச்சபைகள் போன்று வீடுகளில் மக்கள் ஒன்றுகூடி தங்கள் உறவுகளையும் நம்பிக்கை உணர்வுகளையும் பகிர்ந்துகொண்டனர். 'அப்பம் பிடுதல்' என்ற நற்கருணை ஒன்றே அவர்களின் முதல் வழிபாட்டு முறையாக உருவெடுத்தது. இயேசுவை நினைவுகூர்ந்து வழிபட திருத்தூதர்கள் விட்டுச் சென்ற ஒரே பாரம்பரியமாக நற்கருணை கொண்டாடப்பட்டது.

இந்த நற்கருணைக் கொண்டாட்டத்தில் மக்களிடையே சமத்துவமும், சகோதரத்துவமும் வளர்வதற்கான முயற்சிகள் பல எடுக்கப்பட்டன. கிரேக்கம் வழிபாட்டு மொழியாக இருந்த காலம் போய் மெல்ல, மெல்ல உரோமையரின் தாய் மொழியாகிய இலத்தீன் மொழி, வழிபாட்டு மொழியாக மாறத் துவங்கியது.

மக்கள் தலைவர்களே வழிபாட்டுத் தலைவர்களாக இருந்தது வழிபாட்டின் தனிச் சிறப்பு. மக்கள் தலைவர்கள் என்று சொல்லும் நேரத்தில், நம்பிக்கைக்குச் சிறந்த சாட்சியம் சொல்பவர்கள், நெருக்கடியின்போது திருச்சபையை முன்னின்று வழிநடத்துபவர்கள் என்றே பொருள்பட்டது. பிற திருச்சபைகளிலிருந்து வரும் தலைவர்களுக்கும் இறைவாக்கினருக்கும் உரிய மதிப்பளித்த மாண்பையும், பிற திருச்சபைகளுக்கு உதவி செய்கின்ற மனப்பான்மையையும் வழிபாட்டுக் கூட்டங்களில் உணரமுடிந்தது.

வழிபாட்டுப் பாடங்கள் பெரும்பாலும் சொந்த செபங்களாகவே இருந்தன. உணர்வுபூர்வமாக மக்கள் செபித்தனர். அதே சமயத்தில், நன்றாகச் செபிப்பவர்களின் அருங்கொடைகளை மதித்தனர்.

வழிபாடு வாரத்தின் முதல் நாள் அமைந்தது கிறிஸ்தவத்தின் தனித் தன்மையைக் காட்டுகிறது. ஆண்டவரின் நாள், உயிர்ப்பின் நாள், வாரத்தின் முதல் நாள், நீதியின் ஞாயிறு இயேசுவின் நாள் என்று பல பெயர்கள் வைத்து ஞாயிற்றுக்கிழமையை மக்கள் சிறப்பித்து இருப்பதும், யூதர்களின் ஓய்வு நாளாகிய 'சனிக்கிழமை'யிலிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டியிருப்பதும் சிறப்பிற்குரிய பண்புகள்.

குடும்பத் திருச்சபையிலிருந்து இன்று நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் ஏராளமாக உள்ளன. இன்றைய அன்பியத் திருவழிபாடுகளுக்கு இந்தக் குடும்பத்திருச்சபையே ஆதாரம். நட்போடு உறவாடுவதிலும், அப்பம் பிடுதலிலும் நிலையாக இருந்த அவர்களது வாழ்க்கையே திருவழிபாட்டின் உயிர் இராகங்கள்.

வழிபாடு என்பது வாழ்க்கையின் வெளிப்பாடு மட்டுல்ல, வாழ்க்கையின் முகவரி என்ற எண்ணம் ஆதிக்கிறிஸ்தவர்களிடம் இருந்தது. எப்படி வழிபடுகிறோமோ அப்படியே வாழ்வோம் என்பது அவர்களின் வேதவாக்குகள்.

### II. காவியக் காலங்கள் (Classical Period)

கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தை உரோமைத் திருவழிபாட்டின் 'காவிய காலங்கள்' என்று அழைக்கலாம். இந்தக் காலகட்டத்தில் உரோமைக் கிறிஸ்தவம் அரசால் அங்கீகரிக்கப்பட்டது. அரசாங்க சமயமான கிறிஸ்தவத்தில் பல்வேறு மக்கள் தங்களை இணைத்துக்கொண்டனர். ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் என்ற பணியாளர்களின் அமைப்புமுறை ஏற்பட்டது இந்தக் காலத்தில்தான்.

திருவழிபாடு மக்கள் கொண்டாட்டமாகக் களைகட்டத் துவங்கிய இந்தக் காலத்தில் தனிப்பட்டவர்களின் சொந்தக் கொண்டாட்டத்தை மக்கள் அனைவரும் பொதுவான கொண்டாட்டமாக்கியது கிறிஸ்தவம். திருவழிபாட்டில் எந்தவொரு ஊரைச் சார்ந்த கிறிஸ்தவனும் இயல்பாக பங்குபெறும் வகையில் வழிபாட்டை வடிவமைக்க வேண்டும் என்ற எண்ணம் திருச்சபைக்கு வந்தது.

நன்றாக வழிபாடு நடத்தும் அருங்கொடையைப் பெற்ற பணியாளர்களின் செபங்களையும், வழிபாட்டு முறைகளையும் ஏட்டுச் சுவடிகளில் குறிப்பெடுத்து அனைவருக்கும் பொதுவான வழிபாட்டு முறையாகத் திருச்சபை அறிவித்தது.

மக்கள் மிக ஆர்வத்தோடு இந்தப் படைப்பாற்றல் மிக்க புதிய வடிவங்களைத் தங்கள் பகுதிகளில் பயன்படுத்தத் துவங்கினர். இந்தப் புதிய முறைகளைத் தொகுத்து செபங்களுக்குச் சாக்கிரமெண்ரீஸ் (Sacramentaries) என்றும், சடங்குகளுக்கு ஓர்டோ (Ordo) என்றும், வாசகங்களுக்கு லெக்ஸ்னரீஸ் (Lactionaries) என்றும் பெயர் வைத்தனர். இது தவிர பாடல்கள் தொகுப்பும் அவர்களின் பழக்கத்தில் இருந்தது.

இந்த மாற்றத்தில் மிகச் சிறந்த பண்புகளையும் சில குறைகளையும் நம்மால் காண முடிகின்றது. ஆயர்களும் குருக்களும் மிகச் சிறப்பாக வழிபாடு நடத்தினர். ஆனால் வழிபாட்டை வாழ்க்கையின் செயற்பாடுகளோடு அதிகம் தொடர்புபடுத்தவில்லை. சரியான அமைப்பு முறைகளில் கவனம் செலுத்தியவர்கள் மக்களை விட்டுப் பிரிந்து பெரிய ஆலயங்கள் கட்டி வழிபாட்டை மட்டுமே வாழ்வாக்கிக் கொள்ளத் துவங்கினர். குடும்பத் திருச்சபைகளில் இருந்த வழிபாட்டிற்கும் வாழ்வுக்கும் உள்ள தொடர்பு குறையத் துவங்கியது என்பதே உண்மை.

### III. பிரெஞ்சு ஜெர்மானியத் தாக்கங்கள

எப்படி வழிபடுகிறோமோ அப்படியே நாம் வாழ்கிறோம் என்பது உண்மை. ஏனெனில் வழிபாட்டில் நாம் நம்முடைய நம்பிக்கையை மட்டும் வெளிப்படுத்துவதில்லை. நம்முடைய உலகப் பார்வைகள், எதிர்நோக்குகள், எண்ணங்கள், செயல் ஊக்கங்கள் அனைத்தும் வெளிப்படும் இடம் வழிபாடு.

உரோமை வழிபாட்டு முறையில் பல்வேறு வழிபாட்டுப்பாடல்கள் உருவாகி மக்கள் மத்தியில் பேராதரவைப் பெற்றன. ஒவ்வொரு முக்கியமான வழிபாட்டு மையத்திலும் ஒரு வகையான வழிபாட்டு முறை இருந்தது.

கி.பி. 8ம் நூற்றாண்டில் பிரஞ்சு – ஜெர்மனிப் பகுதிகளைக் கைப்பற்றி ஆண்ட பெப்பின் பேரரசரும் அவரின் மகனுமான சார்லஸ் பேரரசரும் உரோமை வழிபாட்டு முறையைத் தங்கள் நாடுகள் அனைத்திலும் பரவச் செய்து வழிபாட்டில் ஓர் ஒற்றுமையை உருவாக்க விரும்பினர். ஒரே வழிபாட்டு முறை எளிதாக மக்களை ஒன்றுபடுத்திவிடும் என்ற அரசியல் உத்தி அவர்களை இப்படிப்பட்ட ஒரு முயற்சியைச் செய்ய வைத்தது. உரோமைக்கு ஆள் அனுப்பி அங்கு பின்பற்றப்பட்ட வழிபாட்டு முறையைத் தங்கள் நாட்டுக்கு வரவழைத்த பேரரசர் சார்லஸ் அந்த வழிபாட்டு முறை சாதாரண மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்காத ஒன்றாக இருப்பதைக் கண்டு வருத்தமடைந்தார்.

உரோமை வழிபாட்டு முறையில் செபங்கள் இரத்தினச் சுருக்கமாக இருந்தன. சடங்குகள் மிக எளிமையாகவும் ஒழுங்குடனும் அமைக்கப்பட்டன. பணியாளர்கள் எந்தப் பணிகளை எப்படி செய்ய வேண்டும் என்ற தெளிவு இருந்தது. மக்களைக் கவரும் பக்திச் சுவைகளுக்கோ, அதிசயமான செயல்பாடுகளுக்கோ, ஆடம்பரச் செயல்பாடுகளுக்கோ அதில் இடம் இல்லை.

உரோமை வழிபாட்டை பிரஞ்சு ஜெர்மனிய மக்களின் பண்பாட்டு முறைகளுக்கு ஏற்ப உருமாற்றினார்கள் இந்த அரசர்கள். ஆலயத்தில் மணியடிப்பது, தூபம் காட்டுவது, மலர்கள் அலங்காரம் செய்வது ஒரு சில மந்திரங்களை யாருக்கும் புரியாத வண்ணம் சொல்வது போன்ற கூறுகள் உரோமை வழிபாட்டில் சேர்க்கப்பட்டன.

இவற்றில் நன்மையும் இருந்தது. தீமையும் இருந்தது. மக்கள் தங்கள் சொந்த பண்பாட்டின் அடிப்படையில் வழிபாடு செய்ய இந்த முறை வழிவகுத்தது. அதே சமயம் பண்பாட்டின் மூடப் பழக்கங்கள் சிலவும் வழிபாட்டில் நுழைந்துவிட்டன. இத்தகைய, மாற்றியமைக்கப்பட்ட வழிபாட்டுமுறை மறுபடியும் உரோமைக்குச் சென்றது. அங்குள்ள மக்கள் இந்தச் சடங்கு முறைகளின் அலங்காரங்களைக் கண்டு அவற்றை ஏற்றுக்கொண்டனர் என்பது நமக்கே வியப்பாக உள்ளது. அவர்களை ஏற்றுக்கொள்ள வைத்தவர்கள் பிரஞ்சு, ஜேர்மானியப் பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தையர் என்று சொன்னால் அது மிகையாகாது.

### IV. வழிபாட்டுப் பாடங்கள் நிர்ணயிக்கப்பட்ட காலங்கள்

வழிபாட்டிற்கான பாடங்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் திருச்சபையில் வளர்ந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. வழிபாட்டில் மிக எளிதாக சிலர் திருச்சபையின் நம்பிக்கைக்கு எதிரான கோட்பாடுகளைப் புகுத்தத் துவங்கினர். எனவே மக்களை அவர்களது குழப்ப நிலையிலிருந்து விடுவிக்க வழிபாட்டுப் பாடங்களைத் திருச்சபையே நிர்ணயிக்கத் துவங்கியது.

இந்தக் காலகட்டத்தில் மடலாலயங்ளில் உள்ள துறவிகள் குருத்துவத் திருநிலைப்பாடு செய்யப்பட்டனர். அவர்கள் 'தனிப்பட்டத் திருப்பலிகளை'ச் (Private Masses) செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கூட்டுத்திருப்பலிகள் அந்தக் காலத்தில் இல்லை. ஒரு குருவின் அதிகாரம் அவர் தனியாக நிறைவேற்றும் திருப்பலியில் வெளிப்படுகிறது என்ற எண்ணங்கள் வளர்ந்த காலம்.

குருக்கள் திருப்பலியும் திருச்சடங்குகளும் நிறைவேற்றுவதற்காகவே வழிபாட்டுப் பாடங்கள் நிர்ணயிக்கப்பட்ட புத்தகங்கள் வந்தன. கி.பி. 1570ஆம் ஆண்டு திருத்தந்தை ஐந்தாம் பியோ அவர்கள் உரோமைத் திருப்பலிப் புத்தகம் ஒன்றை வெளியிட்டது இந்த முயற்சிகளின் கொடுமுடி என்று சொல்லலாம்.

சீர்த்திருத்தவாதிகளின் திரிபுக்கொள்கைகளும் வழிபாட்டுப் பாடங்கள் நிர்ணயிக்கப்பட்ட மற்றொரு காரணமாக இருந்தது. மார்ட்டின் லூத்தரின் வழிவந்தவர்கள் நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம் வெறும் அடையாளப் பிரசன்னம்தான் என்று சொல்ல ஆரம்பித்தனர். அப்பத்தைப் பிட்கும் நேரத்தில் ஆண்டவரை நாம் வெறுமனே நினைவு கூறுகிறோம் என்று சொல்ல ஆரம்பித்தனர். இந்த நிலையில் கத்தோலிக்கர்களின் நம்பிக்கை அங்கீகாரம் பெற்ற செபங்களாக வெளிவந்தன.

கத்தோலிக்க திருச்சபைக்குள்ளும் சில குருக்கள் கட்டுப்பாடு இல்லாமல் விரும்பியபடி திருவழிபாடு நிறைவேற்றி மக்களின் வெறுப்புக்கு உள்ளானது மற்றொரு காரணம். வழிபாடுகளின் பொதுத்தன்மையைக் கருத்தில் கொள்ளாமல் விரும்பியபடி எல்லாம் மக்களை ஆட்டிப்படைத்த செயல்கள் காரணமாக மக்கள் திருவழிபாட்டில் ஒழுங்குமுறைகளைப் பெரிதும் விரும்பினர். இத்தகைய காரணங்களால் ஒரே மாதிரியான வழிபாடு, ஒரே வகையான பாடங்கள், ஒரே மொழி என்ற நிலை கத்தோலிக்கத் திருச்சபையின் உரோமை வழிபாட்டு முறையில் நிலைநாட்டப்பட்டது. இதை வளர்ச்சி என்று சொல்வதைவிட அந்தக் காலத்தில் தேவைப்பட்ட ஒழுங்குமுறை என்றே மதிப்பிடலாம்.

### V. வழிபாட்டு இயக்கங்களும் வத்திக்கான் சங்கங்களும

பதினாறாம் நூற்றாண்டில் திருச்சபையில் உருவான திரிதெந்தீன் சங்கம் சரியான வழிபாட்டு முறையை நிலைநிறுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டது.

சாதாரண மக்கள் குருக்கள் நிறைவேற்றும் சடங்குகளையும், செபங்களையும் அப்படியே ஏற்றுக்கொண்டனர். எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. குடும்பமாக ஆலயத்திற்கு வருவது, ஆடம்பரமான திருப்பலிகளில், அருமையான இசையில், அழகான ஆலய அமைப்புக்களில் தங்களைப் பறிகொடுத்துச் செல்வது போன்றவை வழிபாட்டுச் செயல்கள் ஆகின.

இந்த நிலை ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகள் தொடர்ந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கத்தோலிக்க பொது நிலையினரில் சில அறிவு ஜீவிகள் வழிபாட்டில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்க வேண்டும் என்ற தங்களது ஆதங்களை வெளிப்படுத்தத் துவங்கினர். வழிபாட்டு இயக்கங்களை உருவாக்கினர்.

வழிபாட்டு இயக்கங்கள் முதலில் வலியுறுத்தியது தாய் மொழியில் வழிபாடு. சொந்த மொழியில் வழிபடும் நேரத்தில்தான் இறைவனை அப்பா! தந்தையே என்று உரிமையோடு அழைக்க முடியும் என இயக்கங்கள் வலியுறுத்தின. அடுத்து மறுமலர்ச்சி விவிலியத்தை, இறைவார்த்தையை வழிபாட்டில் பயன்படுத்துதல். வழிபாட்டின் மையமாக இறை வார்த்தையைக் கொண்டுவர அவை முயன்றன. இறைவார்த்தையைச் செபிக்கும் இனிய பண்பு கத்தோலிக்கத் திருச்சபையில் புகுந்தது.

மூன்றாவது பெரும் முயற்சி வழிபாட்டுக்கு வரும் மக்கள் அனைவரையும் பொருள் உள்ள வகையில் வழிபாட்டில் பங்கேற்கச் செய்தல். இறைமக்கள் அனைவருமே அரச குருத்துவத் திருக்கூட்டத்தினர். இறைவன் வாழ்க்கையில் செய்யும் அரும்பெரும் செயல்களை அறிவிப்பது அனைவரின் பெருமைமிக்க வழிபாட்டுச் செயலாகும் என்ற உண்மையை வழிபாட்டு இயக்கங்கள் வலியுறுத்தின.

இந்த இயக்கங்கள் அனைத்தும் மக்களின் இயக்கங்கள். *ரொமானோ குவார்தீனி, லாம்பர்ட் பவுதோன்* போன்ற குருக்கள் இந்த இயக்கங்களை நெறிப்படுத்தினர். 12ஆம் பயஸ் போன்ற திருத்தந்தையர்கள் இந்த இயக்கங்களைத் திருச்சபையில் உண்மையான கரிசனையாக வெளிப்படுத்தினர். 12ஆம் பயஸ் எழுதிய இறைவனின் இடைநிலையாளர் (Mediator Dei) என்ற திருமடல் இயேசு என்ற தலையோடு இறைமக்கள் என்ற உடல் இணைந்து இறைவனுக்குச் செலுத்துகின்ற புகழ்ச்சிச் செயலே வழிபாடு என்று மிகச் சிறப்பாக விளக்கி வழிபாட்டின் இயல்பை நமக்குச் சொல்லித் தருகிறது.

இந்த முயற்சிகளின் முத்தாய்ப்பாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் வந்தது. 1948ஆம் ஆண்டு 12ஆம் பயஸ் வழிபாட்டில் சீர்திருத்தம் செய்ய ஒரு ஆணைக்குழுவை ஏற்படுத்தினார். அதன் தொடர் முயற்சிகளுக்குத் திருத்தந்தை 23ஆம் யோவான் ஆதரவு தந்தார். பல்வேறு இடங்களில் கருத்தரங்குகள் நடந்தன. பல்வேறு மக்களின் பரிந்துரைகள் கோரப்பட்டன. இதன் அடிப்படையில் 1933ஆம் ஆண்டு டிசம்பர் 4 அன்று சங்கத்தின் முதல் ஆவணமாக 'திருவழிபாடு' என்ற ஆவணம் மலர்ந்தது.

வத்திக்கான் சங்கம் பல்வேறு மறுமலர்ச்சிக் கருத்துக்களுக்கு முன்மொழிவு சொன்னதே தவிர எப்படி மறுமலர்ச்சிச் செயல்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நெறிமுறையைச் சொல்லவில்லை. அந்த நெறிமுறைகளைப் பின்வரும் தலைமுறையினருக்கு விட்டுவிட்டது. தூண்டுதல் பணியை மட்டுமே இந்தச் சங்கம் நோக்கமாகக் கொண்டிருந்தது.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

கருத்துக்களம்

# மன்னாரின் தலைவிதியை மாற்றியமைப்பது யார்?

**- மக்கள் காதர் -**

ஒரு காலத்தில் உலகின் “கிழட்டு நோயாளி” துருக்கியென்றும், இலங்கையின் ‘கிழட்டு நோயாளி’ மன்னார் என்றும் நமது முன்னோர்களால் பரவலாகப் பேசப்பட்டு வந்தமை இன்றைய இளைஞர்களுக்குத் தெரியாது. ஆனால் இன்று உலகின் கிழட்டு நோயாளி துருக்கி, இளமையும், துடிப்பும், செல்வச் செருக்கும் கொண்ட ஆரோக்கிய நாடாக மாறிவிட்டது. அதன் சிற்பி கமால் பாட்சா அந்த நாட்டை உயர்ந்த நிலைக்கு மாற்றினார். அதனால் அவர் துருக்கியின் தந்தையாக “அத்தர் துர்க்” என அழைத்துப் போற்றப்படுகின்றார்.

ஆனால் எமது “கிழட்டு நோயாளி” மன்னாரின் சிற்பி யார்? ‘அத்தர் மன்னார்’ என அழைக்கப்பட வேண்டியவர் எவர்? சரியான அரசியல், பொருளாதார, கல்விக் கலாச்சாரமின்றி மன்னார் அழிந்துபோகத்தான் வேண்டுமா? நல்லவேளையாக ஆன்மீகத் தலைமைகள் வெகு சிறப்பாக இங்கு இயங்கிவருவதால் இங்கு மும்மதத்தவரிடமும் பிரிக்க முடியாத ஒற்றுமை ஊசலாடுகின்றது.

60 ஆண்டுகளுக்கு முன்னர் மன்னார் எப்படியிருந்தது? சற்று இரைமீட்டிப் பார்ப்போமா? பிரித்தானியர் இலங்கையை ஆண்டபோது மன்னார் பட்டினத்தை தலைநகராக்கி குழாய் நீரையும், மின்சாரத்தையும் இலவசமாகவே வழங்கினர். தலைமன்னார் துறைமுகம் முதல், கொழும்பு வரையில் புகையிரத ஓடுபாதைகளையும், இரயில் நிலையங்களையும், இளைப்பாற்று விடுதிகளையும் அமைத்தனர். மக்கள் பயமின்றிப் பிரயாணம் செய்தனர்.

இலங்கையின் இரண்டாவது பெரிய குளமான கட்டுக்கரைக் குளத்தை அமைத்தனர். அதன் மூலம் சுமார் 35 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர் பாய்ச்சப்பட்டது. நகரில் மின்சாரம் வருவதற்கு முன்னரே அழகிய, காற்றோட்டமான வெளிச்சமான கட்டடங்களை அமைத்தனர். பெருந்தெருக்களை அமைத்ததால் கல்விமான்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கினர். உலக மொழி ஆங்கிலத்தைக் கற்றுத்தந்து, “யாதும் ஊரே யாவரும் கேளீர்” எனச் சொல்ல வைத்தனர். இராமேஸ்வரத்தையும், மன்னாரையும் இணைத்துக் கப்பல் சேவையைத் தினமும் நடத்தினர். மன்னார் தலைநகரை அழகுபடுத்த மரங்களை வளர்த்தனர்.

அன்று சுமார் 30 ஆயிரம் மக்கள் இங்கு வாழ்ந்தனர். மன்னார் மண்ணில் எவர்தான் இல்லை? கல்விமான்கள், பட்டதாரிகள், வைத்தியகலாநிதிகள், பொறியியலாளர்கள், கலைக்கலைஞர்கள், சட்டத்தரணிகள், தொழிலதிபர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், சம்மாட்டிகள், புத்திஜீவிகள், பண்டிதர்கள், வித்துவான்கள், ஊடகவியலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், புலவர்கள் எனப் பலரும் பெருகி இன்று மக்கள் தொகை ஒரு இலட்சத்தையும் தாண்டிவிட்டது. தற்போது மன்னார் மாவட்டத்தவர்களே மன்னாரின் எல்லாத்துறையிலும் முன்னணியில் உள்ளனர்.

“மன்னாரை மன்னாரானே ஆள்கின்றான்” என்ற நிலைமை உருவாகிவிட்டது. அத்துடன் பெண்கள் பலரும் தலைமைத்துவத்தில் உள்ளனர். எத்தகைய மகிழ்ச்சியூட்டும் வளர்ச்சி இது?

ஆனால், இருந்தும் எமக்குக் கிடைக்க வேண்டிய எத்தனையோ வளங்கள் இன்றும் எம் கையை விட்டுப் போகின்றன. இவைகள் காவு கொள்ளப்படுவதை நாம் அறிந்தும் அறியாதவர்கள் போலவும், தெரிந்தும் தெரியாதவர்கள் போலவும் “நமக்கென்ன” என்ற நினைப்பில் வாழ்கின்றோமே? ஏன் இந்த வம்பு நமக்கென்று வாய் மூடி எதுவும் பேசாது இன்னும் வாழத்தான் வேண்டுமா? சற்று சிந்தித்துப் பாருங்கள். எனதருமை இளம் சமுதாயச் சிற்பிகளே! வளர்ந்த பெருமைமிக்க புத்திசீவிகளே!. எமக்குச் சுதந்திரம் கிடைத்த இந்த 60 ஆண்டுகளில் எத்தனையோ வழிகளையும், பெறுமதிமிக்க நிலங்களையும் இழந்துள்ளோம் தெரியுமா? பட்டியல் போடட்டுமா? எழுத ஏடு தாங்காது. அதில் மிகச் சிலவற்றை மட்டும் இங்கு தருகிறேன்.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட இராமேஸ்வரம் - தலைமன்னார் - கொழும்பு - கப்பல் - புகையிரத இணைப்புச் சேவை மன்னார் மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். அதன் மூலம் இந்தியாவிலிருந்து உணவுப் பொருட்களுட்பட சகல கனரகப் பொருட்களையும், வாகனங்களையும் முதலில் மன்னார் மக்களே பெற்றார்கள். தலைமன்னார் ஒரு வளம் நிறைந்த பாரிய துறைமுகமாக விளங்கியது. இலங்கை, இந்தியா மக்கள் மலிவுக்கட்டணத்தில் (சுமார் 28 ரூபாய்கள்) உலகம் சுற்றி வந்தனர். 1964இல் இங்கு ஏற்பட்ட கொடிய சூறாவளியில் இச்சேவை சீர்குலைந்து 1985ல் முற்றாகவே நிறுத்தப்பட்டது. அத்தோடு இலங்கை இந்திய உறவுப்பாலம் உடைந்து வீழ்ந்தது.

1960இல் இங்கு நிறுவப்படவிருந்த சீமெந்துத் தொழிற்சாலை பல்வேறு சதிமுயற்சியால் யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கு மாற்றப்பட்டது. ஆனால் அதன் முக்கிய மூலப்பொருளான பெறுமதிவாய்ந்த களிமண் மட்டும் எவ்வித கட்டணமும் செலுத்தப்படாமல் மன்னார் முருங்கனிலிருந்து பல்லாயிரம் தொன் கணக்கில் அள்ளிக்கொண்டு போகப்பட்டது. இக்களியினால் தயாரிக்கப்பட்ட “காங்கேயன் சீமேந்து” சர்வதேச நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுப் புகழ்பெற்றது. ஆயினும் ஒரு சதமும் மன்னாருக்குக் கிடைக்கவில்லை. முருங்கனுக்குக் காவலாளிகளாக நால்வர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் மட்டுமே மன்னார் மக்கள். மீதி உயர் அதிகாரிகள் யாவரும் யாழ்ப்பாணத்தவர்கள்.

அதுபோல் 1970இல் ஸ்ரீமா அம்மையார் எம்மை ஆண்டபோது இங்கு வரவேண்டிய மஹாவலி நீர் மதவாச்சியுடன் தடுத்து நிறுத்தப்பட்டது. 1975இல் மன்னார் வைத்தியசாலைக்கு வந்த சத்திரசிகிச்சைகள் கூடம், மன்னார் வைத்தியசாலையின் கதவுகள் சிறிது எனக் காரணம் காட்டி வவுனியாவுக்கு மாற்றப்பட்டது. இங்கு அமையவேண்டிய கண் சிகிச்சைக் கூடமும் வவுனியாவுக்கு மாற்றப்பட்டது. மன்னாருக்கு வரவேண்டிய கல்வியியற் கல்லூரி, ஆயுள்வேத வைத்தியசாலை, தொழில்நுட்பக் கல்லூரி என்பனவும் வவுனியாவுக்கே மாற்றப்பட்டன.

அதிஸ்ரவசமாக இங்கு 1970இல் அமையப்பெற்ற டின்மீன் தொழிற்சாலை இலங்கையின் முதலாவது தொழிற்சாலை என்ற பெயருடன் சுமார் 200 பெண் தொழிலாளர்களுடன் வெற்றிகரமாக 5 வருடங்கள் இயங்கிவந்தது. தற்போது அதன் பெறுமதிமிக்க இயந்திரங்கள் தென் பகுதிக்கு கொண்டுபோகப்பட்டு கட்டிடங்கள் அனைத்தும் அழிவுற்று மூடிக்கிடக்கின்றன.

1972இல் பெற்றோலிய ஆய்வுக்காக மன்னார் தீவு தேர்வு செய்யப்பட்டு சுமார் மூன்று கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு மூன்று கிணறுகள் தோண்டப்பட்டு அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு மசகு எண்ணெய் காண்பிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டது. பின்னர் எரிபொருள் ஆய்வு நிலையம் எரிக்கப்பட்டுச் சுடுகாடானது. இவ்வேலைத்திட்டத்தில் மன்னார் மக்கள் வெறும் நாட்கூலிக்காகவே வேலைக்கமர்த்தப்பட்டனர். உயர் அதிகாரிகள் அனைவரும் சிங்களவர்களாவர்.

1977ல் “ஜே ஆர்” இலங்கையை ஆண்டபோது விகிதாசார தேர்தல் முறையின்கீழ் பழமை வாய்ந்த மன்னார் தேர்தல் மாவட்டம் புறம்தள்ளப்பட்டு “வன்னித் தேர்தல் மாவட்டம்” என்ற பெயரில் தேர்தல் திணைக்களம் வவுனியாவுக்கு மாற்றப்பட்டது. அதன் பின்னர் அனைத்துத் தேர்தல்களமும் வவுனியா அரச செயலகத்திலேயே கையாளப்பட்டது. இலங்கையின் பழமை வாய்ந்த மன்னார் பட்டின சபை, அன்றைய ஜனாதிபதியால் தரம்குறைக்கப்பட்டு 1990இல் பிரதேச சபையானது. அதேவேளை வவுனியா பட்டின சபை அவரால் தரம் உயர்த்தப்பட்டு நகர சபையானது. 2000 ஆண்டில் மன்னார் முதல் தலைமன்னார் துறை வரையும், முருங்கன் முதல் அரிப்புத்துறை வரையும் சுமார் 35 கோடி ரூபாயில் அமைய வேண்டிய அதி நவீன “கார்ப்பெட்” பாதை வெறும் கிறவல் பாதையாக மாற்றமடைந்தது.

மன்னாரில் இயங்கிவந்த மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் கடந்த ஆறு மாதங்களாக மூடிக்கிடக்கின்றது. மன்னார் சந்தையில் சுமார் 50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட, முற்றிலும் குளிரூட்டவைக்கப்பட்ட மீன் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்ட அன்றே மூடப்பட்டது.

**மன்னாரில் முதன் முறையாக :-**

**01.** 1965 இங்கு தொடங்கப்பட்ட செய்தி ஏடு ‘மக்கள்’ என்ற பத்திரிகை. சுமார் 5 ஆயிரம் பிரதிகள் விலைபோனது. ஒரு பிரதி சதம் 15 மட்டுமே, சுமார் 3 ஆண்டுகள் மட்டுமே வெளியிடப்பட்டது. தொடர் வழக்குகளாலும், வர்த்தகர்களின் விளம்பரங்களின்றியும் 1968இல் இப்பத்திரிகை நிறுத்தப்பட்டது.

**02.** 2005இல் இங்கு நடைபெறவிருந்த தேசிய மீள்குடியேற்ற வீடமைப்பும் வெகு ஆடம்பரமாகப் பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றதுடன் சரி. மன்னாரில் இவ்விழா நடைபெற நேரமில்லை. மாறாக வவுனியா சூடுவந்த புலவுக் கிராமத்தில் ஒரு நாள் நிகழ்வு நடந்தேறியது. இதற்காக ஜனதிபதி நிதியத்திலிருந்து 7 கோடி ரூபாய்களும், உலக வங்கியிலிருந்து 5 கோடி ரூபாய்களும் செலவிடப்பட்டன. ஆயினும் நூறு முஸ்லிம் குடும்பங்கள்கூட மீள்குடியேற்றப்படவில்லை. அவர்களும் இப்போது இங்கு இல்லை.

**03.** 2005இல் மன்னாரில் நடைபெற ஏற்பாடாகியிருந்த வடக்குக் கிழக்கு தமிழ் இலக்கிய விழா வெகு ஆடம்பரத்துடன் பூர்வாங்க ஏற்பாடுகள் மன்னார் அரச செயலகத்தில் நடைபெற்றதுடன் இன்று வரையில் இவ்விழா இங்கு நடைபெறவேயில்லை. இதை நம்பி பல உள்ளூர்க் கலைஞர்கள் செய்த சொந்தச் செலவுகளும் கிடைக்கவேயில்லை.

**04.** 2007இல் நீதிமன்றத்தால் பிரிக்கப்பட்ட வடமாகாண தமிழ் இலக்கிய விழா இங்கு நடைபெற ஏற்பாடாகி அதற்காக மன்னார் மக்கள் கலைஞர்கள் எவருக்கும் அறிவிக்கப்படாமல் இரகசியமாக வவுனியாவில் நடாத்தி முடிக்கப்பட்டது.

**05.** 1928இல் அடிக்கல் நடப்பட்டு 1930இல் திறந்துவைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது அதிநீளமான கடற்பாலம் (மன்னார் தாம்போதி) 1964இல் ஏற்பட்ட சூறாவளியில் சேதமுற்றுப் பின்னர் இலங்கை இராணுவப் பொறியியற் பிரிவினரால் திருத்தப்பட்ட ஒடுக்கமான சுமார் 4 கிலோ மீட்டர் இணைப்புப் பாலம் 1980இல் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் 2000 ஆண்டளவில் பிரித்தானிய அரசு வழங்கிய 25 கோடி ரூபாய்க்கு வெறும் மஞ்சற் கோடடித்து கணக்கு முடிக்கப்பட்டது. பின்னர் 2007இல் ஜப்பானிய அரசு மனமுவந்து அளித்த 150கோடி ரூபாய்கள் இரு வழிப்பாதையில் அதிநவீன அமைப்பில் கட்ட ஒப்பந்தம் எழுதப்பட்டது. ஒப்பந்தம் எழுதப்பட்டு ஆறு மாதங்களாகியும் அடிப்படைவேலைகூட நடைபெறவில்லை. மட்டக்களப்பு மன்னம்பிட்டியவில் நவீன பாலத்தை அமைத்த ஜப்பான் நிறுவனமும் அதன் அதிகாரிகளும் சகல கனரக இயந்திரங்கள் வாகனங்களுடன் இங்கு வந்து முகாமிட்டனர். மன்னார் மக்கள் புதிய தாம்போதியில் ஓடித்திரிய கனவு கண்டனர். ஆனால் என்ன அதிசயம்! ஓர் நள்ளிரவில் சகல வாகனங்களும் அத்துடன் ஜப்பானிய அதிகாரிகளும் சொல்லாமற் கொள்ளாமல் பழைய பாலத்தின் வழியாக ஓடிமறைந்தனர். ஆனாலும் அவர்கள் வருகைக்காகவும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காகவும் பிரித்தானியரால் கட்டப்பட்ட வீதி அதிகார சபை அலுவலகமும் அதனோடு ஒட்டிய பல கட்டடங்களும் இடிக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டன.

பின்னர் மீண்டும் பூதம் புறப்பட்டது. இவ்வாண்டு மாசி மாதத்தில் மீண்டும் பாலம் கட்டும் வேலைகள் ஆரம்பம் என்று அரச அதிகாரிகள் மட்டத்தில் செய்திகள் கசிய ஆரம்பித்து வேறு ஒரு நிறுவனம் இவ்வேலையை பொறுப்பெடுத்துள்ளதாகவும் ஆங்கிலத்தில் சிறிய துண்டுப்பிரசுரம் ஒன்றை அச்சிட்டு, மன்னார் மக்களின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளது. அத்தோடு பாலத்தின் ‘டிஜிட்டல்’ வரைபடம் ஒன்றையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இடிபாடுகளுக்கிடையில் பெயர் முகப்பை மறைத்துக் காட்சிப்படுத்தியுள்ளது.

முடிவாக, முன்பு மன்னார் மக்கள் தூங்கி வழிந்தனர். வெளிமாவட்டத்தவர் சகலத்தையும் பெற்றனர். இப்போது மன்னார் மக்கள் விழித்துக்கொண்டனர். அப்படியிருந்தும் எமது வாய்ப்புக்கள் ஏன் மீண்டும் மீண்டும் வெளியே செல்கின்றது? உயர் கல்வி வேலைவாய்ப்பு, வர்த்தகம், மீன்பிடி, வாகனப் போக்குவரத்து என அனேகமானவை இன்னும் வெளியார் கைகளில்தான் தேங்கியுள்ளன. மன்னார் மாவட்டத்தின் அதிகமான வேலைவாய்ப்புகளை இப்போதும் நிரப்புபவர்கள் யார்? வெளிமாவட்டத்தவர்களே.

போர்ச் சூழல், நாட்டில் அமைதியின்மை, இடப்பெயர்வு, சொத்தழிவு, ஆட்கடத்தல், காணாமற்போதல், மாவட்டம் முழுதும் நிரம்பி வழியும் காவல் மற்றும் தரப்படை, கடற்படை அத்துடன் எறிகணைத் தாக்குதல், தெருமுழுதும் ஆட்பரிசோதனை இவ்வளவும் இங்கும் உண்டு. இதைவிட வவுனியாவில் அதிகமுண்டு. இருந்தும் விழாக்கள் அனைத்தும் அங்கு எப்படி நடைபெறுகின்றன? இங்கு ஏன் நடைபெறுவதில்லை? இதன் மர்மம் என்ன? இதைக் களைவது யார்? ஓர் இந்தியனா? அல்லது, நாயகனா? அல்லது அந்நியனா? யார் அவன்?

இங்கு வாழ்ந்து வரும் சுமார் இருபதாயிரம் இளைஞர், யுவதிகள், கல்விமான்கள், வேலையற்ற பட்டதாரிகள் என்ன செய்கின்றனர்? சும்மா தொலைக்காட்சியிலும், கிரிக்கெட்டிலுமா காலம் கழிக்கின்றனர்? இவர்கள் அனைவரும் மாபெரும் சக்தியல்லவா? இதை இவர்கள் மறந்துபோனார்களா? இனியாவது விழித்தொழுந்து மன்னார் மாவட்டத்தையும் சமூகத்தையும் காக்கப் போராடுவார்களா? ●

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் பகுதி இல.61

புனித பவுல் நிறையச் சவால்கள், சிரமங்கள் போன்றவற்றைச் சந்தித்து தான் சிரம்கொண்ட பணியை நிறைவேற்றுகின்றார். எவ்வளவு சிரமங்களை எதிர்கொண்டாலும் அவர் தனது மறையறிவிப்புப்பணியில் மனம் சோர்ந்துவிடவில்லை. கிறிஸ்துவின் வலுவான கரத்தின் வழிநடத்தலில் மிகவும் ஆர்வத்துடன் தொண்டாற்றியுள்ளார்.

***இனி வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் திருத்தூதர்பணி 18ம், 19ம் அதிகாரங்களிலிருந்து தொகுக்கப்படுகின்றன.***

1) கொரிந்து நகரில் புற இனத்தாருக்கு இறைபோதகம் செய்த புனித பவுலுக்கு ஆண்டவர் தோன்றிக் கூறியது என்ன?

2) கொரிந்து நகரப் புறஇன மக்களோடு புனித பவுல் எவ்வளவு நாட்கள் தங்கியிருந்து இறைபோதகம் செய்தார்?

3) யூதர்கள் புனித பவுல் அடியாரைத் தாக்கி அவரை நடுவர் மன்றத்துக்கு அழைத்துச் சென்றனர். அவர்களின் வழக்கை விசாரணை செய்ய மறுத்த அக்காயா நாட்டின் மன்னனின் பெயர் என்ன?

4) புனித பவுல் அடிகளார் கொரிந்து நகரத்திலிருந்து சீரியாவுக்குச் சென்றார். அவருடன் உதவிக்குச் சென்ற இருவரும் யார்?

5) தம்மோடு இன்னும் நீண்ட நாட்கள் புனித பவுலைத் தங்கியிருக்கும்படி கேட்ட மக்கள் எந்நகரைச் சேர்ந்தவர்கள்?

6) இயேசுவே மெசியா என மறைநூல்களின் மூலம் எடுத்துக் காட்டி யூதர்களிடம் வாதாடிய அக்காயாவிலுள்ளவர்களைக் கவர்ந்த மறைபோதகர் யார்?

7) எபேசு நகரத் தொழுகைக்கூடத்தில் புனித பவுல் அடியார் போதித்தபோது நம்ப மறுத்த சிலர் இகழ்ந்து பேசியதால் அங்கிருந்து புனித பவுல் தம் ஆதரவாளர்களுடன் எந்த மன்றத்துக்குச் சென்று மறைபோதகம் செய்தார்?

8) “இயேசுவை எனக்குத் தெரியும். பவுலையும் எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் யார்?” இவ்வார்த்தைகள் யாரால் யாருக்குக் கூறப்பட்டன?

9) புனித பவுலினால் மசிதோனியாவுக்கு அனுப்பப்பட்ட அவரது இரு தொண்டர்கள் யார்?

10) எபேசில் கிறிஸ்து பற்றிய போதனைக்கெதிராய் கலகத்தை ஏற்படுத்தியவர்கள் யார்? ஏன் ஏற்படுத்தினார்கள்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 59 இற்கான கேள்விகளுக்கு 39 பேர் விடையளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

**தி. அன்ரன் ஜெயசேகரம், 140, டி-10, உருத்திரபுரம், கிளிநொச்சி**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

1. ஆர். யூடித் டிஷாலினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
2. அ. தர்சினி, பெரிய குஞ்சுக்குளம், முருங்கன்.
3. அ. விலோஜினி, தரம் 7, கன்னாட்டி, அடம்பன்.
4. மு. புவனமோகன், தாமரைக்குளம், அடம்பன்.
5. திருமதி. ரி. லீலாவதி, சாந்திபுரம், மன்னார்.
6. ப. ஜெ. றொணி திலீப்குமார், எமில்நகர், மன்னார்.
7. அ. வதனி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
8. எம். ருக்ஷிக்கா, சித்திவிநாயகர் இந்து தே.பா, மன்னார்.
9. டொ. டர்லின் றொக்சி, சிறுத்தோப்பு, பேசாலை.
10. அ. சிசிலியா, வேதசாட்சிகள் கோவிலடி, தோட்டவெளி

## குடும்பக் குவலயம்



# பிள்ளைகளுக்குத் தண்டனை கொடுக்கும்போது கவனத்திற் கொள்ளவேண்டியவை

எஸ். ஜே. யோகராஜா,
மட்டக்குளிய, கொழும்பு - 15



பிள்ளைகளுக்குத் தண்டனை கொடுக்கும்போது அவர்கள் வயதிற்கேற்ப தண்டனைகொடுக்கத் தெரிந்திருக்க வேண்டும். பிள்ளையின் உணர்வு வேகத்திற்கேற்றதாகவும், பிள்ளையின் உடல் ஆரோக்கிய நிலைக்கும், மனவளர்ச்சிக்கும் ஏற்றதாகவுமே தண்டனை இருக்கவேண்டும்.

ஒவ்வொரு பிள்ளைக்கும் கொடுக்கும் தண்டனை மாறுபட்டதாக இருக்கவேண்டும். சில பிள்ளைகள் அதிகம் பயந்த பிள்ளைகளாக இருக்கலாம். தடியைக் கையில் எடுக்கும்போதே தலைசுற்றி விழும் பிள்ளைகளும் உண்டு. அல்லது பயத்தில் சிறுநீர் கழித்துவிடும் பிள்ளைகளும் உண்டு. சில பிள்ளைகள் தண்டனையைத் தாங்கக்கூடியவர்களாக இருப்பர். இன்னும் சில பிள்ளைகள் தண்டனையைப்பெற ஆயத்தமாக இருப்பர்.

நாம் பிள்ளைகளுக்குத் தண்டனை கொடுக்க ஆசைப்படுவது நாம் சிறிய வயதில் தண்டனையைப் பெற்றதால் அதைத் தீர்க்க வேண்டுமென்று எமது அடிமனதிலிருந்த அவாவாலேயாகும். உதாரணமாக ஒரு ஆசிரியர் தனது வகுப்பில் பிழைவிட்ட மாணவனைத் தண்டித்துவிட்டு கதிரையில் ஏற்றிவிட்டு அம்மாணவனைப் பார்த்து, "நாம் படிக்கும்போது எங்களது ஆசிரியர் நான் பிழைவிட்டதும் கதிரையில் ஏற்றி தண்டனை தந்தார். அப்படி அவர் என்னைத் தண்டித்தபடியால்தான் நான் இன்று ஆசிரியராக இருக்கிறேன். நல்லவனாக இருக்கிறேன்" என்று கூறினாராம். இங்கே உண்மையில் நடந்தது என்ன? அன்று சின்னப்பிள்ளையாக இருக்கையில் ஆசிரியர் தண்டனை கொடுக்கும்போது ஆசிரியருக்குத் திருப்பி அடிக்க முடியவில்லை, ஏச முடியவில்லை, ஆசிரியரைக் கதிரையில் ஏற்றமுடியவில்லை. இப்போது அடிமனதிலுள்ள உந்துதலினால் நல்ல நோக்கத்தோடு பிள்ளைகளில் அதைச் சாதிக்கிறார் ஆசிரியர். அதாவது அடிமனதில் பூட்டி வைத்ததை இப்போது மாணவர்களில் வெளிப்படுத்துகிறார். இதுவே உண்மை!

ஒருநாள் தனது மகளைத் தந்தை பட்டியால் அடித்தார். "எனது அப்பாவும் இப்படித்தான் என்னைத் திருத்தினார் உங்களையும் அப்படித்தான் வளர்க்க வேணும்" என்று தந்தை கூறினார். அதுமட்டுமல்ல தனது ஒரு மகனைத் தண்டித்துவிட்டுத் தனது அடுத்த மகனையும், மகளையும் கூட்டிக்கொண்டு போய் மகனைக் காட்டினார். "பாருங்கோ இவன் செய்த வேலையை, மூண்டு களிசான் உள்ளே போட்டிருக்கிறான்" என்றார். பிள்ளைகள் எம்மைப்பற்றி நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். அப்பா எப்படி அடிப்பார்? எப்போது அடிப்பார்? என்றெல்லாம் அறிந்து வைத்திருப்பர். ஆகவே தண்டனை கொடுக்கும்போது பிள்ளைக்கேற்ப கொடுக்க வேண்டும். பிள்ளைகள் பெற்றோரை நன்கு கவனித்து வைத்திருப்பதற்கு மற்றொரு உதாரணம். பிள்ளைகள் தாம் சிறுவயதில் விளையாடும்போது, "நான் அம்மா, நீ அப்பா" என்று கூறி, அப்பா, அம்மா சொல்வதுபோல், செயற்படுவதுபோல் செய்துகாட்டுவர். அம்மாவை அப்பா ஏசுவதைப்போன்று ஏசுவர். ஆகவே பிள்ளைகள் எம்மை நன்றாகக் கவனித்து வைத்திருப்பர் என்பதை மனதிற் கொண்டு பிள்ளைக்கேற்ற விதத்தில் தண்டனை கொடுக்க வேண்டும். சிலர் பயப்படுவர், சிலர் நடுங்குவர், சிலர் தண்டனைக்கு ஆயத்தமாக இருப்பர். அவர்களுக்கேற்ற தண்டனை கொடுக்கப் பெற்றோர் பழகி இருக்கவேண்டும்.

நாம் கொடுக்கும் தண்டனையானது பிள்ளை தனது வாழ்வில் பாடம் கற்கக்கூடிய தண்டனையாக இருக்கவேண்டும். தனது வாழ்வைத் திருத்திக்கொள்ள, சரிசெய்து கொள்ளக்கூடிய தண்டனையாக இருக்க வேண்டும். உங்கள் பிள்ளை பந்து அடித்து விளையாடுகிறது. வீட்டுக்குள் விளையாட வேண்டாம் என்று நீங்கள் பிள்ளைக்குக் கூறுகிறீர்கள். கண்ணாடி உடைந்துவிடும் என்று கூறுகின்றீர்களென வைத்துக்கொள்ளுங்கள். இருப்பினும் அதனைக் கேட்காது பந்தடித்ததால் கண்ணாடி உடைந்துவிட்டதென வைத்துக்கொள்ளுங்கள். பிள்ளைக்குத் தண்டனை கொடுக்க வேண்டும். எப்படித் தண்டிப்பது? பிள்ளையைக் கூப்பிட்டு கண்ணாடி உடைந்துவிட்டது. புதிதாகக் கண்ணாடி போட வேண்டும். அதனால் பாடசாலைக்குப் போகும்போது உங்கள் செலவுக்குத்தரும் பணத்தில் சிறு தொகையை ஒதுக்கினால் அப்பாவும் காசுபோட்டு கண்ணாடி வாங்கலாம்" என்று பிள்ளைக்குக் கூறினால் பிள்ளை தனது வாழ்விலே பாடத்தைக் கற்றுக்கொள்கிறது.

பிள்ளைக்குத் தண்டனை கொடுப்பதற்கு முன்பு அம்மாவும் அப்பாவும் பிள்ளைக்குக் கொடுக்க இருக்கும் தண்டனையைப் பற்றி ஒருமனப்பட்டு இப்படித்தான் இத்தண்டனையைக் கொடுக்க வேண்டுமென்று இருவரும் சம்மதிக்க வேண்டும். தண்டனையைக் கொடுக்கும்போது இருவரும் அத்தண்டனை பற்றி இருவிதமான கருத்தைக் கொண்டிருப்பது பிழையாகும். ஒருவர் தண்டனை கொடுக்க வேண்டுமென்கிறார். மற்றவர் தண்டனை கொடுக்கக்கூடாதென்கிறார். இதை பிள்ளை கண்டால் பிள்ளை இத்தண்டனையில் பிரயோசனத்தை எடுக்கமாட்டாது. பிள்ளைக்குத் தண்டனை கொடுப்பதற்கு முன்பு அப்பா அம்மா இருவரும் கலந்துரையாடி ஒருமனப்பட்டு அவசியமாயின் பிள்ளைக்குத் தண்டனை கொடுப்பதே சிறந்த வழியாகும்.

ஓர் அனுபவத்தைக் கவனியுங்கள். பாடசாலையில் தவணைப் பரீட்சை முடிந்ததும் ஆசிரியர் பிள்ளையிடம் ரிப்போர்ட்டைக் கொடுத்து பெற்றோரின் கையொப்பம் வாங்கி வருமாறு கூறினார். வீட்டில் தந்தைக்கு ரிப்போர்ட்டைக் காட்டியதும் உளவியல் தெரிந்த தந்தையாதலால் கூடுதலான புள்ளிகளைப் பாராட்டினார். இன்னும் முயற்சியெடுத்தால் குறைந்த புள்ளிகளையும் கூட்டமுடியுமென்றார். அப்போது பிள்ளைக்கு இது பிரச்சினையாகிவிட்டது. பிள்ளை தனது தந்தையைப் பார்த்து "ரீச்சர் குறைந்த புள்ளியைப் பார்த்துவிட்டு எல்லாப்-பிள்ளைகளுக்கும் முன்பாக என்னைத் தண்டித்தார். அப்பா நீங்கள் அதிகமான புள்ளியைச் சுட்டிக்காட்டி என்னைப் பாராட்டுகிறீங்கள்" என்று கூறியது.

இங்கே ஒரே றிப்போட்டைப் பார்த்து ஆசிரியர் ஒன்றைக்கூறினார். அப்பா வேறொன்றைக் கூறினார். தந்தைக்கு உளவியல் அறிவு இருந்ததால் ஆசிரியரைத் தாழ்த்திக் கூறாது பிள்ளையைப் பார்த்து, "நீங்கள் கணக்கில் இரண்டு பிழைவிட்டது கவனக்குறைவாலே என்று ஆசிரியர் நினைத்திருக்கலாம்" என்று கூறினார்.

பிள்ளையின் முன்னிலையில் ஆசிரியரைக் குறைத்துக் கூறியிருந்தால் அல்லது ஏசியிருந்தால் பிள்ளை பின்பு ஆசிரியருக்கு மதிப்புக் கொடுக்காமல் இருக்கலாம். ஆகவே பெற்றோரும் ஆசிரியரும் வெவ்வேறு விதத்தில் செயற்படுவது தவறானதாகும். பிள்ளைகள் பிழைவிட்டதும் அப்பிள்ளைக்குப் பெற்றோர் தண்டனை கொடுத்துவிட்டு பெற்றோர் அதே தவறைச் செய்யாமல் இருப்பது நல்லது.

தண்டனை கொடுக்கும்போது "நான் உங்களில் இனிமேல் அன்பில்லை. இனிமேல் உங்களை அன்புசெய்யமாட்டேன்" என்று பிள்ளைகளுக்குக் கூறவேண்டாம். அது தண்டனையல்ல. எமது பிள்ளைகள் பிழைவிடும்போது அவர்களை அதிகம் அன்பு செய்வது மிகவும் முக்கியமானதாகும். அன்பிலிருந்து பிரிப்பது பிழையாகும். "இதுக்குப் பிறகு உனக்கு அப்பா, இல்லையெண்டு நினைத்துக்கொள்" என்று கூறுவது பிழை. "நீ இனிமேல் எங்களுடைய குடும்பத்திலே இல்லையென்று நினைத்துக்கொள்" இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பாவிப்பது மிகவும் பாரதூரமானதாகும். பிள்ளை அடிக்கடி பிழைவிடுவதைக் கண்டால் முன்பைவிட பிள்ளையை அதிகம் நெருங்கவேண்டும். ●

## மருத்துவப் பொழிவு

# தோல் நோயும், அதற்கான சித்தமருத்துவ சிகிச்சையும்

### தொடர் – 01

டொக்டர்
எஸ். லோகநாதன்
B.S.M.S, R.A.M.P
சித்தவைத்திய நிபுணர்
மன்னார்



தோலின் நிறத்தில் மாறுதலும், அரிப்பும், சினைப்பும், பருக்களும் காணப்பட்டால் இதனை சரும நோய் என்கிறோம். இவை குறிப்பிட்ட சில இடங்களிலோ அல்லது உடல் முழுவதுமோ காணப்படும். இச்சரும நோயானது கிராமப்புறங்களில் மிகவும் பரவலாகக் காணப்படுகிறது. தோல் நோய்களில் சில ஒன்றை ஒன்று ஒத்துக் காணப்பட்டாலும் சில தோல் நோய்கள் வித்தியாசம் கண்டுகொள்ள முடியாத அளவிற்கு வெவ்வேறாகவும், வித்தியாசமாகவும் காணப்படும். ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு இந்நோயானது தொற்றுகிறது. தொற்றுள்ளவரைத் தொடும்பொழுதும், அவரது ஆடைகளை அணியும்பொழுதும், அவரது படுக்கையில் படுப்பதாலும் இந்நோய்த் தொற்று ஏற்படுகிறது. தலையில் அதிகப் பேன்களின் தொற்றுக்கள் இருப்பதாலும் இத்தோல் நோய் ஏற்படுகின்றது.

### தோல் நோயின் குறிகுணங்கள்:

பாதிக்கப்பட்ட பகுதியில் அரிப்பும், தடிப்பும், கடுப்பும், கசிவும் காணப்படும். அத்துடன் அவ்விடம் சூடாகவும், சிவந்தும் காணப்படும். கடுமையான தொற்று இருந்தால் சீழ் கோர்த்த கொப்புளங்களுடன் வேதனையும் காணப்படும். தொற்று மிகவும் கடுமையாக இருந்தால் அதிக காய்ச்சலுடன் வேதனையும் காணப்படும். நிணநீர் முடிச்சுக்களில் வீக்கத்துடனும், அதிக தொற்றுடனும் காணப்பட்டால் அத்தொற்றுள்ள பகுதியில் துர்நாற்றம் ஏற்படும். இதற்கு உடனடியாக உள்மருத்துவமும், வெளி மருத்துவ சிகிச்சையும் செய்தல் வேண்டும். இத்தோல் நோய்கள் பல வகைப்படும்.

1. சொறி சிரங்கு – Scabies
2. பேன்கள் – Lice
3. சீழுடன் கூடிய சிறிய புண்கள் – Pustules
4. கொப்புளங்களும், சீழ்கட்டிகளும் – Blisters with Pustules
5. ஒவ்வாமை – Allergy
6. தொடுதோல் அழற்சி – Inflammation
7. அக்கி – Herpes zoster
8. காளான் தொற்றுநோய் – Fungal infection
9. தேமல் – Tania Vesicular
10. சருமத்தில் ஏற்படும் வெள்ளை நிறப் புள்ளிகள் – Leucoderma
11. ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்படும் சருமநோய் – Vitamins Deficiency
12. படை – Eczema

### சொறி சிரங்கு – Scabies

இது அதிகமாகக் குழந்தைகளில் காணப்படுகின்றது. உடல் முழுவதும் அதிக நமைச்சல் உள்ள சிறிய புடைப்புக்கள் காணப்படும். முக்கியமாக மணிக்கட்டுக்கள், தொடை இடுக்குகள், பிறப்புறுப்புக்கள், விரல் இடுக்குகள் ஆகிய இடங்களில் காணப்படும். இது பொதுவாக முகத்தில் இருப்பதில்லை. தொற்றுள்ள நோயாளியைத் தொடுவதாலும், அவரது ஆடைகளையும், படுக்கைகளையும் பயன்படுத்துவதாலும் இந்நோய் பரவுகின்றது. நமைச்சல் உள்ள இடங்களில் அதிகம் சொறிவதால் சீழுடல் கூடிய புண்களை உண்டுபண்ணும். சில சமயங்களில் நிணநீர் முடிச்சுக்களில் வீக்கத்தை ஏற்படுத்திக் காய்ச்சலை உண்டுபண்ணும்.

### பேன்கள் - Lice

தலையிலும், அக்குள்களிலும், பிறப்புறுப்புகளிலும் வாழும் பேன்கள் அவ்விடங்களில் அரிப்பையும், நிணநீர்முடிச்சுக்களில் வீக்கத்தையும் உண்டுபண்ணும். எனவே தினமும் தலையை சுத்தமாகப் பேணிப்பாதுகாக்கத் தலையில் முழுகவேண்டும். நோயாளி பாவித்த கட்டில், தலையணை, படுக்கை விரிப்புக்கள் இவற்றை வெய்யிலில் காயப்போட வேண்டும். பேன் உள்ளவர்களுடன் நற்சுகாதாரம் உள்ளவர்களைப் பழகவிடக் கூடாது. பேன் உள்ள நோயாளிகளுக்குப் பேனை இல்லாதொழிப்பதற்குரிய சிகிச்சைகளைச் செய்ய வேண்டும்.

(சித்த மருத்துவம் தொடரும்...)

## சமைப்போம் சுவைப்போம்

தருவது

திருமதி. ஹென்றி வசந்தி
சிறுத்தோப்பு, பேசாலை

### செட்டிநாட்டு ஆடிக்கூழ்



**தேவையான பொருட்கள்**

பச்சையரிசி : கால் கப்
உளுந்து : ஒரு கப்
கருப்பட்டி : அரை கப்
வெல்லம் : அரை கப்
நெய் : அரை கப்

**செய்முறை :**

உளுந்தை வெறும் தாச்சியில் இட்டு, நன்கு வாசனை வரும்வரை வறுக்கவும். கருகவிடக் கூடாது. குறைந்த தீயில், நிறம் மாறும்வரை நன்கு வறுக்கவும். அதேபோல் அரிசியையும் தனியே வறுத்து எடுத்துக்கொள்ளவும். பிறகு இரண்டையும் மிக்ஸியில் மாவாக அரைத்துக்கொள்ளவும். முகப்பவுடர் அளவுக்கு நைசாக இருக்குமாறு அரைத்து அரித்து எடுத்துக் கொள்ளவும். பின்னர் அரை கப் கருப்பட்டி (கருப்பட்டி வாசனை பிடிக்காதவர்கள் சீனி சேர்த்துக்கொள்ளலாம்) அரைக் கப் வெல்லம் ஆகியவற்றை ஒரு பாத்திரத்தில் எடுத்து ஒன்றிற்கு இரண்டு என்ற அளவில் அதாவது இரண்டு கப் தண்ணீர் ஊற்றி பாகு காய்ச்சவும். அதிக நேரம் கொதிக்கவிடக் கூடாது. வெல்லம், கருப்பட்டி கரைந்தவுடன் இறக்கி ஆறவைத்து, அந்தக் கரைசலை வடிகட்டி தனியே எடுத்து வைத்துக்கொள்ளவும்.

பிறகு தாச்சியில் அரைக் கப் நெய் விட்டு சூடாகியதும் அதில் அரைத்து அரித்து வைத்துள்ள மாவினை சேர்த்து நன்கு வறுக்கவும். குறைந்த தீயில் நன்கு வாசனை வரும்வரை வறுக்கவும். பின்னர் வெல்லக் கரைசலை சிறிது சிறிதாகச் சேர்த்து நன்கு கிளறவும். நன்கு கிளறக்கிளற அது அல்வா பதத்திற்கு வந்து நெய்யைக் கக்க ஆரம்பிக்கும். அந்த நிலைவரை நன்கு கிளறி அடுப்பில் இருந்து இறக்கவும். இதுவே ஆடிக்கூழ். இதனை இரண்டு நாள்கள் வரை வைத்துச் சாப்பிடலாம். மிகவும் சுவையானதும், சத்தானதும் ஆகும்.

# பெரியப்பா பதில்கள்




**கேள்வி : இலண்டன் தேம்ஸ் நதி பற்றிச் சொல்லுங்கள்?**
*- அருமைநாதன், வவுனியா*



**பதில் :** இலண்டன் செல்வபவர்கள் தேம்ஸ் நதியின் அமைதியையும் சுத்தத்தையும் பார்த்து ஆனந்திக்க முடியும். பல தடவை இந்த நதியைப் பார்த்தாலும் தாகம் தீராது! பழைமையின் சிறப்பைச் சொல்லும் கட்டிடங்கள் தேம்ஸ் ஓரமெங்கும் அமைந்திருக்கின்றன. உலகத்துப் பெரும் பணக்காரர்கள் தேம்ஸ் நதி ஓரத்தில் ஒரு வீட்டையாவது வாங்கிப் போடுவதை உச்சக்கட்ட கௌரவமாக நினைக்கிறார்கள். இலண்டன் போகிறவர்கள் தேம்ஸ் அருகில் ஒரு புகைப்படமாவது எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைக் கடமையாக வைத்திருக்கிறார்கள். கல்யாணம் முடிந்த கையோடு, தேம்ஸ் நதியில் தம்பதியர் புகைப்படம் எடுத்துக்கொள்வது இலண்டன் வாசிகளின் ஒரு சம்பிரதாயப் பழக்கம்.

**கேள்வி : நீர்நிலைகள் உங்களுக்குப் பிடிக்குமா? அவற்றின் அழகை நீங்கள் இரசித்ததுண்டா?**
*- எஸ். மணிகண்டன், கம்பளை*

**பதில் :** அருவி ஓர் அதிசயம், ஆறு ஓர் அற்புதம், வாய்க்கால் ஓர் வரப்பிரசாதம், ஓடை ஓர் ஊர்வலம், குளம் ஓர் கொடை!

**கேள்வி : மனிதர்களுடைய வெற்றிக்கும் அவர்களுடைய புத்திசாலித்தனத்திற்கும் தொடர்பு உண்டா?**
*- கவிப்பிரியா, கரவெட்டி*

**பதில் :** *"வெற்றி பெற்ற மனிதர் எல்லாம் புத்திசாலி இல்லை. புத்திசாலி மனிதர் எல்லாம் வெற்றி பெறுவதில்லை."*

வெற்றி என்பதற்கு எது அளவுகோல்? பத்து ரூபாய் சம்பாதிப்பவன் நூறு ரூபாய் ஈட்டிவிட்டால் அது அவனைப்பொறுத்தவரை வெற்றி. ஆயிரம் ரூபாய் சம்பாதித்துக்கொண்டு இருப்பவன் கண்ணோட்டத்தில் அது தோல்வி!

வாழ்க்கையை அமைதியாகவும், ஆனந்தமாகவும், உயிர்ப்புடனும் வைத்திருப்பதே உண்மையான வெற்றி! உங்களுடைய உள் சூழ்நிலையையும் வெளிச்சூழ்நிலையையும் நீங்கள் வெற்றிகரமாகக் கையாள்வதற்கு அடிப்படைப் புத்திசாலித்தனம் நிச்சயம் தேவை! புத்திசாலித்தனம் என்று இங்கே நான் குறிப்பிடுவது இன்றைய கல்வி மூலம் பெறப்படும் அறிவாற்றலை அல்ல. பல தரப்புகளிலிருந்து சேகரிக்கப்படும் விசய ஞானத்தையும் அல்ல. புத்திசாலித்தனம் என்பது வாழ்க்கையைத் தோலுரித்து அதன் அடிப்படை உண்மையை அறிந்துகொள்ளும் திறன். பக்குவத்துடனும் தெளிவுடனும் வாழ்க்கையை நடத்துவதற்கு இந்தப் புத்திசாலித்தனம் மிகமிகத் தேவை.

**கேள்வி : தழுவுதல் - ஆரத்தழுவுதல் இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?**
*- ஏ. ஆர். ஆகாஸ், செட்டிகுளம்*

**பதில் :** இடுப்பைச் சுற்றி வளைத்து அணைத்துக்கொள்வது தழுவுதல், கழுத்தைக் கரங்களால் வளைத்து அணைத்துக்கொள்வது ஆரத்தழுவுதல். அதாவது மாலை (ஆரம்!) போலத்தழுவுதல்.

**கேள்வி : தொலைத்தொடர்பு சாதனங்களால் உலகம் சுருங்கிவிட்டது. உலக மக்களிடையே ஆன்மீகத்தால் கொண்டுவரமுடியாத நெருக்கத்தை இன்றைக்கு விஞ்ஞானம் கொண்டுவந்துவிட்டதல்லவா?**
*- சித்திரலேகா, நுவரெலியா*



**பதில் :** திரு. சந்தியாப்பிள்ளை அவர்கள் விமானநிலையத்திற்கு தொலைபேசியில் பேசினார். "கொழும்பில் இருந்து சென்னைக்கு உங்கள் விமானத்தில் எத்தனை மணி நேரம் ஆகும்?" என்று கேட்டார். 'ஒரு நிமிடம்' என்று அட்டவணையைப் புரட்டினாள் தொலைபேசி இயக்குபவர். அதற்குள் தன் கேள்விக்கு பதில் சொல்லிவிட்டதாகச் சந்தோசப்பட்டு நன்றி என்று சொல்லிவிட்டு தொலைபேசியைக் கீழே வைத்துவிட்டார் சந்தியாப்பிள்ளை.

தகவல் தொடர்பு எவ்வளவு முன்னேறினாலும் இப்படிப்பட்ட மனிதர்களைப் பற்றி என்ன சொல்வது? தொலைத்தொடர்பு, பயண நேரம், இவற்றை மட்டும் கணக்கால் எடுத்துக்கொண்டால் உலகம் சுருங்கி விட்டது என்பது உண்மை. ஆனால் மனித உறவுகளை அலசிப் பார்த்தீர்களா?

**கேள்வி : அண்மையில் நீங்கள் அறிந்த ஆச்சரியமான தகவல் எது?**
*- ஐஸ்வர்யா, நானாட்டான்*

**பதில் :** உலகில் உள்ள ஐம்பத்தைந்து நாடுகளின் பெயர்கள் 'A'ல் முடிவடைகின்றன. முடிந்தால் நீங்களும் சோதித்துப் பாருங்கள்.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 16 - 11 - 1942
உதிர்வு 20 - 05 - 2007

### அமரர் ச. அல்பிரட்

**(ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர், தலைமன்னார் வைத்தியசாலை)**

கணவன் உருவிலே!
தந்தை வடிவிலே!
தாத்தா உறவிலே!
எம்முடன் இருந்து
எங்களுக்காக உழைத்து
எம் நல்நிலைக்கு வழிவகுத்த -
உங்களுக்கு எங்கள் அன்பும், மதிப்பும்
மிக்க கண்ணீர் அஞ்சலிகள்!

*இவரின் பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*தகவல்: மனைவி திரேசா*
*தலைமன்னார் ஸ்ரேசன், தலைமன்னார்.*

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 25 - 03 - 1983
உதிர்வு 17 - 06 - 2007

### அ. நேசராசா பெரேரா

**(வசந்தன்) (நொச்சிக்குளம்)**

அன்பின் மகனே! பாசமிகு சகோதரனே,
தாங்க முடியவில்லை ஐயா
உம் பிரிவுச் சுமையை
கன்னத்துள் சிரிப்பைத் தேக்கி வைத்து
எந்நேரமும் பூரிக்க வைத்த நீ
மீள்துயில் கொண்டு ஒரு வருடமாகினும்
எங்கள் விழிநீரில் ஞாலம் உள்ள
காலம் வரையில் கலந்திருப்பாய்.
காலன் தன் கடனை செய்திருப்பினும்,
பரலோக தந்தையின் கரத்தில்
சிறுகுழந்தையாகத் தவழுவாய் என்று
உறுதியாக நம்புகின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும் :*
பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 7ம் ஆண்டு நினைவு



மலர்வு 20 - 06 - 1960
உதிர்வு 27 - 06 - 2001

### திருமதி. யூலியானம்மா யூஜின் வாஸ் (மோட்சராணி)

எங்கள் குடும்பத்தில் பூத்த மூத்தமலரே
மோட்சமலரே மோட்சராணியே
ஆண்டுகள் ஏழு கடந்தாலும்
ஏங்குதம்மா எம்மனது
இம்மையில் உங்கள் முகங்காணாது
நித்தமும் வாடுகின்றோம்
உங்கள் ஆன்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்
*இவரின் ஆன்ம சாந்திக்காக புனித ஆனாள் ஆலயத்தில் 07.06.2008 அன்று இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது)*

*இவரின் பிரிவால் துயருறும்:*
அன்புப் பெற்றோர், கணவர், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினா அருட்சகோதரி மலர், அன்புக் கன்னியர் மடம், (நிவேதனம்), கீரி, மன்னார்.

## 5ம் மாத நினைவு



மலர்வு 08 - 01 - 1995
உதிர்வு 29 - 01 - 2008

### சூசையப்பு சாம்சான் சொய்சா

**(பெரிய பண்டிவிரிச்சான்)**

வாழ்க்கை என்னும் பாதையிலே
பாதிவழி நடக்கையிலே - பாசமுள்ள எம்மகனே
எமைவிட்டு நீ பிரிந்தாய்.
மாதாவின் தலத்துக்கு மகிழ்வுடன் சென்றவனே,
மாமரித்தாய் காலடியில் புதைகுழியானாயோ.
கண்கள் குளமாகி, கதறி அழுகின்றோம்.
கத்தரிடம் பரிந்து பேசுவாய்!
*கடந்த 29.01.2008 அன்று மடுத்திருத்தலத்தில் நடைபெற்ற கிளேமோர் தாக்குதலில உயிரிழந்த எம் மகனின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு உதவிய குருக்கள், துறவிகள், ஆசிரியர்கள் மற்றும் இனிய நல்லுள்ளங்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.*

*இவரின் பிரிவால் துயருறும்:*
*அன்பு அப்பா, அம்மா, சகோதரன், சகோதரி.*

## நீங்காத நினைவுகள்

### 24ம் ஆண்டு



மலர்வு 13 - 06 - 1913
உதிர்வு 08 - 04 - 1984

**திரு. ம.மொ. சிமியோன்**

### 1ம் ஆண்டு



மலர்வு 20 - 09 - 1928
உதிர்வு 29 - 06 - 2007

**சி. அந்தோனியா (இராசம்மா)**

**(பிச்சகுளம், முருங்கன்)**

**"உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் இறப்பினும் வாழ்வர். உயிரோடு இருக்கும்போதே என்னிடம் நம்பிக்கைகொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்."**
(யோவான் 11:25 - 26)

காலங்கள் கடந்தாலும் - உம் கருத்துக்கள் தூபமாக இருக்கிறது.
எம் வாழ்வின் உயர்ச்சிக்கு ஏணியானீர்.
வல்ல தந்தையிடம் எமக்காக மன்றாடுவீர்!
விண்ணகத்தில் ஆன்மசாந்தியுடன் வீற்றிருக்க மன்றாடுகின்றோம் நாம்!

*பிரிவால் துயருறும்:*
*அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

# மன்னார் மாவட்டத்தில் ....

*(4ம் பக்கத் தொடர்ச்சி...)*

இடம்பெயர்ந்த மக்கள் பொதுக் கட்டிடங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர். சிலர் மரங்களின்கீழ் சிறிய குடில்களை அமைத்தும் வாழ்ந்து வருகின்றனர். இதனால் மழை வெள்ளம் காரணமாக இம்மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். கடும் மழைகாரணமாக தற்காலிக தங்குமிடங்களில் உள்ளவர்கள் பல்வேறு சிரமங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இம்மக்கள், தமது தொழில்துறைகள் அனைத்தையும் கைவிட்டு வந்துள்ளதாகவும், தற்போதுள்ள இடங்களில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் சூழ்நிலை இல்லாததாலும் இவர்கள் நிவாரணப் பொருட்களிலேயே முழுமையாக தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் நிவாரணப் பொருட்களை அங்கு கொண்டுசெல்வதில் ஏற்படும் தாமதம் இடம்பெயர்ந்த மக்களை நேரடியாக பாதித்துள்ளது.

உயிலங்குளம் நுழைவாயில் மூடப்பட்டுள்ளதால் நிவாரணப் பொருட்களை ஓமந்தை நுழைவாயிலின் ஊடாகக் கொண்டு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால், மேலதிகமாக 80 கிலோமீற்றர் தூரப்பயணம் செல்லவேண்டிய நிலை உருவானது.

அத்தோடு ஓமந்தை நுழைவாயில் பகுதியில் வாகனங்களின் சோதனை உள்ளிட்ட நடைமுறைப்பிரச்சினைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருட்களைக் கொண்டுசெல்வதில் தாமதம் ஏற்படுகின்றது.

முன்னதாக இடம்பெயர்ந்தவர்களுக்கு அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் மூலம் புதிதாக இடம்பெயர்ந்தவர்களுக்கு உலக உணவுத்திட்டத்தின் மூலம் நிவாரணம் வழங்கப்படுகின்றது. மக்கள் தொடர்ந்து இடம்பெயர்ந்து வருவதால் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் மக்கள் வாழும் கிராமங்கள் அனைத்தும் இடம்பெயர்ந்தோர் முகாம்களாக மாறிவருகின்றன. தற்போது அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் தம்மாலான சேவைகளை மக்களுக்கு வழங்கிவருகின்றன. எனினும் மேற்சொன்ன நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக அவற்றின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. அத்தோடு மதவாச்சி சோதனைச் சாவடியில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய பாதுகாப்பு கெடுபிடிகளால் அரசாங்க உயர் அதிகாரிகள். கூட்டங்கள், செயலமர்வுகளுக்காக கொழும்பு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி
## இல - 74 நீதிமொழிகள் 9 - 16

உங்கள் விடைகளை 10. 07. 2008க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | | | | 04 | ✱ | |
| | | 05 | | | | | | | | |
| | | | | | | 06 | | | | |
| | | ✱ | 07 | | | | | | | |
| 08 | | | | | | ✱ | 09 | | | |
| | | | | 10 | | | | ✱ | 11 | |
| | 12 | | | | 13 | | | | | |
| | | | 14 | | ✱ | | | 15 | | 16 |
| | | 17 | | 18 | | | | | 19 | ✱ |
| | | | | 20 | ✱ | | | | | 21 |

### இடமிருந்து வலம்
1. கூர்மதி வாய்ந்த எவரும் .............. நடந்துகொள்வார்.
3. நேர்மையாக ..................... நீதி பாதுகாக்கும்.
5. மகனை நேசிப்பவரோ அவனைத் ...............த் தயங்கமாட்டார்.
7. விவேகமுள்ளவரோ ................. கண்டு அவ்வழி செல்வார்.
8. நலம் தரும் திட்டம் .................. அன்பிற்கும், மதிப்பிற்கும் உரியவர்.
10. உணர்வை அடையும் ............ செல்லுங்கள்.
13. நேர்மையாளரின் வேரை ...................... முடியாது.
18. இகழ்வாரைத் திருத்த முயல்வோர் அடைவது ........................

### மேலிருந்து கீழ்
1. ஒருவர் தம் பேச்சினால் ..................... அடைகிறார்.
2. பொது ................... நாடுவோர் மகிழ்ச்சியோடிருப்பர்.
3. கடவுளுக்கு அஞ்சி நடப்போருக்கு ................... கிட்டும்.
4. நல்லவரது சொத்து ................... மரபினரைச் சேரும்.
8. கண்டிக்கப்படுவதைப் புறக்கணிக்கிறவர் தமக்கே கேடு ..........................க் கொள்கிறார்.
12. ................ குற்றங்களைக் கிண்டிக் கிளறித் தூற்றுபவர் கயவர்.
15. கனிவுள்ள பெண்ணுக்குப் .................. வந்து சேரும்.

### வலமிருந்து இடம்
2. ஒருவர் தம் பேச்சினால் ...................... அடைகிறார்.
4. பிறருடைய ..............களை ஏற்போரிடம் ஞானம் காணப்படும்.
6. ஞானமே மெய்யறிவு உள்ளோர்க்கு ........................ தரும்.
10. ஒரு பாதை ஒருவருக்கு நல்ல ....................த் தோன்றலாம்.
15. மனிதர் தம் விவேகத்திற்கேற்ற ................ப் பெறுவர்.
18. இனிமையாகப் பேசினால் சொல்வதை எவரும் ......................
20. அடுத்திருப்போரை ......................... மதிகெட்டோரின் செயல்.
21. நேர்மையாளரின் இல்லத்தில் ................... தவழும்.

### கீழிருந்து மேல்
9. ஞானமுள்ளவருடைய ........... அவரைப் பாதுகாக்கும்.
11. நினைத்தது ................. மனதிற்கு இன்பம்.
13. மூடர் வாய் திறந்தால் .................. அடுத்து வரும்.
14. ஞானிகள் பிறருடைய அறிவுரைக்குச் ................ கொடுப்பர்.
16. அன்பும் ................ தீவினையைப் போக்கும்.
17. கடவுளின் சினம் வெளிப்படும் நாளில் செல்வம் ..........படாது.
18. கண்டிப்புரையை ...................... விவேகமுள்ளவர்.
19. ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் .......... நீடிக்கச் செய்யும்.

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 72ல்
## சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
மோனிஷா றொபேட்
41/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு:**
பி. லெசான்சி குரூஸ்
தரம் -7
புனித வளனார் ம.வி
தாழ்வுபாடு.

**மூன்றாம் பரிசு:**
ஜீ. சஜீவன்
மடுமாதா சிறிய குருமடம்
சாவற்கட்டு,
மன்னார்

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 214 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 196 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.72ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. ஆர். றெஜினோல்ட், பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
2. மெற்றில் அ. லெம்பேட், வங்காலை - 02
3. கே. மீனா, பாவிலுபட்டான்கட்டி குடியிருப்பு, கீளியன் குடியிருப்பு.
4. சு. பற்றிக் நிலோஜன், கன்னாட்டி, அடம்பன்.
5. அ. தனுஜா, பெரியகுஞ்சுக்குளம், முருங்கன்.
6. அ. ஸ்டெலா மேரி, துட்டுவாகை, நேரியகுளம்.
7. ஜே. நித்தியா, நொச்சிக்குளம், முருங்கன்.
8. ச. நிசாந்தன், நறுவிலிக்குளம், வங்காலை.
9. அருட்சகோதரர் பி. றெக்சன், குருநகர், யாழ்ப்பாணம்.
10. பு. அனுஸ்ரெலா, தாமரைக்குளம், அடம்பன்.
11. திருமதி. சுபாசினி, பல்நோக்கு கூட்டுறவு சங்கம், ஊர்காவற்றுறை.
12. ப. றொசாந்தி குரூஸ், 4ம் வட்டாரம், பேசாலை.
13. திருமதி. ரி.எஸ். லீலாவதி, சாந்திபுரம், மன்னார்.
14. செ. மெலானி நிஷாந்தினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
15. இ. மேரி ஜென்சிகா, வேதசாட்சி கோவிலடி, மன்னார்.
16. ஜெபநேசன் ஜெபிஷன், பெரியகடை, மன்னார்.
17. திருமதி. அருள்நாதன் வதனி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
18. பி. ஜே. சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
19. ஜீவரெட்னம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
20. கெ. டினோஷியன், உப்புக்குளம், மன்னார்.
21. இ. ஒலின்ரா, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
22. என். ஜனாத்தனா, மணற்குளம், உயிலங்குளம்.
23. மி. பெர்னடேற், முருங்கன்பிட்டி, முருங்கன்.
24. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
25. ஜெ. விமல்டா ஜெயசீலி, மதியாமடு, புளியங்குளம்.
26. ராஜன் சித்ரா பீரிஸ், எமில்வீதி, தாழ்வுபாடு.
27. செ. டிசாந்தன், மடுமாதா சிறிய குருமடம், மன்னார்.
28. ஞா. தர்சிக்கா, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், முருங்கன்.
29. கு. றொசானி, கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்.
30. ஆர். அகிலா, பாவிலுப்பட்டான்கட்டி குடியிருப்பு.
31. ராஜன் வாசினி, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
32. வி. வின்சன் பற்றிக், 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
33. எஸ். டிறோமி, அச்சங்குளம், நானாட்டான்.
34. இ. சுதர்சினி, மதியாமடு, புளியங்குளம், ஓமந்தை.
35. ஞா. சர்மிளா லக்ஷி, சாம்பன்கட்டைக்காடு, நானாட்டான்.
36. அ. றொணிக்கா குரூஸ், அரிப்பு, சிலாவத்துறை.
37. அ. யோகவதனி, வெளிக்குளம், வவுனியா.
38. அ. நிசாந்தினி, ஓலைத்தொடுவாய், பேசாலை.
39. ச. அனற் மெலோஜினி, மடுக்கரை, நானாட்டான்.
40. ம. கொவின். அக்ஸ்க்கர், பொன்தீவு கண்டல், முருங்கன்.
41. றொ. டிவ்ணன் கூஞ்ஞு, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
42. நொயலர் கிறிஷாந்தி, தி.கு.க.மடம், தலவாக்கலை.
43. அ. மரின்றேமினி, தி.கு.க.மடம், உருத்திரபுரம், கிளிநொச்சி.
44. பி. ஜீன் கொலற்றீசியா, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.
45. க. மேரி அன்ரனிக்கா, 4ம் வட்டாரம், அனலைதீவு.
46. சூ. அன்றூ றெமின்சன், பள்ளங்கோட்டை, நானாட்டான்.
47. வசந்தகுமார் மதுஷன், பிரதான வீதி, நீர்கொழும்பு.
48. ம. செல்வி, லொறிஸ் றோட், பம்பலப்பிட்டி, கொழும்பு - 04.
49. அ. மேரி எக்சிபா, பாடசாலை வீதி, பெரியபண்டிவிரிச்சான்.
50. அ. சுபாஜினி, கனகராயன்குளம் தெற்கு, வவுனியா.

## மனித்தை மனிதமாக மதிக்க மனிதனாக மாறவேண்டுமெனச் சொல்லி
# மனிதனாக வாழ்ந்த மாபெரும் புனிதன்
# இயுஜின் டி மசனெட்

மனிதன் பிறக்கும்போது, தனது இறப்பையும் தன்னகத்தே கொண்டே பிறக்கின்றான். ஒவ்வொரு மனிதனின் இறப்பிலும் ஒரு இரகசியம் உண்டு. அது அவனது வரலாறாக வரையறுக்கப்படுகின்றது. அந்த வரலாற்றுகள் கடந்தகால நிகழ்வுகளாயினும் நிகழ்காலத்திற்கு வழிசொல்லுகின்றன, சவால் விடுகின்றன, இன்னும் பல உண்மைத் தத்துவங்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

திருச்சபையிலே மனித மாண்போடும், மனிதப் பண்புகளோடும் மனிதர்களாக இறுதிவரை வாழ்ந்தவர்கள்தான் இன்று புனிதர்களாக உயர்த்தப்பட்டிருக்கின்றார்கள். இந்தப் பேருண்மையின் அடிப்படையிலேயே எமது அமலமரித்தியாகிகள் சபையின் நிறுவுனரான புனித யூஜின் டி மசனெட்டும் தனித்துவமான இடத்தைச் சுபீகரித்துக்கொண்டார். பிறப்பிலே அவர் உயர் குலத்தவர், கலையிலே மேலானவர், ஒழுக்கத்திலே உத்தமர், ஆளுமையிலே ஆரோக்கியமானவர். ஆனால் அவரது இளமைப் பருவத்தை அன்றைய அரசியல் விட்டுவைக்கவில்லை. பிரஞ்சுப் புரட்சியால் எட்டு வயதில் அவர் புலம்பெயர்ந்தார். குடும்ப உறவு விரிவடைந்து சென்றது. அகதி வாழ்க்கை ஆழப்பதிந்த அனுபவமாக மாறியது. மனிதம் மதிக்கப்படாததை தனது அனுபவத்தில் கண்டார். காலம் வந்தது கடவுளின் குரல்தனைக் கேட்டார். கண்ணியமாய் பதில் கொடுத்தார். திருச்சபையில் 1811ம் ஆண்டில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பலவித வடுக்களோடு வாழ்ந்த மக்களைக் கண்டு திருச்சிலுவையின் கண்ணோட்டத்தில் அவர்களைப் பார்த்தார். அந்த மக்களுக்கு விடுதலை வாழ்வைக் கொடுக்க வேண்டும் என்ற பேராவல் கொண்டு தன்னுடன் சேர்த்து சில சுதேச குருக்களை இணைத்து ஓர் குழுவை ஏற்படுத்தினார். "எளியோர்க்கு நற்செய்தி" என்னும் விருதுவாக்குடன் ஆரம்பிக்கப்பட்ட சிறு குழு சுடர்விட்டு எரியத்தொடங்கி திருச்சபையால் அடையாளம் காணப்பட்டது.

1826 மாசி 17ம் திகதி அது "அமல மரித்தியாகிகள்" என்னும் பெயருடன் வளர்ச்சியடையத் தொடங்கியது. இது ஐரோப்பாவில் நடந்தாலும் இது ஆசியாவையும் விட்டுவைக்கவில்லை. இத்தீச் சுடர் கீழைத்தேய நாடுகளுக்கும் பரவத்தொடங்கியது. இவ்வாறாக திருச்சபையில் மனித இனம் மாண்புபெற தனது குழுவிலிருந்த சில அமலமரித்தியாகிகளை நமது தேசத்திற்கும் அனுப்பிவைத்தார்.

1848ம் ஆண்டு மறைபரப்பாளர்கள் நம் தேசத்திற்கு வந்து சேர்ந்தார்கள். ஆயன் இல்லா ஆடுகள்போல் இருந்த மக்களைக் கண்ட அமலமரித்தியாகிகள் அவர்கள்மேல் பரிவுகொண்டார்கள். உணவு, மொழி, கலை, கலாச்சாரம், காலநிலை யாவும் எதிர்மறையாகவே இருந்தது. ஆனாலும் அவர்கள் மனந்தளரவில்லை. இயேசு ஆண்டவரை தம் வாழ்வில் அனுபவித்ததன் விளைவாக அவரை மற்றவர்களும் அனுபவிக்க வேண்டும் என்ற தாகம் கொண்டு பல இன்னல்கள், இழப்புக்கள் மத்தியிலும் விடாமுயற்சியோடு உழைத்தார்கள். மக்கள் மனிதத்தோடும், மனித மாண்போடும் வாழக் கற்றுக்கொடுத்தார்கள். எமது நாட்டின் வடமாநிலத்தில் பணிசெய்து அமலமரித்தியாகிகள் தங்கள் உள்ளத்தில் தமது நிறுவுனரின் சொற்றொடர்களைத் தாங்கியவண்ணம் எப்போதும் இருந்தார்கள். தூய இ யூஜினின் அணையாத வார்த்தைகள் அவர்களின் உள்ளத்தில் பற்றி எரிந்தவண்ணம் இருந்தன. "முதலில் மனிதர்களாகவும், பின்னர் கிறிஸ்தவர்களாகவும், அதன்பின் எல்லாமாக புனிதர்களாகவும் வாழுங்கள், வாழ முயற்சி செய்யுங்கள்".

இதுதான் நம் நிறுவுனர் தூய இயூஜின் சொல்லும் வார்த்தைகள். இன்று எமது மக்கள் விசுவாசத்தில் வேரூன்றி நிற்கிறார்கள். கிறீஸ்துவுக்கு சாட்சியம் பகர்கின்றார்கள் என்று கூறுவோமேயானால் இது அன்று அந்த அமலமரித்தியாகிகள் விதைத்த விதை என்றே கூறலாம். விசுவாசத்தை விதைத்தது மட்டுமல்லாது தங்களது உடல்களைக்கூட இந்த மண்ணிற்கு வித்தாக விதைத்து வரலாற்று மனிதர்களாகத் திகழ்கின்றார்கள். அன்று அந்த அமலமரித்தியாகிகளின் உள்ளங்களிலே அணையாத தீயை பற்றி எரியச்செய்து அவர்களை எமது தேசத்திற்கு அனுப்பிவைத்து ஆக்கமும், ஊக்கமும், கொடுத்த அந்த பெருமகனை, மாண்புமிகு மனிதனை, மாபெரும் புனிதனை நினைப்பதும், தலைவணங்கி இறைவனுக்கு நன்றி செலுத்துவதும் யாம் செய்யும் நன்றிக் கடனாகும். தூய இயூஜினின் அணையா தீச்சுடரில் பங்கெடுக்கும் ஆர்வமுள்ள தியாகிகள் பலரை நமது மண்ணும் பெற்றெடுத்திருக்கின்றது என்பதையிட்டு நாம் மகிழலாம்.

*அருட்சகோ.அ.விமலநாதன் அமதி., கொழும்புத்துறை.*

# வாழ்வும் வழிபாடும்... *(15ம் பக்.தொடர்...)*

(15ம் பக்.தொடர்...)

### வழிபாட்டு ஆணைக்குழுக்கள்

வத்திக்கான் சங்கத்தின் மறுமலர்ச்சியை மக்கள் மத்தியில் சரியான முறையில் தெரிவித்து மாற்றங்களைப் புகுத்துவதற்கே நாட்கள் பல கடந்தன. எந்தவொரு மாற்றத்தையும் நீண்ட பயிற்சிக்குப் பின்னரே அறிமுகப்படுத்த வேண்டும்.

தாய் மொழியில் வழிபாடு, மக்கள் அனைவரும் பங்கேற்கும் வழிபாடு, அடையாளங்களைக் கொண்டு வழிபாடு, இறை வார்த்தைக்குப் பதில் தரும் வழிபாடு என்று புதிய நோக்கில் வழிபாட்டை மக்கள் மத்தியில் புகுத்துவது வத்திக்கான் சங்கத்திற்குப்பின் நடந்த புரட்சிச் செயல் என்றே சொல்ல வேண்டும். 1970ஆம் ஆண்டு புதிய திருப்பலிப் புத்தகம் வந்தது. தொடர்ச்சியாக எல்லா அருளடையாளங்கள் பற்றிய அதிகாரப்பூர்வமான சடங்கு நூல்கள் வெளிவந்தன. பண்பாட்டு மயமாக்குதல் போன்ற பல்வேறு திருமடல்கள் தொடர்ந்து வந்தன. திருவழிபாட்டு மறுமலர்ச்சியைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் மக்கள் தவறுகள் செய்யும் நேரங்களில் திருவழிபாட்டின் உண்மையான இயல்புகளை விளக்கி மடல்கள் எழுத வேண்டிய தேவை திருச்சபைக்கு ஏற்பட்டது. அதன் விளைவே அண்மையில் ஏற்பட்ட புதிய ஆவணங்கள்.

உரோமை வழிபாட்டு முறையின் இயல்பே இன்று மாறிவிட்ட நிலையைக் காண்கின்றோம். உரோமையிலிருந்து பொதுவான சில விதிமுறைகளும் வழிகாட்டுதல்களும் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றைக் குறிப்பிட்ட சூழலில் மக்களின் தேவைக்கு ஏற்ப செயல்படுத்துகின்ற பணியை அந்தந்த நாடுகளில் உள்ள ஆயர்கள் குழுவிற்கும், தல ஆயர்களுக்கும் திருச்சபைக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டன. தல ஆயரே வழிபாட்டிற்கு முழுப் பொறுப்பு வகிக்கும் பணியைச் செய்கிறார். ஆயரின் தலைமையில் இயங்கும் வழிபாட்டு ஆணைக்குழு மறைமாவட்டத்தின் தேவைக்கு ஏற்ப வழிபாட்டை வழிநடத்துகிறது. உரோமை வழிபாட்டுமுறை என்றாலும் அதைக் குறிப்பிட்ட பண்பாட்டின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கும் உரிமையைத் தலத்திருச்சபைகள் பெற்றிருப்பது கத்தோலிக்கத் திருச்சபையின் தனிப்பெரும் பெருமை என்றே சொல்லாம். *(தொடர்ந்து வழிபடுவோம்...)*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி
## 72 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கா[1] | ல் | கோ | ள் | க | ன் | மீ | ண் | வி[2] | லே | து |
| ல | லா | ந[3] | ம் | பி | க் | கை | ✱ | ல | மே | த் |
| த் | ழ | ✱ | று | ன் | னி | யி | வா[4] | ங் | ண் | டி |
| தி | நி[5] | ற் | க[6] | ண் | க | ளே | ழ் | கு | ம[7] | க |
| ல் | யி | சை | ஓ[8] | ✱ | து | ர் | ந் | தே[9] | றை | ற |
| நே[10] | ர் | மை | யா | க | கு[11] | டி | து | ப | ப் | ச[12] |
| ர் | மு | உ[13] | றோ | ன் | ர | வ | அ[14] | ✱ | ப | ட் |
| ய | ன | ம் | ✱ | னை | லை | ய | செ[15] | யை | வ | ஆ[16] |
| கை[17] | ம் | மா | று | ற | ன | ✱ | வா[18] | னி | ன் | ளு |
| ங் | ஞா[19] | ல் | ✱ | தி[20] | ன் | ம் | சு | ப[21] | ✱ | ந |
| ந[22] | ன் | மை | ர | ளி | மி[23] | ம் | யு | தி | ந[24] | னை |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.73 ற்கான முடிவுகளை 2008ம் ஆண்டு ஜூலை மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

"ஆண்டவரே என் தலைவரே! உமது பெயர் எவ்வளவு மேன்மையாய் விளங்குகிறது" (தி.பா. 8:1)

# மன்னா











## சென். ஜோசப் மாணவர் இல்லக் கட்டிடத் திறப்பு விழா

மன்னார் ஆஸ்பத்திரி வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சென். ஜோசப் மாணவர் இல்லக் கட்டிடத் திறப்பு விழா கடந்த மே மாதம் 01ம் திகதி இடம்பெற்றது. மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இப்புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார். மாணவர் இல்லத்தின் இயக்குனர் அருட்பணியாளர் நோபட் அவர்கள் தலைமையில் திறப்புவிழா நிகழ்வுகள் அனைத்தும் நடந்தேறின.

2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் மன்னாரில் உள்ள மறைமாவட்டத்திற்குச் சொந்தமான வீடு ஒன்றில் 21 மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த இல்லத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்பட்டிருந்தனர். அப்போது இது "சுனாமி கொஸ்ரல்" என அழைக்கப்பட்டது. தொடக்கத்தில் இந்த மாணவர் இல்லத்திற்கு அருட்பணியாளர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களே பொறுப்பாக இருந்தார். அவருடைய பொறுப்பில் அருட்பணியாளர் ஜிம்பிறவுன் அவர்கள் நேரடிக் கண்காணிப்பாளராகச் செயற்பட்டார். தொடர்ந்து செல்வி. ஏ. நிலானி மற்றும் திரு. பற்றிக் டயஸ், அருட்பணி. நெவின்ஸ், திரு. எஸ். ஜெயசீலன் ஆகியோர் இந்த இல்லத்தின் காப்பாளர்களாகப் பணிபுரிந்தனர்.

தற்போது புதிய கட்டிடம் திறக்கப்பட்ட நிலையில் இந்த மாணவர் இல்லம் புதிய கட்டிடத்திற்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.


## திருமண வாழ்வில் வெள்ளிவிழா நிறைவு!



11.06.1983 - 11.06.2008

திரு. ச. அந்தோனிப்பிள்ளை
திருமதி. அ. சகாயநாயகி
(ஆவணம், நானாட்டான்)

நல்லறமாம் இல்லறத்தில் நல்லுறவு கொள்வதற்கு
நலமுடனே இணைந்த எம் நயம் மிக்க பெற்றோரே!
நாளிலம் மகிழவும், நன்மைகள் பெருகவும்
நாளும் பொழுதும் நற்சிந்தை கொண்டீரே!



ஈரிரண்டு பிள்ளைகளை இனிதாய் ஈன்றெடுத்து
இறையருள் வாழ்வில் இனிமை காணச்செய்தீர்!
இறையன்பில் நிலைத்து இணைபிரியாதிருக்க
இறையருள் ஆசீரை இனிதாய் வேண்டுகின்றோம்!

இறையாசீர் வேண்டி இனிதாய் வாழ்த்தும் அன்புப் பிள்ளைகள்:
ஜஸ்மின் ஷறோன், டெஸ்மன் வெற்றிராஜ், ஜெறின் வெண்ணிலா,
வேனின் நிலானி,


## மன்னா உங்கள் வாசற் படியைத்

தட்டுகிறது... தட்டுகிறது... தட்டுகிறது...!

மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

### மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளைத் தெளிவாக எழுதி சந்தாப்பணத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் உறவினர், நண்பரின் வீடுதேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 600ஐயும், வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 2500ஐயும் அனுப்பவும். சந்தாப் பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம். காசோலை மூலம் அனுப்புவதாயின்
வங்கியின் பெயர்: Hatton National Bank Ltd., Mannar. பணம் பெறுபவர் பெயர்: The Editor - MANNA
வங்கிக் கணக்கு இலக்கம்: S/A No.02-1678001-5 என்று குறிப்பிடவும்.

உங்கள் ஆன்மீகப் பசிக்கு உணவாக - உங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் வகையில் மன்னா இன்னும் புதிய அம்சங்களுடனும், புதுமெருகுடனும் தொடர்ந்து வெளிவரும்.



அனைத்துத் தொடர்புகளுக்கும்




பதிப்பாசிரியர், 'மன்னா'
புனித வளன் மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார்.

The Editor, 'MANNA'
St. Joseph's Catechetical Centre,
St. Sebestian's Cathedral Street
Mannar, Sri Lanka.

தொலைபேசி இல. 023 - 2222377/ 060 - 2233276


# நீங்காத நினைவுகள்

## 3ம் நாள் நினைவு




மலர்வு 09 . 02 . 1929

உதிர்வு 15 . 04 . 2008

### இராசலிங்கம் குமாரசிங்கம்

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

உடலால் எம்மைப் பிரிந்தாலும்
உள்ளத்தாலும், உணர்வுகளாலும்
என்றுமே எம்முடன் வாழ்கிறீர்கள்.
கண்களில் கண்ணீர் முத்துக்களுடன்
கலங்கி நிற்கின்றோம்.



இவரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## நினைவஞ்சலி

### 31ம் நாள் நினைவு



மலர்வு 08 . 04 . 1916

உதிர்வு 18 . 04 . 2008

கொ. திருச்செல்வம் வாஸ்

அருமை ஐயாவே!
ஆற்றல் அறிவுடன் அனுபவத்தில்
ஆண்டவன் துணையுடன்
அவனியில் வாழ்ந்தீர்கள்.
அகவை 92 மட்டும்
ஆண்டவன் அன்பில்
நிலைத்து நின்றீர்கள்.
நற்கருணைப் பக்தியில்
நாளும் பொழுதும் திளைத்தீர்கள்
நல்ல தேவன் உயிர்நீத்த
நன்னாளிலேயே நீங்களும்
நாதன் சேவடி சென்றீர்களோ!

### 6ம் மாத நினைவு



மலர்வு 16 . 05 . 1920

உதிர்வு 24 . 11 . 2007

தி. குளோறியா டலிமா
(இளைப்பாறிய ஆசிரியை)

அமைதியின் வடிவமான அம்மா!
அன்பின் சிகரமே!
அறிவின் அமுதமே அம்மா
வையகத்தில் எம்மை
வாழ்வாங்கு வாழ வைத்துவிட்டு
வல்லபரன் தாயிடம்
உரையாடச் சென்றீர்களோ?
மாதாவின் பக்தியில் வாழ்ந்தீர்களே
மரியாயின் சேனையின் மங்காத்
தலைவியாகப் புகழ் பூத்தீர்களே
மரியன்னையின் நாளிலேயே
மரித்து மறுஉலகு சென்றீர்களே...

கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செய்கின்றோம்
உங்கள் ஆன்மா அமைதியில் இளைப்பாற வேண்டுகின்றோம்

இவரின் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், வங்காலை - 05

தகவல் :- திருமதி. ஏ. ஆபிரகாம் சோசை


## நினைவஞ்சலி

### 9ம் ஆண்டு



மலர்வு : 22.05.1936
உதிர்வு : 02.02.1999

ஐ. வெற்றிவேலு
(வரப்பிரகாசம்)



### 1ம் ஆண்டு



மலர்வு : 22.05.1946
உதிர்வு : 28.06.2007

வ. ஞானரெத்தினம்
(தங்கம்)

நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம், கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்
(யோவான் 14:1)

அம்மாவென்று அழைக்கின்றோம் மறந்து அதன்பின்தான்
நினைக்கின்றோம் உம்பிரிவை - சும்மாதானே இருந்தாய் எம்முடன்
பூமி சுமையென நினைத்து சென்றாயே அவ்விடம்.

நீங்கள் நடந்த பாதையெல்லாம் நிழல்போல தோன்றுதையா
பார்க்கின்ற இடமெல்லாம் உம் பாச முகம் தெரியுதையா
ஆண்டுபல ஓடிமறைந்தாலும் உங்கள் அன்புமுகம் மறக்கவில்லை
வேண்டுமென்றே காலன் உம்மை விண்ணுலகம் அழைத்தனனோ?

காலமெல்லாம் உங்களுக்காக கடவுளிடம் வேண்டுகின்றோம்
வானமதில் நீருறைய வள்ளல் அருள் தந்திடுவார்...

இவரின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.


இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784/1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது